



# தமிழ்நாடு இபேப்பர்.காம்

www. tamilnaduepaper.com







CHENNAI Volume- 3 Issue:237 13-03-2026 வெள்ளிக்கிழமை Free E- Paper

● சென்னை ● மதுரை ● கோவை ● திருச்சி


## இன்றைய பஞ்சாங்கம்

13.03.2026 மாசி 29
வெள்ளிக்கிழமை

சூரிய உதயம் 6.23

திதி:
இன்று காலை 5.56 வரை நவமி பின்பு தசமி .

நட்சத்திரம்:
இன்று அதிகாலை 12.12 வரை மூலம் பின்பு பூராடம்

யோகம் :
இன்று காலை 9.54 வரை வ்யாதீபாதம் பின்பு வரீயான்.

கரணம்
இன்று காலை 5.56 வரை கரசை பின்பு மாலை 6.34 வரை வணிசை பின்பு பத்திரை.

அமிர்தாதி யோகம் :
இன்று முழுவதும் சித்த யோகம்.

சந்திராஷ்டமம் :
இன்று அதிகாலை 12.12 வரை கார்த்திகை பின்பு ரோகிணி.

நல்ல நேரம்
காலை 9.30 – 10.30.
மாலை 4.30 – 5.30


இராகு காலம்
காலை 10.30 – 12.00.

எமகண்டம்
பிற்பகல் 3.00 – 4.30.

குளிகை
காலை 7.30 – 9.00

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
இராமமூர்த்தி
செல்: 8189908040

# ஹோர்முஸ் நீரிணையைக் கடந்து இந்தியா வந்த முதல் எண்ணெய்க் கப்பல்!



**மும்பை, மார்ச் 13:** ஈரான் போர் தொடங்கிய பிறகு முதல்முறையாக சௌதி அரேபியாவில் இருந்து மும்பை துறைமுகத்துக்கு எண்ணெய்க் கப்பல் வந்தடைந்துள்ளது.

ஈரான் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தியதைத் தொடர்ந்து, பாரசீக வளைகுடாவை அரபிக் கடலுடன் இணைக்கும் ஹோர்முஸ் நீரிணையை மூடுவதாகவும், தடையை மீறிச் செல்லும் எண்ணெய்க் கப்பல்கள் தாக்கி அழிக்கப்படும் என்றும் ஈரான் எச்சரிக்கை விடுத்திருந்தது.

இந்த நிலையில், இந்திய கேப்டன் தலைமையிலான குழு இயக்கிய லைபீரிய நாட்டுக் கொடி கொண்ட எண்ணெய்க் கப்பல் மும்பை துறைமுகத்துக்கு நேற்று வந்தடைந்தது.

சௌதி அரேபியாவின் ராஸ் தனுரா துறைமுகத்தில் கடந்த மார்ச் 1 ஆம் தேதி ஷென்லாங் சூயஸ்மாக்ஸ் என்ற சரக்கு கப்பல் கச்சா எண்ணெய்யை ஏற்றியுள்ளது. இரண்டு நாள்களுக்குப் பின்னர் மும்பை நோக்கிப் பயணத்தை தொடங்கியுள்ளது.

இந்த கப்பல் ஹோர்முஸ் நீரிணையைக் கடந்த இரண்டு நாள்களுக்கு முன்னதாக பாதுகாப்பாக கடந்து புதன்கிழமை மும்பை துறைமுகத்துக்கு வந்துசேர்ந்துள்ளது.

இந்த கப்பலில் 1,35,335 மெட்ரிக் டன் கச்சா எண்ணெய் வந்துள்ளது. கிழக்கு மும்பை, மஹுலில் உள்ள சுத்திகரிப்பு நிலையங்களுக்கு கச்சா எண்ணெய் எடுத்துச் செல்லப்படவுள்ளன. கேப்டன் சுக்ஷாந்த் சிங் சந்து தலைமையில் 29 இந்திய, பாகிஸ்தான் மற்றும் பிலிப்பைன்ஸ் நாடுகளைச் சேர்ந்த மலுமிகள் வந்துள்ளனர்.

ஈரானின் ஏவுகணைத் தாக்குதல் அச்சுறுத்தல் மிகுந்த ஹோர்முஸ் நீரிணையைக் கடக்கும்போது, கப்பலின் சமிக்ஞை, டிரான்ஸ்பாண்டர்கள் போன்ற தொழில்நுட்ப சாதனங்களை கப்பல் பணியாளர்கள் அணைத்துவிட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

மார்ச் 8 ஆம் தேதி அணைக்கப்பட்ட ரேடார் உள்ளிட்ட கருவிகள், ஹோர்முஸ் நீரிணையைப் பாதுகாப்பாக கடந்த பிறகு, மார்ச் 10 ஆம் தேதிதான் மீண்டும் ஆன் செய்யப்பட்டுள்ளன.

இதனிடையே, கடந்த மார்ச் 10, செவ்வாய்க்கிழமை ஈரான் வெளியுறவுத் துறை அமைச்சருடன் இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் பேசியதை தொடர்ந்து, புஷ்பக் மற்றும் பரிமல் ஆகிய இந்திய எண்ணெய்க் கப்பல்களுக்கு ஈரான் அனுமதித்ததாக செய்திகள் வெளியாகின.

ஆனால், இந்த செய்தி உண்மையல்ல என்று என்டிடிவி செய்தி நிறுவனத்துக்கு ஈரான் அதிகாரிகள் விளக்கம் அளித்துள்ளனர்.

முன்னதாக, துபையிலிருந்து குஜராத் துறைமுகம் நோக்கி வந்துகொண்டிருந்த தாய்லாந்து எண்ணெய்க் கப்பல் மற்றும் பிரிட்டன், ஜப்பான் நாடுகளைச் சேர்ந்த கப்பல்கள் மீது ஈரான் ஏவுகணைத் தாக்குதல் நடத்தியது. இதில், 2 இந்திய மலுமிகள் கொல்லப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## ஈரான் அதிபருடன் பிரதமர் மோடி தொலைபேசியில் பேச்சு



ஈரான்மீது அமெரிக்கா-இஸ்ரேல் இணைந்து தொடுத்துள்ள போர் தீவிரமடைந்து வருகிறது. இதனால் உலகளவில் கச்சா எண்ணெய் விலை உயர்வு, எரிவாயு தட்டுப்பாடு சூழல் ஏற்பட்டுள்ளது. உலக நாடுகளுக்கு கச்சா எண்ணெய் போக்குவரத்துக்கு முக்கிய வழித்தடமாக விளங்கும் ஹார்முஸ் ஜலசந்தியை கடந்து ஒரு லிட்டர் எண்ணெய் கூட வெளியேறாது என ஈரான் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்நிலையில், பிரதமர் மோடி ஈரான் அதிபர் மசூத் பெசஸ்கியனுடன் தொலைபேசியில் பேசினார்.

அப்போது, ஈரானில் அதிகரித்து வரும் பதட்டங்கள், பொதுமக்களின் உயிரிழப்பு, பொதுமக்களின் உள்கட்டமைப்புக்கு ஏற்பட்ட சேதம் குறித்து ஆழ்ந்த கவலை தெரிவித்தார்.

இந்திய குடிமக்களின் பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பை உறுதி செய்வதுடன், பொருட்கள் மற்றும் எரிசக்தியின் தடையற்ற போக்குவரத்தை எளிதாக்குவதும் இந்தியாவின் முதன்மையான முன்னுரிமையாக உள்ளது என பிரதமர் மோடி வலியுறுத்தினார்.

அமைதி மற்றும் ஸ்திரத்தன்மைக்கான இந்தியாவின் உறுதிப்பாட்டையும் உறுதிப்படுத்தினார்.

# எரிபொருள் தட்டுப்பாடு அச்சம் வேண்டாம்: முதல்வர் ஸ்டாலின் வேண்டுகோள்



**சென்னை, மார்ச் 13:** "போதுமான எரிபொருள் கையிருப்பில் உள்ளதாக ஒன்றிய அரசின் சார்பில் தெரிவிக்கப்பட்டு வரும் நிலையில், பொதுமக்கள் யாரும் அச்சப்படவோ, பதற்றம் கொள்ளவோ வேண்டாம் எனக் கேட்டுக் கொள்கிறேன்" என தமிழக முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், "மேற்காசியப் போர்ச்சூழல் காரணமாக, தற்போது ஏற்பட்டிருக்கும் நெருக்கடிகளை எதிர்கொள்ள, இரண்டு நாட்களுக்கு முன்பு உயர்மட்ட ஆலோசனை மேற்கொண்டதோடு, சமையல் எரிவாயு சிலிண்டர் தட்டுப்பாடு - பெட்ரோல் - டீசல் உள்ளிட்ட எரிபொருள் விநியோகம் குறித்து பிரதமருக்கும், தொடர்புடைய ஒன்றிய அமைச்சர்களுக்கும் கடிதம் எழுதியுள்ளேன்.

உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் சக்கரபாணி தலைமையில், எரிவாயு தட்டுப்பாட்டை எதிர்கொள்வது குறித்த ஆலோசனைக் கூட்டமும் நேற்று நடைபெற்றுள்ளது. இவ்விவகாரத்தில் ஒன்றிய அரசு மேலும் தீவிரமாகக் கவனம் செலுத்திட நாடாளுமன்ற வளாகத்திலும் எதிர்க்கட்சியினர் ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளோம்.

போதுமான எரிபொருள் கையிருப்பில் உள்ளதாக ஒன்றிய அரசின் சார்பில் தெரிவிக்கப்பட்டு வரும் நிலையில், பொதுமக்கள் யாரும் அச்சப்படவோ பதற்றம் கொள்ளவோ வேண்டாம் எனக் கேட்டுக் கொள்கிறேன். இந்நேரத்தில் ஒன்றிய அரசு மேற்கொண்டு வரும் முயற்சிகளுக்குத் துணை நின்று மேற்காசியப் போர்ச்சூழலை எதிர்கொள்வோம்" எனத் தெரிவித்துள்ளார்.

# தலைமைத் தேர்தல் ஆணையரை நீக்கும் தீர்மானத்தில் 200 எம்பிக்கள் கையெழுத்து!

**புது டில்லி, மார்ச் 13:** தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமாரைப் பதவியில் இருந்து நீக்கும் தீர்மானத்தில் 200 எம்பிக்கள் கையெழுத்திட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

தலைமைத் தேர்தல் ஆணையரை நீக்கும் தீர்மானத்தை நாளை (மார்ச் 13) மக்களவை அல்லது மாநிலங்களவையில் எதிர்க்கட்சியினர் சமர்ப்பிக்க உள்ளனர்.

விதிகளின் படி மக்களவையில் 100 எம்பிக்கள், மாநிலங்களவையில் 50 எம்பிக்களும் தீர்மானத்தில் கையெழுத்திட்டால் அதனை முன்மொழியலாம் என்ற நிலையில் குறிப்பிட்ட எண்ணிக்கைக்கும் மேலாக எம்பிக்கள் ஆர்வத்துடன் கையெழுத்திடுவதாக எதிர்க்கட்சி தலைவர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்தத் தீர்மானத்தில் இந்தியா கூட்டணிக் கட்சி உறுப்பினர்கள் அனைவரும் கையெழுத்திட்டதாகவும், இந்தியா கூட்டணியில் இல்லாத ஆம் ஆத்மி கட்சி எம்பிக்களும் இதில் பங்கெடுத்துள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தலைமைத் தேர்தல் ஆணையரை பதவியில் இருந்து நீக்கும் தீர்மானத்தை முன்மொழிவது இதுவே முதல்முறையாகும்.

# தென் தமிழகத்தில் மார்ச் 18 வரை மழைக்கு வாய்ப்பு!



**சென்னை, மார்ச் 13:** தென்தமிழக கடலோர மாவட்டங்களில் மார்ச் 18 வரை மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

குமரிக்கடல் மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது.

மார்ச் 12 முதல் 16 வரை தென்தமிழக கடலோர மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும். ஏனைய தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும்.

மார்ச் 17, 18 ஆகிய தேதிகளில் மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும் அதனை ஒட்டிய மாவட்டங்களில் ஒருசில இடங்களில் லேசானது முதல் மிதமான மழையும்,

தென்தமிழக கடலோர மாவட்டங்கள் மற்றும் டெல்டா மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும், காரைக்கால் பகுதிகளிலும் லேசான மழை பெய்யக்கூடும். ஏனைய தமிழகம், புதுவையில் வறண்ட வானிலை நிலவக்கூடும்.

அதிகபட்ச வெப்பநிலை

12-03-2026 முதல் 15-03-2026 வரை: தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 1-2° செல்சியஸ் வரை படிப்படியாக உயரக்கூடும்.

# தமிழக ஆளுநர் பொறுப்பேற்றார் ராஜேந்திர ஆர்லேகர்!




**சென்னை, மார்ச் 13:** ஆளுநர் ஆர். என். ரவி மாற்றப்பட்டதைத் தொடர்ந்து கேரள ஆளுநர் ஆர். வி. ஆர்லேகர் தமிழக ஆளுநர் பொறுப்பை கூடுதலாக கவனிக்கவுள்ளார்.

இதற்கான பதவியேற்பு விழா ஆளுநர் மாளிகையில் இன்று நடைபெற்றது. ஆர்லேகருக்கு சென்னை உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி எஸ். ஏ. தர்மாதிகாரி பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

இந்த நிகழ்வில் முதல்வர் ஸ்டாலின், தமிழக அமைச்சர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர். தமிழக ஆளுநராக இருந்த ஆர். என். ரவி, மேற்குவங்க ஆளுநராக நியமிக்கப்பட்டதையடுத்து சென்னையிலிருந்து விமானத்தில் தில்லி வழியாக கொல்கத்தாவுக்கு புதன்கிழமை புறப்பட்டுச் சென்றார். இந்த நிலையில், மேற்கு வங்கத்தின் புதிய ஆளுநராக தமிழகத்தின் முன்னாள் ஆளுநர் ஆர்.என்.ரவி வியாழக்கிழமை (மார்ச் 12) பதவியேற்றுக் கொண்டார்.

# ஜன நாயகன் ஒப்பந்தம் ரத்து? ரூ. 120 கோடி திருப்பிக் கேட்கும் ஓடிடி நிறுவனம்!!



**புதுடில்லி, மார்ச் 13:** ஜன நாயகன் திரைப்படத்தின் ஓடிடி உரிமம் ஒப்பந்தத்தை பிரபல ஓடிடி நிறுவனம் ரத்து செய்யவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

எச். வினோத் இயக்கத்தில் உருவாகியுள்ள நடிகர் விஜய்யின் கடைசிப் படமான ஜன நாயகன், வெளியாவதில் தொடர்ந்து தாமதம் ஏற்பட்டு வருகின்றது.

உலகம் முழுவதும் ஜனவரி 9 ஆம் தேதி ஜன நாயகன் திரைப்படம் வெளியாகும் என்று அறிவிக்கப்பட்டிருந்த சூழலில், தணிக்கை வாரியத்தின் சான்றிதழ் கிடைக்காததால் கடைசி நேரத்தில் வெளியீடு நிறுத்திவைக்கப்பட்டது.

உச்ச நீதிமன்றம், சென்னை உயர் நீதிமன்றம் எனப் படத்தின் சான்றிதழுக்காக அலைந்த படக்குழு, இறுதியில் வழக்கை திரும்பப் பெற்று மறுதணிக்கைக்கு படத்தை அனுப்பிவைத்தது.

தற்போது மறுதணிக்கை குழுவினர் படத்தை பார்த்து சான்று அளிக்காமல் தாமதப்படுத்தி வரும் சூழலில், எப்போது வேண்டுமானாலும் தேர்தல் தேதி அறிவிக்கப்படலாம் என்ற நிலை ஏற்பட்டுள்ளது.

நடிகர் விஜய்யின் தமிழக வெற்றிக் கழகம் தேர்தலில் போட்டியிடவுள்ளதால், பிரசாரப் படமாக கருதி, ஜன நாயகன் திரைப்படத்துக்கு இந்திய தேர்தல் ஆணையம் அனுமதி மறுக்கும். இந்த நிலையில், தேர்தல் நிறைவடைந்த பின்னர், மே அல்லது ஜூன் மாதத்தில்தான் ஜன நாயகன் திரைப்படம் வெளியாகும் என்ற சூழல் நிலவுகிறது.

இந்த படத்துக்காக கேவிஎன் தயாரிப்பு நிறுவனம் ரூ. 500 கோடி வரை செலவு செய்துள்ளதாக தெரிவித்துள்ளது. திட்டமிட்ட தேதியில் இருந்து 5 மாதங்கள் கழித்தே படம் வெளியாகும் என்பதால் தயாரிப்பு நிறுவனம் பெருமளவிலான இழப்பீட்டை சந்திக்க நேரிடும்.

இந்த நிலையில், படத்தின் ஓடிடி உரிமைத் தொகையை ரூ. 120 கோடிக்கு வாங்கியுள்ளதாக கூறப்படும் அமேசான் ப்ரைம் நிறுவனம், ஒப்பந்தத்தை ரத்து செய்யும் முடிவுக்கு வந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும், படத்தின் விநியோகஸ்தர்களும் தயாரிப்பு நிறுவனத்துக்கு நெருக்கடி கொடுத்து வருவதாக கூறப்படுகிறது. எனினும், தயாரிப்பு நிறுவனம் அல்லது ஓடிடி நிறுவனத்திடம் இருந்து அதிகாரப்பூர்வ அறிவிப்பு எதுவும் வெளியாகவில்லை.







# திருக்குறள் குறள்-557

துளியின்மை ஞாலத்திற் கெற்றற்றே வேந்தன்
அளியின்மை வாழும் உயிர்க்கு



மழைத்துளி இல்லாதிருத்தல் உலகத்திற்கு எத்தன்மையானதோ, அத்தன்மையானது நாட்டில் வாழும் குடிமக்களுக்கு அரசனுடைய அருள் இல்லாத ஆட்சி.

## சிந்திக்க ஒரு நொடி



அன்பு தரும்
உறவை மனதில்
வை....
அனுபவம்
தரும் உறவை
நினைவில் வை....

உஷா முத்துராமன்

## மாசி மாதம் தேய்பிறை அஷ்டமி சிறப்பு வழிபாடு

திருவண்ணாமலை, மார்ச் 13:

திருவண்ணாமலை மாவட்டம் கீழ்பென் னாத்தூர் ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத்தில் அமைந்திருக்கும் ஸ்ரீ கால பைரவருக்கு மாசி மாதம் தேய்பிறை அஷ்டமியை முன்னிட்டு சிறப்பு அபிஷேகங்கள் பால், தயிர், இளநீர், பன்னீர், சந்தனம், தேன், பஞ்சாமிர்தம், வெட்டிவேர் வாசனை திரவியங்களால் அபிஷேகங்கள், வண்ண மலர் மாலைகளால், வடை மாலையுடன், வேத மந்திரங்கள் ஒலிக்க, பாட்டுகள் பாடி, பிரசாதம், நெய்வேத்தியங்களுடன், மகா தீபாராதனையும் நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் ஸ்ரீ கால பைரவரை வேண்டி அருள் பெற்றனர். அனைவருக்கும் பிரசாதங்களும் வழங்கப்பட்டது. தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை



## மஹா வாராஹி அம்மன் சிறப்பு பூஜைகள்..!



வந்தவாசி, மார்ச் 13:

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி காஞ்சிபுரம் வெண்குன்றம் சாலை லிங்கம் பகுதியில் அமைந்துள்ள ஸ்ரீ மகா வாராஹி அம்மன் கோவிலில் அம்மனுக்கு பால், தயிர், சந்தனம், உள்ளிட்ட வாசனை திரவியங்கள் கொண்டு விசேஷ திருமுஞ்சனம் நடைபெற்றது. இந்த நிகழ்வில் சுற்றியுள்ள பகுதிகளில் இருந்து திரளான பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர். ஸ்ரீஹரி சுவாமிகள் பூஜை முறைகளை மேற்கொண்டார். பா. சீனிவாசன், வந்தவாசி.

## வந்தை முன்னேற்ற சங்கம் சார்பில் உலக மகளிர் தின விழா..!




வந்தவாசி, மார்ச் 13:

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி வந்தை முன்னேற்ற சங்கம் சார்பில் நடைபெற்ற உலக மகளிர் தின விழாவில் பல் துறை மகளிருக்கு சாதனைப் பெண்மணி விருது வழங்கப்பட்டது. இந்த நிகழ்விற்கு சங்கத் தலைவர் டாக்டர் வந்தை பிரேம் தலைமை தாங்கினார். மேலும் சங்கச் செயலாளர், பொருளாளர் உள்ளிட்ட நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் பங்கேற்று பேசினர். இதில் பெண்களின் இன்றைய நிலைப்பாடும்; அன்றைய நிலைப்பாடும் என்ற தலைப்பில் கருத்துரைகள் வழங்கப்பட்டது. பா. சீனிவாசன், வந்தவாசி.

# தூய்மை இயக்கம் விழிப்புணர்வு



பென்னாகரம், மார்ச் 13:

பென்னாகரம் ஒன்றியம் செங்கனூர் ஊராட்சிக்கு உட்பட்ட சின்னப்பள்ளத்தூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை இயக்கம் மூலமாக மாவட்ட ஆட்சியர் அவர்களின் உத்தரவுப்படி தூய்மை இயக்கம் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு தலைமை ஆசிரியர் மா. பழனி தலைமை தாங்கினார். தர்மபுரி மாவட்ட பசுமை தோழி கலைவாணி பிரியா அவர்கள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு விழிப்புணர்வு பேரணியை தொடங்கி வைத்து பேசும்போது காலநிலை மாற்றத்திற்கான காரணங்கள், சுற்றுச்சூழல் பாதுகாப்பதில் மாணவர்கள் மற்றும் பொதுமக்களின் பங்கு, நம்மை சுற்றி இருக்கும் இடங்களை தூய்மையாக வைத்துக் கொள்வதின் அவசியம் மற்றும் பூமியை பசுமையாக்குவதில் அனைவருக்குமான பொறுப்பு என்ன என்பது பற்றி பேசினார்.

தலைமையாசிரியர் பேசும்போது மாணவர்கள் ஒவ்வொருவரும் மரக்கன்றுகளை நட்டு பராமரித்து வருவதையும் பள்ளி வளாகம் மற்றும் சுற்றுப்புறம் தூய்மையாக வைத்துக் கொள்வதில் மாணவர்கள் சிறப்பாக செயல்படுவதற்கு பாராட்டு தெரிவித்தார். பள்ளியை சுற்றியுள்ள இடங்களில் இருக்கும் குப்பைகளை தூய்மைப்படுத்தி விழிப்புணர்வை உண்டாக்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் ஊர் பொதுமக்கள் பள்ளி மாணவர்கள் ஆசிரியர்கள் வளர்மதி, பழனிச்செல்வி, கல்பனா, கலைச்செல்வி, ராஜேஸ்வரி உட்பட பெற்றோர்கள் திரளாக கலந்து கொண்டார்கள்.

# மாசி மாதம் தேய்பிறை அஷ்டமி வழிபாடு



கடலூர், மார்ச் 13:

கடலூர் மாவட்டம் மேல் புவனகிரி மீனாட்சி உடனுறை வேதபுரீஸ்வரர் ஆலயத்தில் அமைந்திருக்கும் ஸ்ரீ கால பைரவருக்கு மாசி மாதம் தேய்பிறை அஷ்டமியை முன்னிட்டு சிறப்பு அபிஷேகங்கள் பால், தயிர், இளநீர், பன்னீர், சந்தனம், தேன், பஞ்சாமிர்தம், வெட்டிவேர் வாசனை திரவியங்களால் சிறப்பு அபிஷேகங்கள் வண்ண மலர் மாலைகளால் அலங்கரித்து, வடை மாலையுடன், வேத மந்திரங்கள் ஒலிக்க, பாட்டுகள் பாடி, பிரசாதம், நெய்வேத்தியங்களுடன், மகா தீபாராதனையும் நடைபெற்றது.

ஏராளமான பக்தர்கள் ஸ்ரீகால பைரவரை வேண்டி அருள் பெற்றனர். அனைவருக்கும் பிரசாதங்களும் வழங்கப்பட்டது.

தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

# மண்டல பூஜையில் நம் வாசவி அம்மன் சிறப்பு அலங்காரத்தில்







தர்மபுரி , மார்ச்13:

தர்மபுரி மாவட்டம் பாலக்கோடு ஸ்ரீவாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் ஆலயத்தில் கும்பாபிஷேகத்தை முன்னிட்டு மண்டல அபிஷேகத்தில் 18 -ஆம் நாள் சிறப்பு அபிஷேகங்கள், வண்ணமலர் மாலைகளால் அலங்காரங்கள், முத்தங்கி அலங்காரத்துடன், பிரசாதம், நெய்வேத்தியங்களுடன், வேத மந்திரங்கள் ஒலிக்க, பாட்டுக்கள் பாடி மகா தீபாராதனையும் நடைபெற்றது.

ஏராளமான ஆர்ய வைஸ்ய ஆண்கள், பெண்கள் அனைவரும் பூஜைகள் கலந்து கொண்டு வாசவி அம்மனை வேண்டி அருள் பெற்றனர் அனைவருக்கும் பிரசாதங்கள் வழங்கப்பட்டது. உபயதாரர் : R. மலர்ரோஜா ராமமூர்த்தி & சன் குடும்பத்தினர், பாலக்கோடு.

தமிழ்நாடு செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை.

# புதிய நியாய விலை கடை திறப்பு விழா





திருவண்ணாமலை, மார்ச் 13:

சகாய நகர் வார்டு எண்-3 பகுதியில் திருவண்ணாமலை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டப்பட்ட புதிய நியாய விலைக் கடையை மாவட்ட ஆட்சித் தலைவர் உயர்திரு க. தர்ப்பகராஜ் இ.ஆ.ப. அவர்களும், மாநகராட்சி மேயர் நிர்மலா வேல்மாறன் அவர்கள் ரிப்பன் வெட்டி, குத்துவிளக்கு ஏற்றி, மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். உடன் கழகத் தோழர்கள் அனைவரும் கலந்து கொண்டார்கள்.

தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

# "அன்னதானம்"



சென்னை, மார்ச் 13:

ராகவி சினி ஆர்ட்ஸ் சார்பிலும், நீலாவதி டிரஸ்ட் சார்பிலும் நகைச்சுவை பேச்சாளர் மற்றும் தொகுப்பாளர் மீனாட்சி (எ) ரேகா, வியன் சுப்பிரமணியன் ஆகிய இருவரும் பிறந்தநாளையொட்டி திரைப்பட இயக்குனரும், நடிகரும், தென்னிந்திய நடிகர் சங்க உறுப்பினரும், சமூக சேவகருமான சேவா ரத்னா டாக்டர் ஜெ.விக்டர் தலைமையிலும், எழுத்தாளர் விவேக் ராஜ் முன்னிலையிலும் மேக்கப் ஆர்ட்டிஸ்டும், நடிகையுமான அங்கிதா அவர்கள் ஏழை, எளியவர்களுக்கு 51 நபர்களுக்கு உணவு, வாட்டர் பாட்டில் வழங்கினார்கள். அனைவருக்கும் இனிப்புகள், தேநீர் வழங்கப்பட்டது.

# கலைஞர் கனவு இல்லம் திட்டம்




திருவண்ணாமலை, மார்ச்13:

மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் கலைஞர் கனவு இல்லம் திட்டம் கூடுதல் ஒதுக்கீட்டிற்கு பயனாளிகளுக்கு மாண்புமிகு சட்டமன்ற துணை சபாநாயகர் கு. பிச்சாண்டி அவர்கள் ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்வின் போது திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித் தலைவர் உயர்திரு க.தர்ப்பகராஜ் இ.ஆ.ப. அவர்கள் உடன் திட்ட இயக்குனர் Dr. இரா. மணி அவர்கள், மாவட்ட வருவாய் அலுவலர் இரா.இராம்பிரதீபன் அவர்கள், மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் அனைவரும் கலந்து கொண்டார்கள்.

தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

# திட்டக்குடியில் உதயநிதி ஸ்டாலின் சுற்றுப் பயணம் தொகுதி வாரியாக மாஸ் ப்ளான்




கடலூர், மார்ச்.13:

திட்டக்குடி விருத்தாசலம் தொகுதி வாரியாக சுற்றுப் பயணம் செல்லும் உதயநிதி ஸ்டாலின், கட்சி நிர்வாகிகள் உள்பட பல்வேறு தரப்பு பிரதிநிதிகளுடன் கலந்துரையாடினார்.

சட்டமன்றத் தேர்தலை எதிர் கொள்வதற்கு ஆளும் கட்சியான திமுக முழு வீச்சில் தயாராகி வருகிறது. தமிழகத்தில் உள்ள 234 சட்டமன்றத் தொகுதிகளையும் எட்டு மண்டலங்களாக பிரித்து தேர்தல் பணிகளுக்காக பொறுப்பாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

ஒவ்வொரு தொகுதிக்கும் மேற்பார்வையாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இதனிடையே ஓரணியில் தமிழ்நாடு என்ற உறுப்பினர் சேர்க்கையியக்கத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் சென்னையில் தொடங்கி வைத்தார். தமிழகம் முழுவதும் வீடு வீடாக சென்று உறுப்பினர் சேர்க்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இந்நிலையில் சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு துணை முதல்வரும் இளைஞரணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் திட்டக்குடி விருத்தாசலம் சட்டமன்ற தொகுதி வாரியாக திமுக நிர்வாகிகளை சந்தித்து ஆலோசனை நடத்தினார்.

திட்டக்குடி சட்டமன்ற தொகுதி வாரியாக ஒன்றிய, நகர, பேரூர், கிளைக் கழகங்களைச் சேர்ந்த பாக முகவர்கள் உள்ளிட்ட நிர்வாகிகளை சந்தித்து சட்டமன்ற தேர்தல் தொடர்பாக ஆலோசனை நடத்தினார்.

ஓரணியில் தமிழ்நாடு பரப்புரையில் சிறப்பாக செயல்பட்ட பத்து நிர்வாகிகளை பாராட்டு தெரிவித்து அவர்களுடன் புகைப்படம் எடுத்துக் கொண்டார்.

குறிப்பாக அனைவரின் கருத்துக்களையும் கேட்கப்பட வேண்டும் என்கின்ற ஜனநாயக நோக்கத்தில் கருப்பு பெட்டி வைக்கப்பட்டு படிவங்கள் வழங்கப்பட்டிருந்தன. இதன் மூலம் நிர்வாகிகள் தங்களது கருத்துக்கள், கோரிக்கைகள் மற்றும் ஆலோசனைகள் விரிவாக பகிர்ந்து கொள்ள முடியும். கருத்து பெட்டியில் இருந்து உதயநிதி ஸ்டாலின் சில படிவங்களை தேர்ந்தெடுத்து அவை குறித்து நிர்வாகிகளுடன் உரையாடி அவர்களின் கேள்விகளுக்கும் பதில் அளித்தார். தொடர்ந்து திட்டக்குடி விருத்தாசலத்தில் கலைஞர் நூலகத்தை திறந்து வைத்தார்.

அதுசமயம் கடலூர் மேற்கு மாவட்ட செயலாளரும், தொழிலாளர் நலன் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வெ.கணேசன், நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் சபா. இராஜேந்திரன், விருத்தாசலம் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் எம்.எஸ். கணேஷ்குமார், விருத்தாசலம் நகர்மன்ற தலைவர் சங்கவி முருகதாஸ், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் பாரதிராஜா, திமுக நிர்வாகிகள் மற்றும் பொது மக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# பத்தாம் வகுப்பு பொது தேர்வு மாவட்ட ஆட்சியர் நேரில் ஆய்வு



திருவண்ணாமலை மாவட்டம் கலசபாக்கம் அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியில் பத்தாம் வகுப்பு பொது தேர்வு நடைபெற்று வருவதை பார்வையிட்டு திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித் தலைவர் உயர்திரு. க. தர்ப்பகராஜ் இ.ஆ.ப. அவர்கள் நேரில் ஆய்வு மேற்கொண்டார்.

தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

# தேர்தல் கொண்டாட்டம் 2026



## இவர்கள் கூறுவதென்ன?

### தே.ஜ கூட்டணிக்கு விஜய் வருவரா? மத்திய அமைச்சர் எல்.முருகன் பதில்



திருச்சியில் நேற்று பிரதமர் மோடி பங்கேற்ற அரசு நிகழ்ச்சி மற்றும் தே.ஜ. கூட்டணி பொதுக் கூட்டத்தில் பங்கேற்பதற்காக திருச்சிக்கு வருகை தந்த அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: திருச்சி தே.ஜ. கூட்டணி பொதுக்கூட்டம், மக்களுக்கு விரோதமாக செயல்பட்டு வரும் திமுக அரசை வீட்டுக்கு அனுப்பி வைக்கும் கூட்டமாக இருக்கும்.

பிரதமர் மோடி எப்போது தமிழகத்துக்கு வந்தாலும், அப்போது தமிழகத்தின் வளர்ச்சிக்காகவும், மேம்பாட்டுக்காகவும் நிதியை வழங்கி வருகிறார். கடந்த 11 ஆண்டுகளில் ரூ. 13 லட்சம் கோடியை தமிழகத்துக்கு மத்திய அரசு வழங்கி உள்ளது என்றார். தேசிய ஜனநாயக கூட்டணிக்கு விஜய் வருவாரா என்ற கேள்விக்கு 'எல்லோரும் வருவார்கள்' என்றார்.

சரத்குமார் பேட்டி: திருச்சியில் பாஜக நிர்வாகியும் நடிகருமான சரத்குமார் அளித்த பேட்டியில், "விஜய்க்கு செயல்பாடே கிடையாது. இலவசங்களை குறை சொன்ன இவர் திரும்ப ஏன் அதைப் பத்தி பேசிட்டு இருக்காரு... வேற ஏதாச்சும் சொல்ல வேண்டியது தானே. அவரால ஊழலற்ற ஆட்சியைத் தருவேன் என்று மட்டும் தான் சொல்ல முடியும், வேறென்ன சொல்ல முடியும்? 1996-ல் இதைவிட எனக்கு இளைஞர் கூட்டம் வந்திருக்கிறது. ஆகவே, வெறும் கூட்டத்தை வெச்சு எல்லாம் கணக்குப் பண்ண முடியாது. அரசியல் களத்துக்குப் போன பிறகு தான் நிலவரத்தைப் பார்க்க முடியும். அப்படியே விஜய் 15 சதவீத வாக்குகளை வாங்கினாலும் கூட, ஒரு சீட் கூட ஜெயிக்க மாட்டார்" என்று கூறினார்.

### திமுகவை வீழ்த்த அனைவரும் ஒன்றாக இருக்க வேண்டும்: விஜய்க்கு குறிப்பால் உணர்த்திய கடம்பூர் ராஜு

திமுக-வை வீழ்த்த வேண்டுமென்றால் அனைவரும் ஒன்றாக இருக்க வேண்டும் என்பதே சரியாக இருக்கும்" என தவெக தலைவர் விஜய்க்கு அதிமுக முன்னாள் அமைச்சர் கடம்பூர் செ.ராஜூ குறிப்பால் உணர்த்தினார்.

இது தொடர்பாக நேற்று அவர் கோவில்பட்டியில் செய்தியாளர்களிடம் கூறியதாவது: தீப்பெட்டி தொழிலுக்கு சவாலாக உள்ள பிளாஸ்டிக் லைட்டர்களை தடை செய்ய வலியுறுத்தி உற்பத்தியாளர்கள், மத்திய வர்த்தகத் துறை அமைச்சர் பியூஷ் கோயலை சந்தித்துள்ளனர். அப்போது, மெழுகு தட்டுப்பாடு மற்றும் விலையேற்றம் தொடர்பாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். அதற்கு, விரைவில் மாற்று ஏற்பாடு செய்யப்படும் என மத்திய அமைச்சர் உறுதி அளித்ததாக தீப்பெட்டி உற்பத்தியாளர்கள் தெரிவித்துள்ளனர். கரூர் கூட்ட நெரிசல் சம்பவத்தில் ஏற்கெனவே சிபிஐ விசாரணைக்கு நடிகர் விஜய் 2 முறை ஆஜராகி இருக்கிறார். அதனால் இப்போது அவரை விசாரணைக்கு அழைத்திருப்பதில் எந்த அரசியலும் இருப்பதாகத் தெரியவில்லை.

அதிமுக கூட்டணியில் தொகுதிப் பங்கீடு இன்னும் இறுதிசெய்யப்பட வில்லை. எங்களுக்கு இன்னும் அவகாசம் இருக்கிறது. திமுக-வை வீழ்த்த வேண்டும் என்பதுதான் எங்களது குறிக்கோள். இதனையே கட்சி தொடங்கியதில் இருந்து விஜய் தெரிவித்து வருகிறார். மேலும், எங்களது அரசியல் எதிரி திமுக தான் என்றும் தெரிவித்து வருகிறார். எங்களை பொறுத்தவரை திமுக-வை வீழ்த்த வேண்டுமென்றால் அனைவரும் ஒன்றாக இருக்க வேண்டும் என்பதுதான் சரியாக இருக்கும். அதன் பின்னர் அவரவர் முடிவு. இவ்வாறு அவர் கூறினார்.

### "தவெகவை கூட்டணியில் இணைப்பது குறித்து இபிஎஸ் முடிவெடுப்பார்" - பியூஷ் கோயல்



திருச்சி: "தவெகவை கூட்டணியில் இணைப்பது குறித்து தமிழ்நாட்டில் என்.டி.ஏ கூட்டணிக்கு தலைமை வகிக்கும் பழனிசாமி தான் முடிவெடுக்க வேண்டும்" என மத்திய அமைச்சர் பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

தேசிய ஜனநாயக் கூட்டணி பொதுக்கூட்டம் பஞ்சப்பூரில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் பங்கேற்பதற்காக மத்திய அமைச்சர் ஜவுளி நுகர்வோர், உணவு மற்றும் பொது விநியோகத் துறை அமைச்சர் பியூஷ் கோயல் டெல்லியிலிருந்து விமானம் மூலம் திருச்சி விமான நிலையம் வந்தார். அப்போது அவர் செய்தியாளர்களிடம் கூறியது: இந்தியாவில் எரிவாயு சிலிண்டர் தட்டுப்பாடு இல்லை. ஊடகங்கள் தான் எரிவாயு தட்டுப்பாடு என்கிற செய்தியை பரப்புகின்றன. அதன் அடிப்படையில் நீங்கள் கேள்வி எழுப்புகிறீர்கள். எரிபொருள் இருப்பு குறித்து அந்த துறை விரிவான அறிக்கையை விரைவில் வெளியிடும். தேஜ கூட்டணியில் தொகுதி பங்கீடு பேச்சுவார்த்தை விரைவில் நடைபெறும். தவெகவை கூட்டணியில் இணைப்பது குறித்து தமிழ்நாட்டில் என்டிஏ கூட்டணிக்கு தலைமை வகிக்கும் பழனிசாமி தான் முடிவெடுக்க வேண்டும் என கூறினார்.

## ஒன்றுபட்டு உழைத்தால் தே.ஜ. கூட்டணி ஆட்சி: திருச்சி பொதுக்கூட்டத்தில் தலைவர்கள் நம்பிக்கை



அனைவரும் ஒன்று பட்டு உழைத்தால் தமிழகத்தில் அடுத்து தே.ஜ. கூட்டணி ஆட்சி அமையும் என திருச்சியில் நேற்று நடைபெற்ற தே.ஜ. கூட்டணி பொதுக் கூட்டத்தில் தலைவர்கள் பேசினர்.

பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன்: திருச்சியில் 2 தினங்களுக்கு முன் நடந்த திமுக மாநாட்டில் வரவிருக்கும் தேர்தல் தமிழ்நாட்டுக்கும், டெல்லிக்கும் நடக்கும் தேர்தல் என்று ஸ்டாலின் பேசினார். ஆனால் வரும் தேர்தல் குடும்ப ஆட்சிக்கு முடிவு கட்டும் தேர்தல். பிரதமர் தமிழகம் வரும்போதெல்லாம் தாய்மாமன் வீட்டு சீர் போல ஏதாவது திட்டங்களை கொண்டு வந்து தருவார். அந்தவகையில் இன்று திருச்சியில் ரூ.5,500 கோடி மதிப்பிலான திட்டத்தை வழங்கியுள்ளார். கடந்த 11 ஆண்டுகளில் ரூ.14 லட்சம் கோடி மதிப்பிலான திட்டங்களை தமிழகத்துக்கு வழங்கியுள்ளார். திமுக குடும்ப ஆட்சியை வீட்டுக்கு அனுப்பிவிட்டு தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சியை தமிழகத்தில் மலரச் செய்ய வேண்டும்.

அமமுக பொதுச் செயலாளர் டிடிவி தினகரன்: குஜராத்துக்கும், தமிழகத்துக்கும் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தொடர்பு இருந்துள்ளது. சங்க இலக்கியங்கள் இதை குறிப்பிட்டுள்ளன. வேளிர் எனப்படும் தமிழக மன்னர்கள் ஆண்ட திராவிட மண் குஜராத். குஜராத்தைச் சேர்ந்த பிரதமர் மோடிக்கும், தமிழகத்துக்குமான உறவு தொப்புள் கொடி உறவு. மக்கள் விரோத ஆட்சியை வீட்டுக்கு அனுப்பிவிட்டு தே.ஜ. கூட்டணி ஆட்சியை கொண்டு வர அனைவரும் உறுதி ஏற்க வேண்டும்.

பாமக தலைவர் அன்புமணி: இந்தியாவில் அதிகளவு கொலைகள், தற்கொலைகள், சாலை விபத்துகள் நிகழும் மாநிலமாக தமிழகம் இருக்கிறது. இதற்கு போதைப் பொருட்கள் அதிகரித்துள்ளதே காரணம். கடந்த 5 ஆண்டுகளில் சுமார் 22 லட்சம் கிலோ கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

இதுதவிர அபின் உள்ளிட்ட பல்வேறு போதைப்பொருட்களின் புழக்கம் உள்ளது. எனவே, மக்கள் விரோத திமுக ஆட்சியை விரட்டி பழனிசாமியை முதல்வராக தேர்ந்தெடுங்கள்.

கூட்டத்தில், ஐஜேக தலைவர் பாரிவேந்தர், புதிய நீதிக்கட்சி தலைவர் ஏ.சி.சண்முகம், மத்திய அமைச்சர்கள் பியூஸ்கோயல், எல்.முருகன், பாஜக முன்னாள் மாநில தலைவர் அண்ணாமலை, நடிகர் சரத்குமார், தமாகா தலைவர் ஜி.கே. வாசன், இந்திய ஜனநாயக கட்சி தலைவர் ரவி பச்சமுத்து, தமிழக மக்கள் முன்னேற்ற கழக தலைவர் ஜான்பாண்டியன், புரட்சி பாரதம் தலைவர் பூவை ஜெகன்மூர்த்தி, அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சித் தலைவர் திருமாறன், பெருந்தலைவர் காமராஜர் மக்கள் கட்சித் தலைவர் என்.ஆர்.தனபாலன், முத்தரையர் முன்னேற்ற சங்கத் தலைவர் ஆர். விசுவநாதன் உள்ளிட்ட கூட்டணி கட்சியினர் பங்கேற்றனர். முன்னதாக கூட்டத்தில் முன்னாள் அமைச்சர்கள் எஸ்.பி. வேலுமணி, தங்கமணி, கே.பி.முனுசாமி, சி.விஜயபாஸ்கர், காமராஜ், எம்.ஆர்.விஜயபாஸ்கர், ஓ.எஸ்.மணியன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## அன்புமணி தற்போது பாமகவின் உறுப்பினர் கூட கிடையாது: ராமதாஸ் பதில் மனு தாக்கல்

பாமக சட்ட விதிகளுக்குட்பட்டுதான் ராமதாஸ் தலைவராக தேர்வு செய்யப்பட்டவர் என்பதால் இந்த வழக்கு தொடர்வதற்கான அனைத்து தகுதியும் அவருக்கு உள்ளது.

அன்புமணி பாமகவின் கட்சி உறுப்பினர் பதவியில் இருந்தே நீக்கப்பட்டவர். அவர் கட்சியின் அங்கீகரிக்கப்படாத நபர். தேர்தல் ஆணையத்தில் போலியான ஆவணங்களை அன்புமணி தாக்கல் செய்துள்ளார். பாமக சட்ட விதிகளை திருத்தியது தொடர்பாக தேர்தல் ஆணையத்துக்கு முறைப்படி தெரிவிக்கப்பட்டுள்ளது.

அன்புமணி தலைவராக இருந்த காலக்கட்டத்தில் கட்சியின் செயல்பாடுகள் மிக மோசமான நிலையில் இருந்தது. பாமக கட்சியின் அங்கீகாரம் பறிபோனதற்கே அன்புமணிதான் காரணம்' என பதில் மனுவில் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

ராமதாஸ் தாக்கல் செய்த இந்த பதில் மனு மீது வாதங்களை வைக்க கால அவகாசம் வழங்க வேண்டும் அப்போது அன்புமணி தரப்பில் கோரிக்கை வைக்கப்பட்டது. இதனை ஏற்க கூடாது என்றும், தொடர்ந்து கால அவகாசம் கேட்டு வழக்கை அன்புமணி தரப்பு இழுத்தடிப்பு செய்வதால் நாளையே வாதங்களை வைக்க உத்தரவிட வேண்டும் என ராமதாஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. ராமதாஸ் தொடர்ந்த வழக்கை நிராகரிக்க கோரி அன்புமணி தாக்கல் செய்த மனு மீது இரு தரப்பும் வாதங்களை வைப்பதற்காக வழக்கின் விசாரணை மார்ச் 13-ம் தேதிக்கு தள்ளி வைத்து உத்தரவிட்டார்.

## வேல்முருகனுக்கு திமுக வைத்திருக்கும் ஆஃபர்



திமுக கூட்டணியில் அங்கம் வகிக்கும் தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் தலைவர் தி.வேல்முருகன் கடந்த முறை பண்ருட்டி தொகுதியில் உதயசூரியன் சின்னத்தில் நின்று வென்றவர். ஆனால் இந்த முறை, அவர் தன்னை மூன்று முறை சட்டசபைக்கு அனுப்பிய பண்ருட்டிக்குப் பதிலாக, தான் வசிக்கும் நெய்வேலி தொகுதியில் போட்டியிட திமுக-விடம் விருப்பம் தெரிவித்திருக்கிறாராம்.

திமுக கூட்டணியில் இருக்கும் அனைத்துக்கட்சிகளுமே, "இரட்டை இலக்கத்தில் சீட் கேட்போம்" என சம்பிரதாயச் சடங்காகச் சொல்லி வருகின்றன. அந்த லிஸ்ட்டில் தவாக வேல்முருகனும் தங்களுக்கு 10 தொகுதிகள் வேண்டும் என பட்டியல் கொடுத்திருப்பதாகச் சொல்கிறார்கள் அவரது கட்சியினர். இதனிடையே, வேல்முருகனின் வேண்டுகோளைப் பற்றி எல்லாம் கவலைப்படாமல் நெய்வேலி தொகுதியின் சிட்டிங் திமுக எம்எல்ஏ-வான சபா. ராஜேந்திரனும் தேர்தல் பணிகளில் சுறுசுறுப்பாகி வருகிறார்.

இது தொடர்பாக வேல்முருகனிடம் கேட்டதற்கு, "எங்கள் கட்சி மாநில அளவில் வளர்ச்சி கண்டிருப்பதால் இம்முறை கூடுதல் தொகுதிகளைக் கேட்டிருக்கிறோம். குறிப்பாக, தருமபுரி, சேலம், வேலூர் மாவட்டங்களில் சில தொகுதிகளையும் நெய்வேலி தொகுதியையும் குறிப்பிட்டுக் கேட்டிருக்கிறோம்" என்றார்.

பாமக-வில் வளர்ந்த வேல்முருகன், தற்போது பாமக ரெண்டு பட்டுக் கிடப்பதால் அந்தக் கட்சி வலுவாக இருக்கும் தருமபுரி, சேலம் மாவட்டங்களில் போட்டியிட விருப்பம் தெரிவித்திருப்பதன் மூலம் கிடைக்கின்ற வாய்ப்பைப் பயன்படுத்தி பாமக வேட்பாளர்களை வீழ்த்த வியூகம் வகுப்பதாகச் சொல்லப்படுகிறது.

ஆனால், விரும்பும் தொகுதி என்றால் ஒரு தொகுதி தாங்கள் கொடுப்பதை ஏற்றுக் கொள்வதாக இருந்தால் இரண்டு தொகுதிகள் என திமுக தலைமை டீல் பேசி வருவதாக அறிவாலய வட்டாரத்தில் சொல்கிறார்கள்.

## "கரை சேர முடியாதவர்கள் பழனிசாமி, ஓபிஎஸ்" - சசிகலா தாக்கு



திண்டிவனத்தில் நேற்று மாலை நடைபெற்ற இஃப்தார் நோன்பு திறக்கும் நிகழ்ச்சியில் முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் தோழி சசிகலா பங்கேற்றார்.

அப்போது அவர், "திமுகவை உறுதியுடன் எதிர்க்கிறவர்கள், எம்ஜிஆர் கொள்கைகளை காப்பாற்றுபவர்கள், ஜெயலலிதாவின் எண்ணங்களை ஈடேற்றுபவர்கள் தான் நம் இரு தலைவர்களின் வழியில் வந்தவர்கள். இதற்காகதான், நாம் புதிய கட்சியை தொடங்கி இருக்கிறோம். இருவரது வழியில் சரியாக பயணித்து கொண்டிருக்கிறோம். அவர்களை போன்று சிறுபான்மையினர் மற்றும் அனைத்து சமுதாயத்தினரை அரவணைத்து செல்வோம்" என பேசியவர், 'கரை சேர நினைத்த மனிதர்களின் கதை' என்ற தலைப்பில் ஒரு குட்டிக் கதையை சொன்னார்.

ஒரு ஊரில் உள்ள ஆற்றில் வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது. இக்கரையில் இருவர் நிற்கின்றனர். அடுத்த கரைக்கு செல்ல ஓடம் இல்லை. அப்போது அந்த இடத்துக்கு வந்த ஒரு காளை மாடும், அக்கரைக்கு செல்ல வேண்டும். காளை மாட்டுக்கு ஓடம் தேவை இல்லை. ஆற்றில் பாய்ந்து, நீந்தியது.

இதைப் பார்த்த ஒருவர், திடீரென ஆற்றில் குதித்து, காளை மாட்டின் வாலை கெட்டியாக பிடித்து கொண்டார். காளை மாடும், அவரை சுலபமாக இழுத்து சென்று அக்கரையில் சேர்த்துவிட்டது. அடுத்தவர், 'நமக்கு ஒரு வால் கிடைக்காதா?' என எதிர்பார்த்தார்.

அப்போது ஒரு நாய் வந்து ஆற்றில் குதித்தது. இதைப் பார்த்த மற்றொருவர், நாயின் வாலை பிடித்துக் கொண்டு செல்ல முயன்றார். மனிதரை இழுத்து கொண்டு ஆற்றில் நீந்த முடியாமல் நாய் திணறியது. இருவரும் மாற்று திசையில் சென்றனர். இதில் மூன்றாவதாக ஒருவர் இருக்கிறார், எப்போதும் தவறாகவே முடிவு செய்பவர்.

ஆற்றின் நடுவே மிதந்த கம்பளி மூட்டை போன்ற ஒன்றை நோக்கி, ஏதோ பொருள் இருக்கும் என்ற ஆசையில் நீந்தி சென்றார். நீண்ட நேரமாகியும் கரை திரும்பவில்லை. நடு ஆற்றில் போராடுகிறார். கம்பளி மூட்டை என நினைத்து கரடியைப் பிடித்து விட்டேன் என சத்தம் போடுகிறார்.

தவறாக பற்றி கொள்பவர்கள் தடுமாறிவிடுகின்றனர். சரியாக பற்றி கொள்பவர்கள் கரை ஏறி விடுகின்றனர். நல்ல வேளை நீங்கள் நாய் வால் மற்றும் கரடி குட்டியை பிடிக்கவில்லை. காளையின் வாலை நீங்கள் பிடித்து கொண்டு இருக்கிறீர்கள்.

கண்டிப்பாக கரை சேர்ந்து விடுவீர்கள்" என்று கதை சொல்லி பழனிசாமி, ஓ.பன்னீர்செல்வத்தை மறைமுகமாக சாடினார்.

## தேர்தலில் வென்றவர்கள் அரசியலில் அடையாளம் தொலைப்பார்கள்....



ஸ்ரீரங்கம் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றவர்கள் உயர் பதவிகளை அடைந்தாலும் சீக்கிரமே தங்களது அடையாளத்தைத் தொலைத்து விடுவார்கள் என்று பரவும் ஒரு சென்டிமென்ட் செய்தியால் திருச்சி அரசியல்வாதிகள் திகிலடைந்து கிடக்கிறார்கள்.

ஸ்ரீரங்கம் சட்டப்பேரவைத் தொகுதியில் வெற்றிபெறுபவர்கள் அவர்கள் எந்தக் கட்சியாக இருந்தாலும் அவ்வளவாக சோபிக்க மாட்டார்கள். அரசியல் ரீதியாக பல்வேறு பிரச்சினைகளைச் சந்திப்பார்கள் என்று சொல்பவர்கள் அதற்குச் சான்றாக இந்தத் தொகுதியின் 50 ஆண்டு கால தேர்தல் ஃப்ளாஷ் பேக்கை எடுத்துப் போடுகின்றனர்.

ஸ்ரீரங்கத்தில் 1977, 1980, 1984 ஆகிய மூன்று தேர்தல்களில் பெற்றிபெற்ற ஆர்.சவுந்தரராஜன், எம்ஜிஆர் அமைச்சரவையில் அமைச்சராகவும் இருந்தார். ஆனால் அதன் பிறகு, அவர் கஷ்ட ஜீவனம் நடத்தி கடைசி காலத்தைக் கழித்தார். 1989-ல் திமுக கூட்டணியில் ஜனதா கட்சி சார்பில் நின்று வெற்றிபெற்ற வெங்கடேஸ்வர தீட்சிதர், ஆட்சி கலைப்பால் ஒன்றரை ஆண்டிலேயே பதவியிழந்து அரசியலிலும் அஸ்தமித்தார்.

இதேபோல் 1991-ல் இங்கு வெற்றிபெற்று அமைச்சரவையில் இடம்பிடித்த அதிமுக-வின் கு.ப.கிருஷ்ணன் அதன்பிறகு அங்கு தாக்குப்பிடிக்க முடியாமல் தனியாக கட்சி நடத்திவிட்டு தேமுதிக-வில் செட்டிலானார். அங்கேயும் ஜொலிக்க முடியாததால் மீண்டும் அதிமுக-வுக்கே யு டர்ன் அடித்தவர், ஓபிஎஸ் பக்கம் இருந்துவிட்டு அண்மையில் தவெக-வில் இணைந்தார்.

1996-ல் வெற்றிபெற்ற திமுக வேட்பாளர் தி.ப.மாயவன் அதன் பிறகு கோஷ்டி அரசியலில் தாக்குப்பிடிக்க முடியாமல் தீவிர அரசியலில் இருந்தே ஒதுங்கினார். 2001-ல் வெற்றி பெற்று அதிமுக அமைச்சரவையில் அங்கம் வகித்த கே.கே.பாலசுப்பிரமணியம் அதன் பிறகு அரசியலில் நிலைக்க முடியவில்லை.

2006-ல் இங்கு வாகை சூடிய மு.பரஞ்சோதி, 2011-ல் திருச்சி மேற்கு இடைத் தேர்தலில் வெற்றி பெற்று அதிமுக அமைச்சரவையில் இடம்பிடித்தார். பிற்பாடு பெண் மருத்துவர் ஒருவரின் வன்கொடுமை புகாரால் அமைச்சர் பதவியை இழந்தார்.

இதேபோல், 2011-ல் ஸ்ரீரங்கத்தில் வென்று முதல்வரான அதிமுக பொதுச்செயலாளர் ஜெயலலிதா தனது பதவிக்காலம் முடியும் முன்பே ஊழல் வழக்கில் தண்டிக்கப்பட்டு பதவியைப் பறிகொடுத்தார். 2015 இடைத் தேர்தல், 2016 பொதுத் தேர்தல்களில் போட்டியிட்டு வென்று அதிமுக அமைச்சரவையில் அங்கம் வகித்தவர் வளர்மதி. ஆனால் 2021-ல், அவருக்கு தேர்தலில் போட்டியிட வாய்ப்பே கொடுக்கவில்லை அதிமுக.

2021-ல் திமுக சார்பில் போட்டியிட்டு வென்ற திமுக-வின் பழனியாண்டியும் இப்போது நிம்மதியாக இல்லை. அமைச்சர் நேருவுக்கு எதிராக அணி திரட்டி நிற்கும் இவர், குவாரி விவகாரம் தொடர்பாக அண்மையில் செய்தியாளர்களை தாக்கிய புகாரில் சிக்கி இருக்கிறார். இதனால் இம்முறை அவருக்கு சீட் கிடைப்பதிலேயே சிக்கல் ஏற்பட்டிருக்கிறது.

# தேவஸ்தான அறக்கட்டளைகளுக்கு ரூ.20 லட்சம் நன்கொடை

திருப்பதி, மார்ச் 13:

திருமலை திருப்பதி தேவஸ்தானம் நடத்தும் அறக்கட்டளைகளுக்கு மொத்தம் ரூ.20 லட்சம் நன்கொடையாக பெறப்பட்டுள்ளது.

இதில் ரூ.10 லட்சம் எஸ்வி கோசம்ரக்ஷணா அறக்கட்டளைக்கும், மேலும் ரூ.10 லட்சம் ஸ்ரீ வெங்கடேஸ்வரா மருத்துவ அறிவியல் நிறுவனத்திற்கும் (சிம்ஸ்) நன்கொடையாக வழங்கப்பட்டது.

மும்பையின் ராஜேந்திர ஜூவெல்லரி பிரைவேட் லிமிடெட் இயக்குநர்கள் பெருலால் ஜெயின் மற்றும் மீனேஷ் ஜெயின் ஆகியோர் நன்கொடை வழங்கினர். நன்கொடையாளர்கள் புதன்கிழமை திருப்பதியில் உள்ள தேவஸ்தான நிர்வாகக் கட்டடத்தில் நிர்வாக அதிகாரி எம். ரவிச்சந்திரனிடம் வரைவோலையை ஒப்படைத்தனர்.

தேவஸ்தான அறங்காவலர் குழு உறுப்பினர் ஜி. பானு பிரகாஷ் ரெட்டியும் கலந்து கொண்டார். நன்கொடையாளர்களின் தாராளமான பங்களிப்பிற்காக தேவஸ்தான செயல் அதிகாரி எம். ரவிச்சந்திரா நன்றி தெரிவித்தார்.

# ஏழுமலையான் உண்டியல் காணிக்கை ரூ.4.38 கோடி



திருப்பதி, மார்ச் 13:

திருமலை ஏழுமலையான் கோயில் உண்டியல் காணிக்கையாக ரூ.4.38 கோடி வசூலானதாக தேவஸ்தானம் தெரிவித்துள்ளது.

திருமலைக்கு வரும் பக்தர்களின் எண்ணிக்கை ஏற்ற இறக்கமாக உள்ள நிலையில், புதன்கிழமை நிலவரப்படி தர்ம தரிசனத்துக்கு 14 (தரிசன டோக்கன்கள் இல்லாதவர்கள்) மணிநேரமும், ரூ.300 விரைவு தரிசனம், நேரடி இலவச தரிசன டோக்கன்கள் பெற்ற பக்தர்களுக்கும் 3 முதல் 4 மணி நேரம் ஆனது.

அலிபிரி நடைபாதை வழியாக மதியம் 2 மணிவரை 12 வயதுக்குட்பட்ட குழந்தைகள், அவர்களின் பெற்றோர், இரவு 10 மணிவரை அனைத்து பக்தர்களும் அனுமதிக்கப்படுகின்றனர்.

இதற்கிடையே, செவ்வாய்க்கிழமை முழுவதும் 73,572 பக்தர்கள் தரிசனம் செய்தனர்; 22,747 பக்தர்கள் தலைமுடி காணிக்கை செலுத்தினர்.

உண்டியல் காணிக்கையை கணக்கிட்டதில் ரூ.4.38 கோடி வசூலானது என தேவஸ்தானம் தெரிவித்துள்ளது

# ஏழுமலையானின் டாலர்கள் ஆன்லைனில் விரைவில் விற்பனை




திருமலை, மார்ச் 13:

திருப்பதி ஏழுமலையானை தரிசிக்கும் பக்தர்கள் அவரவர் வசதிகளுக்கேற்ப திருமலையில் லட்டு பிரசாதங்கள், காலண்டர்கள், டைரிகள், தேவஸ்தான ஊதுபத்திகள், கையில் கட்டும் கயிறுகள் என வீடுகளுக்கு வாங்கி செல்வதை வழக்கமாக கொண்டுள்ளனர்.

முன்பெல்லாம் தங்கம் மற்றும் வெள்ளி டாலர்கள் கூட திருமலை திருப்பதி தேவஸ்தான புத்தக விற்பனை மையங்களில் விற்பனை செய்யப்பட்டு வந்தன. அவை சில காரணங்களால் நிறுத்தி வைக்கப்பட்டன. ஆனால், சில பக்தர்கள் ஏழுமலையான் மற்றும் பத்மாவதி தாயார் உருவம் பதித்த டாலர்களை மீண்டும் விற்க வேண்டும் என திருப்பதி தேவஸ்தானத்தை வலியுறுத்தி வந்தனர். அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க தங்கம் மற்றும் வெள்ளி டாலர்கள் மற்றும் நாணயங்களை ஆன்லைனில் விற்பனை செய்ய தேவஸ்தானம் தற்போது முன்வந்துள்ளது. ஆனால், தற்போது தங்கம் விற்கும் விலையில் தங்க டாலர்களை வாங்க இயலாது என்றும், ஆனால், வெள்ளி டாலருக்கு தங்க முலாம் பூசியும் கூட ஆன்லைனில் விற்க வேண்டும் எனவும் சில பக்தர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். இதற்கும் தேவஸ்தானம் சம்மதித்துள்ளதாக தெரிகிறது. ஆக, விரைவில் திருப்பதி ஏழுமலையான் ஒருபுறம், பத்மாவதி தாயார் ஒருபுறம் உள்ள தங்கம், வெள்ளி மற்றும் தங்க முலாம் பூசப்பட்ட வெள்ளி நாணயங்கள், 5 மற்றும் 10 கிராம் எடையில் ஆன்லைன் மூலம் பக்தர்களின் வீடு தேடி வர உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# அலங்கரிக்கப்பட்ட 'வைர வேலுடன்' பழநிக்கு பறவை காவடியில் வந்த வால்பாறை பக்தர்கள்





பழனி, மார்ச் 13:

ராட்சத கிரேன் உதவியுடன் அந்தரத்தில் தொங்கியபடி 'வைர வேலுடன்' பழநிக்கு பறவை காவடியில் வந்து கோவை மாவட்டம் வால்பாறையை சேர்ந்த பக்தர்கள் தங்கள் நேர்த்திக் கடனை செலுத்தியுள்ளனர்.

திண்டுக்கல் மாவட்டம் பழநி தண்டாயுதபாணி சுவாமி கோயிலின் உப கோயிலான பெரியநாயகியம்மன் கோயிலில் தைப்பூசத் திருவிழா ஜன.26-ல் தொடங்கி பிப்.4-ம் தேதி வரை நடைபெற்றது. இதையொட்டி பல்வேறு மாவட்டங்களில் இருந்து லட்சக்கணக்கான பக்தர்கள் பாத யாத்திரையாக வந்து அலகு குத்தியும், காவடி எடுத்தும் தங்கள் நேர்த்திக் கடனை செலுத்தினர்.

இந்நிலையில் தைப்பூச விழா முடிந்த பிறகும் கூட பழநிக்கு பாத யாத்திரையாகவும், அலகு குத்தியும், காவடி எடுத்து வரும் பக்தர்களின் எண்ணிக்கை குறையவில்லை. நாள்தோறும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் பழநி மலைக்கோயிலுக்கு சென்று சுவாமி தரிசனம் செய்து வருகின்றனர்.

வியாழக்கிழமை காலை கோவை மாவட்டம் வால்பாறையை சேர்ந்த 500-க்கும் மேற்பட்ட பக்தர்கள் 50-வது ஆண்டாக பழநிக்கு பாத யாத்திரையாக வந்தனர். அவர்கள் பழநி சண்முக நதியில் புனித நீராடி விட்டு அங்கிருந்து மலைக்கோயிலுக்கு புறப்பட்டனர். உடல் முழுவதும் அலகு குத்தி 2 ராட்சத கிரேன்கள் உதவியுடன் அந்தரத்தில் தொங்கியபடி பறவை காவடியில் வந்தனர். இதனை, பழநிக்கு வந்த மற்ற பக்தர்களும், உள்ளூர் மக்களும் ஆச்சரியத்துடன் பார்த்தனர். வால்பாறை பக்தர்கள் பால், பன்னீர், தீர்த்த காவடி எடுத்தும், அலகு குத்தியும் கிரிவீதியில் வலம் வந்து மலைக்கோயிலில் தங்கள் நேர்த்திக் கடனை செலுத்தினர். அப்போது, ஊர்வலமாக கொண்டு வரப்பட்ட, வால்பாறையில் உள்ள சுப்பிரமணிய சுவாமி கோயிலுக்கு வாங்கப்பட்ட ரூ.75 லட்சம் மதிப்பிலான வைரவேலை மலைக்கோயிலில் மூலவர் சந்நிதியில் சிறப்பு பூஜைகள் செய்து வழிபட்டனர்.

# வரதராஜ பெருமாள் கோயில் உண்டியல் காணிக்கை ரூ.71 லட்சம்



காஞ்சிபுரம், மார்ச் 13:

காஞ்சிபுரம் வரதராஜ பெருமாள் கோயில் உண்டியல் காணிக்கையாக ரூ,.71 லட்சம் வசூலானதாக உதவி ஆணையர் ராஜலட்சுமி தெரிவித்தார்.

கோயிலில் இருந்த 10 உண்டியல்கள் 204 நாள்களுக்கு பின்பு திறந்து எண்ணப்பட்டன.

அறநிலையத்துறை காஞ்சிபுரம் சரக உதவி ஆணையர் கார்த்திகேயன், ஆய்வாளர் அலமேலு மற்றும் கோயில் உதவி ஆணையர் ராஜலட்சுமி ஆகியோர் முன்னிலையில் திறந்து எண்ணப்பட்டது.

இதில் ரொக்கம் ரூ.71,04,837, தங்கம்-28.530 கிராம்,வெள்ளி 472.590 கிராம் இருந்தன.

கோயில் பணியாளர்கள், தொண்டு நிறுவன ஊழியர்கள் ஆகியோர் எண்ணும் பணியில் ஈடுபட்டிருந்தனர். உண்டியலில் இருந்து கிடைக்கப்பட்ட தொகை முழுவதும் வைப்பு நிதியாக வங்கிக்கணக்கில் வரவு வைக்கப்பட்டது.








## நலம் தரும் மருத்துவம்

# 40 வயதிலும் 20 வயதுக்கான ஆரோக்கியம் வேண்டுமா?

இன்று ஆரோக்கியம் குறித்துப் பேசுபவர்கள் அதிகம் உச்சரிக்கும் வார்த்தை 'ஒமேகா-3 கொழுப்பு அமிலம்' (OMEGA-3 FATTY ACIDS) என்பதுதான். இது நம் உடலுக்கு மிகவும் அவசியமான, ஆனால் உடல் தானாகவே உற்பத்தி செய்ய முடியாத ஒரு சத்து. இதனை நாம் உணவின் மூலமே பெற முடியும்.

ஒமேகா-3 சத்தினால் விளையும் நன்மைகள் என்ன? அவை எந்தெந்த உணவுகளில் நிறைந்துள்ளன? அவற்றை எப்படிச் சாப்பிட வேண்டும்? என்பதைப் பற்றி விரிவாகக் காண்போம்.

ஒமேகா-3 நிறைந்த உணவுகள்

இதனை அதன் ஆதாரங்களை வைத்து இரண்டு முக்கிய வகைகளாகப் பிரிக்கலாம்:

1. கடல் உணவு ஆதாரங்கள் (EPA மற்றும் DHA)

மீன் வகைகள்: மத்தி (SARDINES), கானாங்கெளுத்தி (MACKEREL), சால்மன் (SALMON), நெத்திலி மற்றும் வஞ்சிரம் போன்ற கொழுப்பு நிறைந்த மீன்களில் ஒமேகா-3 அதிக அளவில் உள்ளது.

மாற்று வழி: மீன் உணவுகளைச் சாப்பிடாதவர்கள், மருத்துவரின் ஆலோசனைப்படி மீன் எண்ணெய் (FISH OIL) மாத்திரைகளை எடுத்துக் கொள்வதன் மூலம் இந்தச் சத்தைப் பெறலாம்.

2. தாவர வகை ஆதாரங்கள் (ALA)

சியா விதைகள் (CHIA SEEDS): இவற்றைத் தண்ணீரில் ஊறவைத்துச் சாப்பிடுவது செரிமானத்திற்குச் சிறந்தது. ஓட்ஸ் கஞ்சி, மோர், ஸ்மூத்தீஸ், பழச்சாறுகள், சாலட்டுகள், யோகர்ட் மற்றும் புட்டிங் போன்றவற்றுடன் சேர்த்துச் சாப்பிடலாம். சியா விதைகளை உலர்ந்த நிலையில் (DRY) நேரடியாகச் சாப்பிடக்கூடாது. இவை உடலில் நீரை அதிகம் உறிஞ்சும் என்பதால், இவற்றைச் சாப்பிடும்போது அதிக அளவு தண்ணீர் குடிக்க வேண்டும்.

ஆளி விதைகள் (FLAX SEEDS): இவற்றை லேசாக வறுத்துப் பொடி செய்து சாப்பிடுவது சிறந்தது. சத்துமாவு அல்லது கஞ்சி வகைகளில் கலந்து பயன்படுத்தலாம்.

பூசணி விதைகள்: இவற்றை அப்படியே சிற்றுண்டியாகவோ அல்லது கேசரி, அல்வா, பொங்கல் போன்ற இனிப்பு மற்றும் கார உணவுகளில் சேர்த்தோ சாப்பிடலாம்.

அக்ரூட் (WALNUTS): இவற்றை ஊறவைத்தோ அல்லது அப்படியே நேரடியாகவோ சாப்பிடலாம். கேக் மற்றும் நட்ஸ் கலவைகளிலும் சேர்த்துப் பயன்படுத்தலாம்.

சமையல் எண்ணெய்: நல்லெண்ணெய், கடுகு எண்ணெய் மற்றும் சோயாபீன் எண்ணெய் ஆகியவற்றில் ஒமேகா-3 உள்ளது. சமையலில் இவற்றை அளவுடன் மாற்றி மாற்றிப் பயன்படுத்துவது நல்லது.

# வைரஸ் பாதிப்பா? ஹேக்கர்கள் கைவரிசையா? நீங்களே செக் செய்வது எப்படி?

இன்றைய தொழில்நுட்ப உலகில், இன்டர்நெட்டின் பயன்பாடு அதிக அளவில் உள்ளது. இதைப் பயன்படுத்தி யாருடைய ஸ்மார்ட்போன் அல்லது கணினியிலும் வைரஸ்களை எளிதாகப் பரப்ப முடியும். குறிப்பாக ஒருவரது சாதனத்தில் வைரஸ் இருக்கிறது என்பதே தெரியாமல் வைரஸ்களை பரப்பி, நூதன முறையில் கொள்ளை அடிக்க முடியும்.

கணினி பயன்பாடு அதிகரிக்கத் தொடங்கிய காலத்தில், அனைவருமே ஆன்டிவைரஸ் பயன்படுத்துவார்கள். ஆனால் இப்போது வரும் கணினிகளில், முன்கூட்டியே விண்டோஸ் டிஃபென்டர் இன்ஸ்டால் செய்யப்பட்டு வருகிறது. இதனால் பலரும் ஆன்டிவைரஸ் இன்ஸ்டால் செய்வதை மறந்துவிட்டனர். ஆனால் இன்றைய காலத்தில் எந்த அளவுக்கு தொழில்நுட்பம் வளர்ந்துள்ளதோ அதே அளவுக்கு, மோசடிக்காரர்களும் புத்திசாலித்தனமாக மாறிவிட்டனர்.

கம்ப்யூட்டரில் வைரஸ்கள் இருப்பது தெரியாத அளவுக்கு புதுவிதமான வைரஸ்களை உருவாக்கி கணினிக்கு அனுப்பி விடுகின்றனர். அவற்றை நாம் அடையாளம் காண்பது கடினமானது. இருப்பினும் சில வழிமுறைகளைப் பின்பற்றி உங்கள் கணினியில் வைரஸ்கள் இருக்கிறதா? இல்லையா? என நீங்களே கண்டுபிடிக்க முடியும்.

உங்கள் கணினியில் வைரஸ் இருப்புகிறது என்பதற்கான முதல் அறிகுறி, ஏதேனும் ஒரு புதிய அக்கவுண்ட் தானாக சைன் இன்ஆகி,சைன்அவுட்ஆவது அல்லது பயன்படுத்திக் கொண்டிருக்கும்போதே அவ்வப்போது கம்ப்யூட்டர் கிராஷ் அவரது போன்ற அறிகுறிகள் தென்பட்டால், உடனடியாக ஒரு ஆன்டிவைரஸ் இன்ஸ்டால் செய்து முழுவதுமாக ஸ்கேன் செய்து பாருங்கள்.



உங்கள் கம்ப்யூட்டரில் தானாக ஏதேனும் பாப் மெசேஜ்கள் வர தொடங்கினால், உங்கள் கம்ப்யூட்டரில் வைரஸ்கள் இருக்கிறது என அர்த்தம்.

நீங்கள் கோப்புகளை சேமித்து வைத்திருக்கும் ஃபோல்டரில், தேவையில்லாத புதிய ஃபோல்டர்கள் தானாக உருவாகி இருந்தாலோ அல்லது பைகளின் அளவில் மாற்றம் தெரிந்தாலோ, யாரோ ஒருவர் உங்கள் சாதனத்தை கட்டுப்படுத்த முயற்சிக்கிறார் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.

நீங்கள் உங்கள் கம்ப்யூட்டரில் ஆன்டிவைரஸ் சாப்ட்வேர் இன்ஸ்டால் செய்திருந்தும், அதில் வைரஸ் இருக்கிறது என்ற எச்சரிக்கை வரவில்லை என்றால், ஏதேனும் புதிய சாப்ட்வேரை இன்ஸ்டால் செய்து பாருங்கள். ஒருவேளை அந்த சாப்ட்வேரை இன்ஸ்டால் செய்யும்போது ஏதேனும் பிரச்சனை இருந்தால், உங்கள் கணினியில் வைரஸ்கள் இருக்க வாய்ப்புள்ளது.

நன்றாக இயங்கிக் கொண்டிருந்த கம்ப்யூட்டர் திடீரென வேகம் குறைவாக இயங்குகிறது என்றாலும், மால்வேர் அல்லது வைரஸ் உள்ளே நுழைந்துவிட்டது என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். இத்தகைய அறிகுறிகள் மூலமாக உங்கள் கம்ப்யூட்டரில் வைரஸ் இருக்கிறது என்பதை நீங்களாகவே கண்டுபிடிக்க முடியும். எனவே உங்கள் சாதனத்தில் வைரஸ் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டால், உடனடியாக நல்ல ஆண்டிவைரஸ் பயன்படுத்தி ஸ்கேன் செய்யுங்கள். பின்னர் பாதிக்கப்பட்ட கோப்புகள் அனைத்தையும் உடனடியாக அழிப்பது நல்லது.





உங்கள் சாதனத்தில் வைரஸ் நுழைவதற்கு நீங்கள்தான் ஏதேனும் வழி ஏற்படுத்திக் கொடுத்திருப்பீர்கள், எனவே அது என்னவென்று கண்டறிந்து உடனடியாக நீக்குங்கள். தேவையில்லாத புதிய சாப்ட்வேர்களை ஒருபோதும் உங்கள் கணினியில் இன்ஸ்டால் செய்யாதீர்கள். இன்டர்நெட் பயன்படுத்தும்போது பாதுகாப்புடன் இருங்கள்.

# இறைவி



அகிலாண்டேஸ்வரி கோபத்தில் கொதித்தாள். "என் மகன், வடிவேலுவை வைச்சு வேடிக்கை காட்டப் போறிங்களா? பொருட்காட்சி, சர்க்கஸுக்கெல்லாம் அவன் வர மாட்டான். கோமாளி வேசம் கட்டமாட்டான். அவன் காலேஜுக்குப் போய் படிக்கப் போறான். இன்னும் ஒரு தரம் இப்படி கேட்டுக்கிட்டு. இந்த வாசப்படி ஏறாதீங்க" என்று கண்டிஷனாக சொல்லி விட்டாள். " பரவாயில்லை; அம்மா! எனக்கு பெரிய படிப்பெல்லாம் படிக்க முடியாது, என்று, டாக்டர் சொல்லிட்டாரே" என்று சொன்னான். வடிவேலு. "அப்படியா! சின்ன படிப்பா படிச்சுக்கோ. சொந்தமாய் வியாபாரம் பண்ணு. செராக்ஸ் கடை வைச்சுப் பிழை. மளிகை கடை வைச்சு ஜீவனம் பண்ணு. சர்க்கஸில் பலரும் சிரிக்க வித்தை காட்டி பிழைக்காதே," என்று திட்டமாக சொன்னவள், வடிவேலுவை, பொருளாதாரத்தில், டிகிரி படிப்பு படிக்க வைத்தாள். அரசு வேலைக்காக போட்டிப் பரிட்சைக்கு தயார் செய்ய கோச்சிங் படிப்பில் சேர்த்து விட்டாள். வடிவேலுவின் தன்னம்பிக்கை மெதுவாய் கூடியது. வடிவேலுவின் முயற்சியால், ஓரிரு தேர்வில் தோல்வி அடைந்தாலும், இறுதியில் அவனுக்கு அரசு வங்கியில் மாற்றுத் திறனாளிகள் ஒதுக்கீட்டில் ஆ்ஃபிஸர் வேலை கிடைக்க; இன்று சமுதாயத்தில் மதிப்பாக வலம் வந்தான். அவனோடு வேலை பார்க்கும் பூம்பாவை அவன் குறையை புறம் தள்ளி அவனை விருப்பமாய் திருமணம் புரிந்தது; அகிலாண்டேஸ்வரிக்கு நிறைவைத் தந்தது. தன்னைத் தவிர, தன் மகனை , வினோதமாய் பார்க்காமல், அன்பு செலுத்தும், பூம்பாவையை அவள் மனதிற்குள், இறைவியாகவே கருதி இருக்கிறாள்; என்றால் மிகையல்ல.



- சசிகலா விஸ்வநாதன்

# "தேனாகும் துன்பம்"

வேலை வாய்ப்புக்கான சாத்தியம் சிறிதும் இல்லாத அந்த மலைக் கிராமத்து இளைஞர்கள் முத்துவும், கார்த்திக்கும்.

முத்து அவ்வப்போது மலைக் காட்டுக்குள் சென்று மரம் ஏறி தேன் கூட்டைக் கலைத்துத் தேன் எடுத்து வருவான். எவ்வளவுதான் பாதுகாப்பு உடைகள் அணிந்திருந்தாலும் தேனீக்களின் கடியிலிருந்து தப்ப முடியாது. கைகள் வீங்கும்... சில நேரம் மரத்திலிருந்து வழுக்கி விழும் அபாயமும் இருக்கும். ஆனாலும் முத்து தைரியமாகச் செல்வான்.
ஒரு முறை கார்த்திக்கையும் தன்னுடன் வரும்படி அழைத்தான்.

“வா... காட்டுக்குள் போய் தேன் எடுத்து வந்து விற்கலாம்... நல்ல வருமானம் வரும்,”
கார்த்திக் சம்மதிக்க இருவரும் காட்டுக்குள் சென்றார்கள்.
ஒரு பெரிய மரத்தில் பெரிய தேன் கூடு தொங்கிக் கொண்டிருந்தது.
ஆயிரக்கணக்கான தேனீக்கள் சத்தமிட்டு சுற்றின.
கார்த்திக் பின் வாங்கினான்.
“ஐயோ... இவ்வளவு தேனீக்களா?. கடிச்சா உசுரே போய்டும்! நான் தூரப் போய் நின்னுக்கறேன்" சொல்லியபடி ஓடியே போனான்.

முத்து அவனைப் பார்த்துச் சிரித்தவாறே மரத்தில் ஏறினான்.
தேனீக்கள் மொய்த்தன. கடித்தன. ஆனாலும் தாங்கிக் கொண்டு தேன் கூட்டை அறுத்தெடுத்தான்.



தேனை ஊருக்குள் கொண்டு வந்து விற்றான். மக்கள் ஆர்வமாக வாங்கினர். நாள் கடந்தபோது முத்துவின் கையில் கொஞ்சம் கொஞ்சமாய் பணம் சேரத் தொடங்கியது.
சகுடிசை இருந்த இடத்தில் நல்ல வீடு வந்தது. வாழ்க்கை வசதி ஆனது.
அதே நேரம் கார்த்திக் நிரந்தர வேலையோ... தொழில் இல்லாமல் சிரமப்பட்டான்.
அந்தச் சூழ்நிலையிலும் கடினமான வேலையைப் பார்த்தால் பின்வாங்குவான்.
சம்பாதிப்பு இல்லாமல் ஏழ்மையில் தத்தளித்தான்.
ஒரு முறை முத்துவை மார்க்கெட்டில் சந்தித்த கார்த்திக், ”அன்னிக்கு நானும் உன் கூட மரம் ஏறிப் பழகியிருக்க வேண்டும்...”
முத்து அவன் தோளைத் தட்டியபடி சொன்னான்.
"நண்பா... துன்பங்களை நேராகச் சந்திக்கத் தயங்குகிறவன் மகிழ்ச்சியைப் பெற முடியாது நண்பா.
தேன் இனிப்பானது... ஆனால் அதை அடைய தேனீக்களின் கடியைத் தாங்கும் தைரியம் வேண்டும்.”
அன்றுதான் கார்த்திக் புரிந்து கொண்டான்.
துன்பத்தைத் தவிர்ப்பவன், இனிப்பான வாழ்க்கையையும் தவிர்த்துவிடுகிறான். என்று.



-முகில் தினகரன்
கோயமுத்தூர்.

# மாயக்கண்ணன் லீலை (பாகம் -2)





- எம்.எல்.பிரபா
ஆதம்பாக்கம்.
சென்னை 88



கம்சனுக்கு அடிமையானவனும், அவனால் ஏவப்பட்டவனுமான திருணாவர்த்தன் என்ற அசுரன் காற்றின் வடிவில் அங்கு வந்தான் .அவன் வரும்பொழுதே மேலிருந்து கோகுலத்தை பார்த்தான். எங்கும் பசுமை நிறைந்து, பூக்கள் பூத்துக் குலுங்கி பார்ப்பதற்கே ரம்யமாக இருந்தது கோகுலம் .அவன் கண்கள் கிருஷ்ணனை தேடியது .கிருஷ்ணன் மற்ற குழந்தைகளுடன் விளையாடிக் கொண்டிருந்தான். யசோதை கிருஷ்ணன் விளையாடுவதை ரசித்து பார்த்தபடியே வாசலில் அமர்ந்தாள். சிறிது நேரம் கழித்து மற்ற இடைச்சியர் தம் குழந்தைகளை தூக்கிக் கொண்டு வீட்டிற்கு சென்றனர். கிருஷ்ணனும் தன் அம்மாவை பார்த்து அவருடைய மடியில் வந்து அமர்ந்தான். யசோதையும் குழந்தை கண்ணனை தன் மடியில் வைத்து கொஞ்சினாள் .சிறிது நேரம் ஆக ஆக குழந்தை பாரமாக மாற ஆரம்பித்தது. பாரத்தை அவளால் தாங்க முடியவில்லை. சிறிய குழந்தை தானே ஏன் திடீரென்று இப்படி கனமாக இருக்கிறது? என்று அவளுக்கு புரியவில்லை .உடனே யசோதை குழந்தையை மடியில் இருந்து கீழே இறக்கி தரையில் உட்கார வைத்தாள். குழந்தைக்கு ஏதாவது உடம்பு சரியில்லையா? ஏன் திடீரென்று கனமாக மாறியது என்று யோசிக்க ஆரம்பித்தாள். அவள் பெருமாளை நினைத்துக் கொண்டு 'பகவானே நீதான் என் குழந்தையை பாதுகாக்க வேண்டும்' என்று சொல்லிக்கொண்டே அவள் வீட்டினுள் சென்று வேலை செய்ய ஆரம்பித்தாள். இந்த இந்த சமயத்துக்காக திருணாவர்த்தன் காத்துக் கொண்டிருந்தான். உடனே அவன், அதிக பலத்துடன் சுழல் காற்றாக மாறி, உருவெடுத்து கீழே உட்கார்ந்து இருந்த குழந்தை கிருஷ்ணனை அவன் தூக்கினான் .குழந்தை தானே என்று மெதுவாக தூக்கினான். ஆனால் குழந்தை கிருஷ்ணனோ மிகவும் கனமாக இருந்தார். அவனால் தூக்க முடியவில்லை .அவன் அசுரன் அல்லவா, ஆதலால் மேலும் தன்னுடைய பலத்தை அதிகரித்துக் கொண்டு குழந்தை கிருஷ்ணனை சுழல் காற்று வடிவம் எடுத்து எல்லோருடைய கண்களிலும் புழுதியை வாரி இறைத்து ,எல்லா திசைகளிலும் பயங்கர சத்தத்தை எதிரொலிக்கச் செய்தான். கோகுலம் முழுவதும் பயத்தால் நடுங்கியது .கீழே உட்கார்ந்து இருந்த கிருஷ்ணனை தூக்கிக் கொண்டு ஆகாயத்திற்கு சென்றான் திரு ணாவர்த்தன் .அவன் மேலே செல்லச் செல்ல குழந்தை கண்ணனின் எடையும் கூடிக் கொண்டே போனது. அவன் தான் சுமந்த பாரத்தின் மிகுதியால் வேகம் குறைந்து சக்தி அற்றவனாக மாறினான். மிகவும் பாரமாக இருந்ததால் அந்த அற்புதக் குழந்தையை பாறாங்கல்லோ ?என்று எண்ணி விட்டுவிட விரும்பினான். ஆனால் அவனால் முடியவில்லை. ஏனென்றால் அவன் கழுத்தை குழந்தை கிருஷ்ணனின் கைகள் இறுக கெட்டியாக பிடித்துக் கொண்டது. அவனால் குழந்தையை விட முடியவில்லை. வலியும் அதிகமாக இருந்ததால் ,கழுத்தில் இருந்த குழந்தையின் கைகளையும் அவனால் எடுக்க முடியவில்லை .நெடு நேர போராட்டத்திற்கு பின் அவன் கண் பார்வை இழந்து குரலும் வெளி வராமல் உயிர் துறந்தான் அந்த அரக்கன். அவன் கோகுலத்தில் குழந்தை கிருஷ்ணனுடன் கீழே விழுந்தான். திருணா வர்த்தன் கீழே விழும் பொழுதே அவன் இறந்து விட்டான் .ஆகாய மார்க்கத்தில் அசுரனால் கொண்டு செல்லப் பட்டு மரணத்தின் வாயிலில் இருந்து விடுபட்டு பத்திரமாய் வந்த அந்த குழந்தையை மீண்டும் வாரி அணைத்துக் கொண்டாள் யசோதை. ஊர்மக்கள் எல்லோரும் ஆச்சரியத்துடன் பார்த்தார்கள். என்ன அதிசயம் என்று பிரமித்தார்கள். எல்லோருக்கும் பயம் நீங்கியது .சந்தோஷம் அடைந்தார்கள். நல்லவேளை குழந்தைக்கு ஒன்றும் ஆகவில்லை என்று யசோதை கூறினாள். ஆனால் குழந்தைக்கு அடிக்கடி ஆபத்து வருவதைக் கண்டு இன்னும் நாம் கவனமாக கிருஷ்ணனை பாதுகாக்க வேண்டும் என்று ஊர் மக்கள் யசோதையிடம் கூறினார்கள். காட்டுத்தீயாய் பரவியது இச்செய்தி. இந்த செய்தியை கேட்டவுடன் கம்சன் மேலும் கோபம் அடைந்தான். இத்தனை பராக்கிரமம் கொண்ட திருணாவர்த்தனால் கிருஷ்ணனை கொல்ல முடியவில்லையே? என்று தனக்குள் கூறியபடி அடுத்த முயற்சியை மேற்கொள்ள நினைத்தான் கம்சன்.

தொடரும்..

# அதிசயம் நிறைந்த அன்னை ஜ்வாலாமுகி!




ஹிமாச்சல பிரதேச மாநிலம், காங்ராவில் வீற்றிருக்கும் அருள்மிகு ஜ்வாலாமுகி திருக்கோவிலின் மெய்சிலிர்க்க வைக்கும் சிறப்புகள் இதோ:

**சக்தி பீடம்:** அன்னை ஆதிபராசக்தியின் 51 சக்தி பீடங்களில் இது 9-வது பீடம். சதி தேவியின் நாக்கு விழுந்த புனித தலம் இது.

**அதிசய தீச்சுடர்:** இங்கே அன்னைக்கு உருவம் கிடையாது. பாறை இடுக்குகளிலிருந்து தானாகவே தோன்றி எரியும் நீல நிறத் தீ ஜுவாலைகளையே அன்னையாக வழிபடுகிறோம்.

**எண்ணெய் இல்லை.. திரி இல்லை..:** பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக இந்தத் தீச்சுடர் எரிய எவ்வித எண்ணெயோ, திரியோ தேவையில்லை! அறிவியலாலும் விளக்க முடியாத ஆன்மீக அதிசயம் இது.

**9 வடிவங்கள்:** இங்கு ஒன்பது இடங்களில் ஜுவாலைகள் எரிகின்றன. பிரதான ஜுவாலை மகாகாளி என்றும், மற்றவை லட்சுமி, சரஸ்வதி, அன்னபூரணி உள்ளிட்ட பெயர்களிலும் வணங்கப்படுகின்றன.

**அக்பரின் காணிக்கை:** முகலாய அரசர் அக்பர் எவ்வளவோ முயன்றும் இந்தத் தீயை அணைக்க முடியாமல், பின் அன்னையின் சக்தியை உணர்ந்து இங்கு தங்கக் குடையைக் காணிக்கையாக அளித்தார்.

**நிவாரணம்:** மன வேதனைகள் நீங்கவும், திருஷ்டி மற்றும் எதிர்மறை சக்திகள் விலகவும் இத்தலம் ஒரு சிறந்த பரிகாரத் தலமாகும்.

**இடம்:** ஜ்வாலாமுகி, காங்ரா, ஹிமாச்சல பிரதேசம்.

ஓம் சக்தி! பராசக்தி!

தகவல்:
முனைவர்
**இராம.வேதநாயகம்.**

தினம் ஒரு தலைவர்கள்

# கரீம் கனி வரலாறு

டி.எம்.அப்துல் கரீம் கானி தமிழ்நாட்டின் சிவகங்கை மாவட்டத்தில் பிறந்து இளமைப் பருவத்தில் பர்மாவிற்கு (இப்போது மியான்மர்) குடிபெயர்ந்தார். சூலியா சங்கத்தின் இளைஞர் சங்கத்தின் செயலாளராக நியமிக்கப்பட்டபோது அவரது நிறுவனத் திறன்கள் ஆரம்பத்திலேயே வெளிப்பட்டன. சூலியாக்கள் பெரும்பாலும் ஒரு காலத்தில் உலோக வேலைகளில் ஈடுபட்ட முஸ்லிம்கள். ( பர்மா முஸ்லிம்களில் சூலியா என்ற சொல் , ஒரு காலத்தில் இப்பகுதியில் ஆதிக்கம் செலுத்திய பேரரசான சோழரிடமிருந்து வந்தது என்று மோஷே யேகர் கூறுகிறார்).

கானிக்கு மொழிகள் மீது இருந்த மற்றொரு தெளிவான திறமை. ஒரு பத்திரிகையாளராக, அவர் தமிழ் மற்றும் பர்மிய பத்திரிகைகளில் பணியாற்றினார், மேலும் அந்த இரண்டு மொழிகளையும் அறிந்திருந்ததோடு, அரபு, உருது மற்றும் பின்னர் மலாய் மொழிகளையும் பேசும் வசதியும் அவருக்கு இருந்தது.



கரீம் கனி தென்கிழக்கு ஆசியாவில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ஒரு அரசியல்வாதி . இரண்டாம் உலகப் போருக்கு முன்பு, கரீம் கனி பர்மாவில் முதல் பர்மா பிரதமர் (1937 1939) மற்றும் 1942 முதல் 1945 வரை பர்மா மாநிலத் தலைவராக இருந்த டாக்டர் பா மாவின் கீழ் நாடாளுமன்ற செயலாளராக இருந்தார்.

இரண்டாம் உலகப் போரின் போது , கனி சுபாஷ் போஸின் ஆசாத் ஹிந்த் அரசாங்கத்தின் அமைச்சராகி மலாயாவில் இருந்தார் . அவர் "தி முஸ்லிம் பப்ளிஷிங் ஹவுஸ்" இன் மேலாளராகவும், மலாயன் தமிழ் நாளிதழான மலாயா நன்பனின் ஆசிரியராகவும், சினரன் என்ற பெயரில் மலாய் பதிப்பான டானின் ஆசிரியராகவும் இருந்தார். கனி முஸ்லிம் லீக்கிலும் ஈடுபட்டிருந்தார், மேலும் அனைத்து மலாயா முஸ்லிம் மிஷனரி சொசைட்டியின் (AM-MMS) தலைவராகவும் , பல அமைப்புகளில் அதிகாரியாகவும் இருந்தார். இரண்டாம் உலகப் போர் முடிந்த பிறகு, கானி தென்கிழக்கு ஆசிய முஸ்லிம் அரசியலில் ஈடுபட்டார், குறிப்பாக 1950 இல் சிங்கப்பூரில் நடந்த மரியா ஹெர்டாக் கலவரத்தில் ஈடுபட்டார்.

பர்மாவில் செயல்பாடுகள்

கரீம் கனி பர்மாவில் தமிழ் மற்றும் பர்மிய செய்தித்தாள்களின் ஆசிரியராக இருந்தார். அவர் சூலியா சங்கத்தின் இளைஞர் கழகத்தின் செயலாளராக இருந்தார், மேலும் 1932 இல் பர்மா சட்டமன்றத்திற்கும் 1936 இல் பிரதிநிதிகள் சபைக்கும் தேர்ந்தெடுக்கப்பட்டார். பிரிட்டிஷ் உளவுத்துறை அறிக்கையில் "உடனடியாக கைது செய்யப்பட வேண்டிய" நபர்களின் பட்டியலில் அவரது பெயர் சேர்க்கப்பட்டுள்ளது. இரண்டாம் உலகப் போருக்கு முன்பு கரீம் கனி டாக்டர் பா மாவின் கீழ் பர்மாவில் நாடாளுமன்ற செயலாளராக இருந்தார் .

மலாயாவில் செயல்பாடுகள்

இரண்டாம் உலகப் போரின் போது , கனி சுபாஷ் போஸின் ஆசாத் ஹிந்த் அரசாங்கத்தில் மாநில அமைச்சராக ஆனார் , மலாயாவில் இருந்தார். அவர் "தி முஸ்லிம் பப்ளிஷிங் ஹவுஸ்" இன் மேலாளராகவும், மலேசிய தமிழ் நாளிதழான மலாயன் நன்பனின் ஆசிரியராகவும், சினாரன் என்ற பெயரில் மலாய் பதிப்பான டானின் ஆசிரியராகவும் இருந்தார். கனி முஸ்லிம் லீக்கிலும் ஈடுபட்டார், மேலும் அனைத்து மலாயா முஸ்லிம் மிஷனரி சொசைட்டியின் தலைவராகவும், பல அமைப்புகளில் அதிகாரியாகவும் இருந்தார் . இரண்டாம் உலகப் போர் முடிந்த பிறகு , கனி தென்கிழக்கு ஆசிய முஸ்லிம் அரசியலில் ஈடுபட்டார், குறிப்பாக 1950 இல் சிங்கப்பூரில் நடந்த மரியா ஹெர்டாக் கலவரத்தில் ஈடுபட்டார் .

மரியா ஹெர்டாக் கலவரங்கள்

மரியா ஹெர்டோக் கலவரம் அல்லது நத்ரா கலவரம் 1950 டிசம்பர் 11 அன்று சிங்கப்பூரில் தொடங்கியது , அப்போது 13 வயதான மரியா ஹெர்டோக்கை (அல்லது பெர்த்தா ஹெர்டோக்) தனது தாயாகக் கருதிய அமினா பின்டே முகமதுவின் பராமரிப்பில் ஒரு முஸ்லீமாக வளர்க்கப்பட்ட பின்னர், அவரது உயிரியல் டச்சு கத்தோலிக்க பெற்றோருக்கு வழங்க நீதிமன்றத்



தீர்ப்பைத் தொடர்ந்து . டிசம்பர் 13 ஆம் தேதி நண்பகல் வரை கலவரம் நீடித்தது, 18 பேர் கொல்லப்பட்டனர், 173 பேர் காயமடைந்தனர் மற்றும் பல சொத்துக்கள் சேதமடைந்தன - சிங்கப்பூரில் இதுவரை கண்டிராத மிக மோசமான சம்பவம். ஆகஸ்ட் 1950 இல் நீதிமன்றத் தீர்ப்பும், காவல் தொடர்பான சட்டப் போராட்டத்தின் பரவலான செய்திகளும் மலாயா மற்றும் தென்கிழக்கு ஆசிய முஸ்லிம் மக்களிடையே பரவலான கிளர்ச்சிகளைத் தூண்டின, அவர்கள் மரியாவை முஸ்லிம் நம்பிக்கையைப் பின்பற்றுபவராகக் கருதினர் மற்றும் பத்திரிகை செய்திகளை மரியாவை ஒரு கிறிஸ்தவராக சித்தரிப்பதாக விளக்கினர். நத்ரா அதிரடி குழு என்று தன்னை அழைத்துக் கொள்ளும் ஒரு அமைப்பு கரீம் கானியின் தலைமையில் முறையாக அமைக்கப்பட்டது. இந்த தீவிர அமைப்பு அதன் செய்தித்தாளான டான் ( டான் அல்ல , பாகிஸ்தானில் வெளியிடப்பட்ட ஒரு ஆங்கில செய்தித்தாள்) இன் இலவச நகல்களை விநியோகிப்பதன் மூலம் உள்ளூர் முஸ்லிம்களிடையே ஆதரவைக் கோரியது. டிசம்பர் 8 ஆம் தேதி சுல்தான் மசூதியில் கரீம் கானி ஒரு திறந்த உரையை நிகழ்த்தினார், அதில் அவர் ஜிஹாத்தை இறுதி முயற்சியாகக் குறிப்பிட்டார். கானியின் கருத்துகளைத் தொடர்ந்து டிசம்பர் 11 ஆம் தேதி தொடங்கி 13 ஆம் தேதி வரை பரவலான கலவரங்களும் வன்முறையும் தொடர்ந்தன. மொத்தத்தில், 18 பேர் கொல்லப்பட்டனர், அவர்களில் ஏழு ஐரோப்பியர்கள் அல்லது யூரேசியர்கள், இரண்டு காவல்துறை அதிகாரிகள் மற்றும் ஒன்பது கலவரக்காரர்கள் காவல்துறை அல்லது இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டனர், 173 பேர் காயமடைந்தனர், அவர்களில் பலர் படுகாயமடைந்தனர், 119 வாகனங்கள் சேதமடைந்தன, குறைந்தது இரண்டு கட்டிடங்கள் தீக்கிரையாக்கப்பட்டன. அதைத் தொடர்ந்து, இரண்டு வாரங்கள் 24 மணி நேர ஊரடங்கு உத்தரவு விதிக்கப்பட்டது, மேலும் முழுமையான சட்டம் ஒழுங்கு மீண்டும் நிலைநாட்டப்படுவதற்கு நீண்ட காலம் ஆனது.

கலவரத்திற்குப் பிறகு, காவல்துறை ஒரு சிறப்பு புலனாய்வுப் பிரிவை அமைத்து 778 பேரைக் கைது செய்தது. அவர்களில் கரீம் கானியும் ஒருவர். இவர் நாத்ரா நடவடிக்கைக் குழுவின் பல உறுப்பினர்களுடன் கைது செய்யப்பட்டு, கலவரத்தில் ஈடுபட்டதற்காக அவசரகாலச் சட்டம் 20 இன் கீழ் 15 மாதங்கள் செயிண்ட் ஜான்ஸ் தீவில் உள்ள தடுப்பு முகாமில் வைக்கப்பட்டு, பின்னர் உடல்நலக் குறைவு காரணமாக விடுவிக்கப்பட்டார்.

மரியாவுக்காக சிங்கப்பூரைச் சேர்ந்த பிரபல வழக்கறிஞர் டேவிட் மார்ஷல் வாதாடினார். அவரது பிற்காலத்தில், "இந்த வழக்கு வேறு எந்த சூழ்நிலையிலும் விசாரிக்கப்பட்டிருந்தால் தீர்ப்பு வேறுவிதமாக இருந்திருக்கும்" என்று அவர் குறிப்பிட்டார். இந்த வழக்கின் போது ஆங்கிலேயர்கள் தங்கள் செல்வாக்கைத் தக்க வைத்துக் கொள்ள முயன்றனர், இது முஸ்லிம் கவலைகளை விட கிறிஸ்தவ நலன்களுக்கு சாதகமாக இருப்பதாக சிலர் கருதினர்.

கலவரத்தைத் தொடர்ந்து, முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் உட்பட ஏராளமான நபர்கள் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டது. அவர்களில் பல தமிழ் முஸ்லிம் தலைவர்களும் தூக்கிலிடப்பட்டனர். இந்த தமிழ் முஸ்லிம் வர்த்தகர்கள் புதிதாக சுதந்திரம் பெற்ற மலாயாவின் இஸ்லாமிய சின்னங்களாக இருந்தனர்.

தண்டனை பெற்ற அனைவரும் விடுவிக்கப்பட்டனர், ஆனால் பிரிட்டிஷ் அதிகாரிகள் கானியின் அரசியல் ஈடுபாடு காரணமாக அவரை காலனியில் இருந்து நீக்க முயன்றனர். இந்திய குடிமகனாக இருந்ததால், கானியை ஆங்கிலேயர்கள் இந்திய அரசாங்கத்திற்கு வழங்க முன்வந்தனர், ஆனால் அவரது சாதனை மற்றும் நடந்து வரும் தேர்தல் காலம் காரணமாக அவர்கள் மறுத்துவிட்டனர். பஷீர் மல்லால் பாகிஸ்தானில் உள்ள அவரது சில கூட்டாளிகளுடன் தொடர்பு கொண்டார், அதன் பிறகு உலக முஸ்லிம் காங்கிரஸின் பொதுச் செயலாளர் இனாமல்லா கான் அவரை முறையாக கராச்சிக்கு அழைத்தார் . அவர் கராச்சியில் ஒரு பதிப்பாளராக தனது வாழ்க்கையை மீண்டும் தொடங்கினார். அந்த நேரத்தில் அவரது அரசியல் செயல்பாடு பாகிஸ்தானில் குறிப்பிடத்தக்க ஆதரவைப் பெறவில்லை. அவர் தொடர்ந்து ஆங்கிலேயர்களையும் அவர்களின் கொள்கைகளையும் விமர்சித்து வந்தார். ஹாஜி மைதீன் உள்ளிட்ட ஆதாரங்கள், கானி 1952 மற்றும் 1960 க்கு இடையில் பாகிஸ்தானில் காலமானார் என்று கூறுகின்றன, இருப்பினும் சரியான தேதி தெளிவாக இல்லை.

# வீட்டில் உயிரற்ற நிலையில் கண்டெடுக்கப்பட்ட நடிகர்



ரசிகன், அண்ணன் தம்பி , மாடம்பி போன்ற மலையாள திரைப்படங்களில் நடித்த குழந்தை நட்சத்திரம் ஹரிமுரளி, கேரளாவின் பையனூரில் உள்ள அவரது வீட்டில் இறந்து கிடந்தார். அவருக்கு வயது 27 என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

குழந்தை நட்சத்திரமாக சுமார் 50 படங்களில் நடித்த பிறகு, ஹரிமுரளி திரைப்படத் துறையில் VFX கலைஞராக தீவிரமாக செயல்பட்டார். தற்போது உயிரிழந்த ஹரிமுரளியின் உடல் பையனூர் பேபி மெமோரியல் மருத்துவமனையின் பிணவறையில் உள்ளது.

ஹரிமுரளி, பிரபல குழந்தை நட்சத்திரமாக இருந்த காலத்தில், மலையாளத்தின் முன்னணி நட்சத்திரங்களுடன் இணைந்து பணியாற்றினார். முன்னாள் நடிகர் ஹரிமுரளி, 2008 ஆம் ஆண்டு வெளியான அண்ணன் தம்பி படத்தில் மலையாள சூப்பர் ஸ்டார் மம்முட்டியுடன் இணைந்து நடித்தார், அதே நேரத்தில் 2004-ஆம் ஆண்டு வெளியான ரசிகன் படத்தில் திலீப்புடன் இணைந்து நடித்தார்.

ஹரிமுரளியின் படத்தொகுப்பில் உலகம் சுட்டும் வாலிபன், டான் மற்றும் பட்டணத்தில் பூதம் ஆகிய மலையாளப் படங்களும் அடங்கும். 2015-ஆம் ஆண்டு பிருத்விராஜ் சுகுமாரன் நடித்த அமர் அக்பர் ஆண்டனி படத்திலும் அவர் நடித்தார்.



நடிகை யாஷிகா ஆனந்த் தாராள கவர்ச்சியாக புகைப்படங்களை வெளியிட்டு ரசிகர்களை கவர்ந்து வருகிறார். இன்ஸ்டாவில் அவரது போட்டோக்களை பார்ப்பதற்கே 4.2 மில்லியன் ரசிகர்கள் இருக்கிறார்கள்.

சமீப காலமாக யாஷிகா ஆனந்த் உச்சகட்ட கவர்ச்சி உடையில் போட்டோக்கள் வெளியிட்டு வருகிறார்.

தற்போது ரெட் ஹாட் உடையில் யாஷிகா போஸ் கொடுத்திருக்கும் போட்டோஷூட் ஸ்டில்கள் வெளியாகி வைரல் ஆகி இருக்கிறது. இதோ பாருங்க.

# கமல் சார் ஆஃபீஸ்-ல கூப்பிட்டாங்க, நான் நம்பல



நடிகர் சிவகார்த்திகேயன் தயாரிப்பில் அறிமுக இயக்குநர் சிவகுமார் முருகேசன் இயக்கத்தில் உருவாகி கடந்த மாதம் வெளியான திரைப்படம் "தாய் கிழவி." ராதிகா முதன்மை கதாபாத்திரத்தில் நடித்த இந்தப் படம் விமர்சன ரீதியிலும், வர்த்தக ரீதியிலும் நல்ல வரவேற்பை பெற்றது. இந்தப் படம் வெளியான பத்து நாட்களில் உலக அளவில் ரூ. 50 கோடி வசூலை கடந்து சாதனை படைத்தது.

இந்த நிலையில், தாய் கிழவி திரைப்படத்தின் வெற்றி கொண்டாட்ட நிகழ்ச்சி சென்னையில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு பேசிய இயக்குநரும், நடிகருமான சிங்கம் புலி சமீபத்தில் கமல் ஹாசனை சந்தித்தது குறித்த அனுபவங்களை பகிர்ந்து கொண்டார்.

அப்போது அவர், "இந்தப் படத்தை வெற்றிப் படமாக்கிய தம்பி சிவகார்த்திகேயனுக்கும், இயக்குநர் தம்பி சிவகுமாருக்கும் படக்குழுவினருக்கும் ரசிகர்களுக்கும் நன்றி. 'மாயாண்டி குடும்பத்தார்', 'மகாராஜா' படங்களுக்குப் பிறகு 'தாய் கிழவி' படத்தில் இந்த கதாபாத்திரத்திற்குதான் எனக்கு அதிக ஃபோன்கால் வந்தது.

படம் வெளியாவதற்கு முன்பு கமல் சாரை பார்க்க வேண்டும் என்ற ஆசையை மேடையில் வெளிப்படுத்தி இருந்தேன். இரண்டு நாட்களில் கமல் சார் அலுவலகத்தில் இருந்து எனக்கு அழைப்பு வந்தது. முதலில் அந்த அழைப்பு பொய்யாக இருக்குமோ என்றே நினைத்தேன். பிறகு, அவரை சந்தித்த போது கமல் சார் என்னிடம் நீங்கள் ஏன் இதுவரை என்னை சந்திக்காமல் இருந்தீர்கள்? என்றார்.

மேலும், ஸ்ருதியிடம் நான் அவரது பி.ஆர். என்று குறிப்பிட்டார். இவ்வளவு பிஸி ஷெட்யூலிலும் எனக்கு நேரம் ஒதுக்கி கமல் சார் என்னிடம் பேசியதற்கு அவரிடம் நன்றி தெரிவித்தேன். அவர் அதற்கு, எனக்கு சினிமா பிடிக்கும் என்றார்," தெரிவித்தார்.

நிவாஸ் கே. பிரசன்னா இசையமைத்துள்ள 'தாய் கிழவி' திரைப்படத்தில் சிங்கம் புலி, அருள் தாஸ், பால சரவணன், முனிஷ்காந்த், இளவரசு உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர்.

# 'வெள்ள குதிர' இயக்குநரின் புதிய திரைப்பட அப்டேட்



சரண்ராஜ் செந்தில்குமார் இயக்கி தயாரித்துள்ள 'மண்டவெட்டி' திரைப்படத்தின் படப்பிடிப்பு வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளது. நடிகை கோமலி பிரசாத் கதாநாயகியாக நடித்துள்ள இந்த படம் சீரியஸ் கதைக்களத்தை அடிப்படையாகக் கொண்டதால் படப்பிடிப்பு நீண்ட நாட்கள் நடைபெற்றது.

'மண்டவெட்டி' டார்க், சூப்பர்நேச்சுரல் கிரைம் திரில்லர் படமாக உருவாகியுள்ளது. இழப்பு, அடையாளம் மற்றும் சர்வைவல் ஆகியவற்றைப் பற்றி ஒரு பெண்ணின் உளவியல் மற்றும் உணர்வுப்பூர்வமான பயணத்தையும் மனித உணர்வுகளின் ஆழத்தையும் அதற்கு பின்னால் உள்ள மர்மத்தையும் பரபரப்பான களத்தில் இந்தப் படம் பேசும்.

கதையின் தன்மை மாறாமல் இருக்க வேண்டும் என்பதற்காக, முழு படப்பிடிப்பும் ஒரே கட்டமாக நடைபெற்றது. கடும் வெப்பம் மற்றும் குளிர் என பல சவால்களையும் கடந்து தினமும் சுமார் 100 கிலோமீட்டர் பயணம் செய்து படக்குழு படப்பிடிப்பு தளத்தை சென்றடைந்தது. முள் நிறைந்த கடினமான நிலப்பரப்பும், கடும் வெயிலும் சவாலாக இருந்தாலும் அவை கதைக்கு கூடுதல் பலம் சேர்த்துள்ளதாக படக்குழு தெரிவித்துள்ளது.

'மண்டவெட்டி' படத்தின் படப்பிடிப்பு நிறைவு பெற்றுள்ள நிலையில் அதன் போஸ்ட் புரொடக்ஷன் பணிகள் தற்போது தொடங்கியுள்ளது. வலுவான கதை, அர்ப்பணிப்புள்ள படக்குழு என 'மண்டவெட்டி' திரைப்படம் பார்வையாளர்களுக்கு வித்தியாசமான மற்றும் ஈர்க்கக்கூடிய திரை அனுபவத்தை வழங்க இருக்கிறது.

# அடுத்த படத்தின் இயக்குநரை அறிமுகப்படுத்திய SK

சிவகார்த்திகேயன் தயாரிப்பில் ராதிகா நடித்துள்ள புதிய படம் 'தாய் கிழவி'. இந்தப் படத்தை அறிமுக இயக்குநர் சிவகுமார் முருகேசன் இயக்கியுள்ளார். நிவாஸ் கே. பிரசன்னா இசையமைத்துள்ள இப்படத்தில் சிங்கம் புலி, அருள்தாஸ், பாலசரவணன், முனிஷ்காந்த், இளவரசு உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர்.

இப்படம் கடந்த 27 ஆம் தேதி திரையரங்குகளில் வெளியான நிலையில், ரசிகர்களின் வரவேற்பை பெற்று வெளியான 10 நாட்களில் உலக அளவில் ரூ.50 கோடி வசூலை கடந்து சாதனை படைத்தது.

இந்நிலையில், தாய் கிழவி படத்தின் வெற்றி கொண்டாட்ட நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த விழாவில் தனது




தயாரிப்பு நிறுவனத்தின் அடுத்த படத்தை இயக்கும் இயக்குனரை சிவகார்த்தியன் அறிமுகப்படுத்தினார்.

SK புரொடக்சன்ஸ் தயாரிக்கும் 10 ஆவது படத்தை அம்மாமுத்து சூர்யா இயக்குவார் என்று மேடையில் வைத்து அவரை சிவகார்த்திகேயன் அறிமுகப்படுத்தினார்.

கடந்த 2024ஆம் ஆண்டு தமிழில் வெளிவந்த லப்பர் பந்து திரைப்படத்தின் மூலம் பிரபலமானவர் நடிகை சுவாசிகா. இதை தொடர்ந்து மாமன் திரைப்படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்திருந்தார். அடுத்ததாக இவர் நடிப்பில் கருப்பு படம் வெளிவரவுள்ளது. இப்படத்தில் முதல் முறையாக சூர்யாவுடன் இணைந்து நடித்திருக்கிறார்.

நடிகை சுவாசிகாவின் கணவர் பிரபல சீரியல் நடிகர் பிரேம் ஜேக்கப். இவர்கள் இருவருக்கும் கடந்த 2024ஆம் ஆண்டு திருமணம் நடைபெற்றது. பிரேம் விஜய் டிவியில் ஒளிபரப்பான நீ நான் காதல் சீரியல் மூலம் பிரபலமானார். இதை தொடர்ந்து தற்போது அழகே அழகு சீரியலில் நடித்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில், சுவாசிகா - பிரேம் ஜேக்கப் இருவரும் ரொமான்டிக்காக எடுத்துக்கொண்ட போட்டோஷூட் புகைப்படங்க தற்போது வெளியாகியுள்ளது இதோ பாருங்க:



# முடிவுக்கு வந்த 4 ஆண்டு கால திருமண வாழ்க்கை..!



பிரபல திரைப்பட நடிகை ஹன்சிகா காதல் கணவர் சோஹேல் கதுரியாவை சட்டப்படி பிரிந்தார்.

மும்பை நீதிமன்றம் விவாகரத்து வழங்கியதை அடுத்து ஹன்சிகாவின் 4 ஆண்டு காதல் திருமண வாழ்க்கை முடிவுக்கு வந்தது.

கணவர் சோஹால் கதுரியாவிடம் இருந்து விவகாரத்து பெற்ற நடிகை ஹன்சிகா ஜீவனாம்சம் வேண்டாம் என கூறிவிட்டார்.

நடிகை ஸ்ரீலீலா தற்போது இளசுகளை அதிகம் கவர்ந்த ஹீரோயினாக வலம் வருகிறார். அவர் நடிக்கும் படங்கள் மட்டுமின்றி, அவர் கவர்ச்சியாக பாடல்களில் தோன்றினாலே அந்த பாடல் மிகப்பெரிய ஹிட் ஆகிறது.

ஸ்ரீலீலா சமீபத்தில் MBBS படிப்பை முடித்து பட்டம் பெற்று இருந்தார். அதனால் அவரை ரசிகர்கள் டாக்டர் ஸ்ரீலீலா என அழைக்க தொடங்கி இருக்கிறார்கள்.

இந்நிலையில் ஸ்ரீலீலா அழகிய சேலையில் போஸ் கொடுத்திருக்கும் ஸ்டில்களை வெளியிட்டு இருக்கிறது. அது ரசிகர்களை கவர்ந்து வருகிறது. இதோ..



# காதலித்து திருமணம் செய்தார் கும்பமேளா அழகி



மோனலிசாவை வேறு ஒருவருக்கு திருமணம் செய்து வைக்க அவர் பெற்றோர் முடிவு செய்தனர்.

பெற்றோர் தங்கள் காதலை எதிர்த்ததால், மோனலிசா தனது காதலனுடன் கேரளா வந்தடைந்தார்.

மகா கும்பமேளாவில் வீதி வீதியாக பாசிமணி மாலை விற்றுக் கொண்டிருந்தவர் மோனலிசா. பாசிமணி வாங்கலியோ என கூவி விற்றுக் கொண்டிருந்த மோனலிசாவின் காந்த கண்கள் சமூக வலைதளங்களில் டிரெண்டிங்காகி ஒரே நாளில் நாடு முழுவதும் பிரபலமானார். இதை தொடர்ந்து அவருடன் செல்பி எடுக்க ஏராளமான இளைஞர்கள் திரண்டதால் அவர் சொந்த ஊருக்கு அனுப்பப்பட்டார்.

இதை தொடர்ந்து மோனலிசா சினிமாவில் அறிமுகமாகி நடித்து வருகிறார். மேலும் கடை திறப்பு விழாக்களிலும் பங்கேற்று அவரது வாழ்க்கை உச்சத்துக்கு சென்று கொண்டிருக்கிறது.

மோனலிசா நடிக்கும் படத்தின் படப்பிடிப்பு திருவனந்தபுரத்தின் பூவாரில் நடந்து வருகிறது. இங்கிருந்து, மோனலிசாவும் அவரது காதலன் ஃபர்மான் கானும் தம்பனூர் காவல் நிலையத்திற்குச் சென்று தங்களது காதலுக்கு பெற்றோர் எதிர்ப்பு தெரிவிப்பதாக புகார் அளித்தனர்.

மத்தியப் பிரதேச மாநிலம் இந்தூரைச் சேர்ந்த மோனலிசா போஸ்லேவும், மகாராஷ்டிராவைச் சேர்ந்த ஃபர்மான் கானும் ஒன்றரை வருடங்களாக காதலித்து வந்துள்ளனர். பேஸ்புக் மூலம் சந்தித்து பேசி பழகி இவர்கள் காதலிக்க தொடங்கியுள்ளனர். மோனாலிசாவின் காதலுக்கு அவரது பெற்றோர் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர்.

மோனலிசாவை வேறு ஒருவருக்கு திருமணம் செய்து வைக்க அவர் பெற்றோர் முடிவு செய்தனர். பெற்றோர் தங்கள் காதலை எதிர்த்ததால், மோனலிசா தனது காதலனுடன் கேரளா வந்தடைந்தார். மற்ற மாநிலங்களில் தங்கள் உறவுக்கு பெரும் எதிர்ப்பு ஏற்படும் என்பதில் உறுதியாக இருந்ததால் கேரளாவைத் தேர்ந்தெடுத்ததாக இருவரும் தெரிவித்தனர்.

இந்நிலையில், மோனலிசா திருவனந்தபுரத்தில் உள்ள கோயிலில் வைத்து தனது காதலன் ஃபர்மான் கானை திருமணம் செய்தார். இருவரின் பாதுகாப்புக்கும் கேரளா அரசு உறுதி ஏற்றுள்ளது.

மோனலிசா திருமணத்தில் கேரளா அமைச்சர் சிவன்குட்டி மற்றும் சிபிஎம் கேரளா மாநில செயலாளர் எம். வி. கோவிந்தன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

திருமணத்திற்கு பிறகு பேசிய அமைச்சர் சிவன்குட்டி, "இதுதான் உண்மையான கேரளா ஸ்டோரி. இந்த 2 நபர்களின் தைரியத்திற்காக நாம் பெருமைப்பட வேண்டும். கேரளா உண்மையிலேயே சுதந்திரமாக வாழ்வதற்கான இடமாகும்" என்று தெரிவித்தார்.

இதையடுத்து பேசிய சிபிஎம் மாநில செயலாளர் எம்.வி. கோவிந்தன், "இரண்டு நபர்கள் திருமணம் செய்து கொள்ள விரும்புகிறார்கள். இந்த சிறப்பு தருணத்திற்காக அவர்கள் கேரளாவையும், நாராயண குருவால் கட்டப்பட்ட ஒரு கோவிலையும் தேர்ந்தெடுத்தனர்" என்று கூறினார்.

# திருநங்கை மீது நடிகர் நாஞ்சில் விஜயன் அவதூறு புகார்



சமூக வலைதளத்தில் பொய்யான குற்றச்சாட்டுகளை பரப்புவதாக திருநங்கை மீது நாஞ்சில் விஜயன் புகார்.

பிரபல சின்னத்திரை நடிகர் நாஞ்சில் விஜயன் திருநங்கை மீது சென்னை காவல் ஆணையர் அலுவலகத்தில் புகார் அளித்துள்ளார்.

பணம் பறிக்கும் நோக்கத்தில் சமூக வலைதளத்தில் பொய்யான குற்றச்சாட்டுகளை பரப்புவதாக திருநங்கை மீது நாஞ்சில் விஜயன் புகார் அளித்துள்ளார்.

தன்னையும் தனது மனைவியையும் பற்றி அவதூறான கருத்துகளை பரப்பு வருவதால் மன உளைச்சலுக்கு ஆளாவதாக நாஞ்சில் விஜயன் மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

அவதூறு கருத்துகளை பரப்பும் திருநங்கை மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்குமாறு காவல் ஆணையர் அலுவலகத்தில் நாஞ்சில் விஜயன் மனு அளித்துள்ளார்.

# தனிப்பட்ட வாழ்க்கையை பிரச்சனையாக்குவது ஏன்?



அவரது தனிப்பட்ட வாழ்க்கைக்கும், மக்களுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. இது போன்ற சர்ச்சை விஜய் புகழை பாதிக்கும் என்று நான் நம்பவில்லை. விஜய்- சங்கீதா விவகாரம் அரசியல் மற்றும் சினிமா வட்டாரங்களில் விவாத பொருளாகி வருகிறது. இது குறித்து நடிகை குஷ்பு அளித்த பேட்டியில் கூறியதாவது:-

இந்த சம்பவத்தில் ஏன் இவ்வளவு ஆர்வம் காட்டுகிறார்கள் என்று எனக்கு புரியவில்லை. இது அவரது தனிப்பட்ட வாழ்க்கை. அவரது தனிப்பட்ட வாழ்க்கைக்கும், மக்களுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. அதை ஏன் இவ்வளவு பெரிய பிரச்சனையாக்க வேண்டும். இது போன்ற சர்ச்சை விஜய் புகழை பாதிக்கும் என்று நான் நம்பவில்லை. விஜய் ஒரு தலைவராக இருந்தாலும் இல்லாவிட்டாலும் அவரும் ஒரு மனிதர். அனைவருக்கும் வாக்களிக்கும் உரிமை உண்டு. எப்போது எங்கு வாக்களிக்க வேண்டும் என்பது மக்களுக்கு தெரியும் என்றார்.

ரசிகர்களை கவரும் வகையில் திரையுலக பிரபலங்கள் போட்டோஷூட் புகைப்படங்களை வெளியிடுவார்கள். அதுவும் ரசிகர்களின் மனம் கவர்ந்த பிரபலங்கள் என்றால் சொல்லவே தேவையில்லை, அந்த புகைப்படங்கள் உடனடியாக இணையத்தில் வைரலாகும்.

அந்த வகையில், தற்போது நடிகை மீனாட்சி சவுத்ரி இன்ஸ்டாகிராம் பக்கத்தில் தனது சமீபத்திய கிளாமர் போட்டோஷூட் புகைப்படங்களை வெளியிட்டுள்ளார். இதோ பாருங்க:



# ‘Hi’ படத்தின் புதிய போஸ்டர் வெளியீடு




தமிழ் சினிமாவில் வளர்ந்து வரும் இளம் நடிகர்களில் முன்னணி இடத்தில் இருப்பவர் நடிகர் கவின். இவர் 'நட்புனா என்ன தெரியுமா'படத்தில் கதாநாயகனாக வெள்ளித்திரைக்கு அறிமுகமாகினார். கவின் பிக்பாஸ் மூன்றாம் சீசனில் பங்கேற்றார். பிக்பாஸ் கவினுக்கு பெரிய திருப்பு முனையாக அமைந்தது. பிக்பாஸிற்கு பிறகு 'லிஃப்ட்' என்ற படத்தில் நடித்தார். ஓடிடி- யில் மட்டும் வெளியான 'லிஃப்ட்' திரைப்படம் மக்களிடம் நல்ல வரவேற்பை பெற்றது.

இதனை தொடர்ந்து 'ஸ்டார்', 'கிஷ்', 'டாடா', 'ப்ளடி பக்கர்', 'மாஸ்க்' உள்ளிட்ட பல திரைப்படங்களில் நடித்துள்ளார். இதையடுத்து தற்போது விஷ்ணு எடவன் இயக்கத்தில் HI என்ற படத்தில் கவின் நடித்து வருகிறார். இப்படத்தில் நயன்தாரா மற்றும் சத்யராஜ் முக்கிய கதாப்பாத்திரத்தில் நடித்து வருகின்றனர்.

வயதில் சிறியவன் தனக்கு மூத்த வயதுடைய ஒரு பெண்ணின் மீது காதலில் விழுகிறான் போன்ற கதைக்களத்தில் இப்படம் உருவாகி இருப்பதாக கூறப்படுகிறது. இந்நிலையில், இப்படத்தின் புதிய போஸ்டரை படக்குழு வெளியிட்டுள்ளது.

# விஜய் தேவரகொண்டா- ராஷ்மிகா ரொமான்டிக் புகைப்படங்கள் வைரல்



திருமண காட்சிகளை விஜய் தேவரகொண்டாவும், ராஷ்மிகாவும் ஒவ்வொன்றாக பகிர்ந்து வருகின்றனர்.

புதுமண ஜோடிகள் தங்களது மெஹந்தி விழா புகைப்படங்களை பகிர்ந்துள்ளனர்.

விஜய் தேவரகொண்டா-ராஷ்மிகா காதல் திருமணம் கடந்த மாதம் 26-ந்தேதி உதய்ப்பூரில் நடந்தது.

திருமணம் நடந்து 14 நாட்களாகி உள்ள நிலையில் திருமண காட்சிகளை விஜய் தேவரகொண்டாவும், ராஷ்மிகாவும் ஒவ்வொன்றாக பகிர்ந்து வருகின்றனர்.

அந்த வகையில் புதுமண ஜோடிகள் தங்களது மெஹந்தி விழா புகைப்படங்களை பகிர்ந்துள்ளனர்.

கண்களை கவரும் அழகிய வேலைப்பாடுகளுடன் கூடிய புடவை, கைகளில் சிவன் ஓம் வடிவில் மெஹந்தி மற்றும் தாமரை மலர் மாலையுடன் ராஷ்மிகா அமர்ந்திருக்க விஜய் தேவரகொண்டா அவரது நெற்றியில் முத்தமிடுவது மற்றும் ரொமான்ஸ் காட்சிகளை மகிழ்ச்சியோடு வெளியிட்டுள்ளனர் புதுமண தம்பதிகள்.







## படி..படி..திருக்குறள் படி!

குறளைப்படி.. திருக்
குறளைப்படி ! தமிழனாக
பிறந்து விட்டாய்.. அறிந்து
படி.. திருக்குறளைப் படி!
படித்தப்படி.. நடப்பதுவே
வாழ்க்கைப்படி. ! படிப்படியாய்
உயர்வதற்கே குறளைப் படி..
திருக்குறளைப் படி!

நினைத்தப்படி நடப்பதல்ல..
நின்று படி! நீடுவாழ
வேண்டுமெனில் ஊன்றி படி..
அனைத்துயிரும் ஒன்றுயென
உணர்த்தும் படி.. அருந்தமிழா
வாழவேண்டும் குறளைப் படி!
திருக் குறளைப்படி!

அறத்தைப் படி.. பொருளைப்
படி.. இன்பம் படி. ! அறிவு
என்ற கோவிலுக்கு
வாசற்ப் படி! புற உலகில்
பெருமையுடன் வாழும்
படி.. திரு வள்ளுவனார்
எடுத்துரைத்தக் குறளைப் படி!
திருக்குறளைப் படி!

உண்டபடி.. கண்டபடி..
சென்றபடி.. உழல்வதற்கோ
வந்துதித்தாய் உணர்ந்து படி!
என்றும் உன்னை ஏற்றிவிடும்
ஏணிப்படி! என்றுணர்ந்து
கொண்டபடி.. குறளைப்படி..
திருக்குறளைப் படி!

நமது மறை யாது? என்று
அறிந்து படி.! நற்றமிழில்
உள்ளதுதான் உணர்ந்து
படி! இரண்டடியில்
இவ்வுலகு அடங்கும்
படி.. எழுதி வைத்தார்
வள்ளுவமாய் வாழ்ந்து
படி.! குறளைப் படி..
திருக்குறளைப் படி!

## செம்மறி ஆடே.. செம்மறி ஆடே..

செம்மறியாடே..செம்மறியாடே.
எங்கே செல்கின்றாய்! நீ..
செல்லும் பாதையில்
நின்றே.. நான் சொல்வதைக்
கேளாயோ?

இனத்தோடு சேர்ந்து
இனமாக வாழும்.. செம்மறி
ஆடே சொல்! இனமானம்
இழந்தான் ! தமிழினின்
முன்னே செம்மறி ஆடே நில்.!

உன் பாதை யெல்லாம்
ஒன்றான மந்தை..
கூட்டத்தில் ஒன்றாக நில்..
தன் பாதை யெல்லாம்..
பிரிந்து போய் நின்றான்!
தவறாமல் செம்மறியே சொல்.!

தழை தந்து இங்கே..
தலையாட்ட வைத்தே
கொடு வாளை எடுத்தானே
நில்..! உழையாது உண்டு..
உலகென்ற வீட்டில் பலியாடு
வளராத்த கதை சொல்.!

ஆடுகளை மேய்க்க
மீட்பர்கள் வந்தார்..
அவரையும் பலியன்றோ
தந்தான்! பாடுகளைப் படவோ
ஆடுகளாய் பிறந்தாய்!
பகுத்தறிவு எங்கே நீ
சொல்வாய்!

ஒன்றாக பிறந்து ஒன்றாக
வாழ்ந்தே.. ஒருநாளில்
விருந்தானாய் செம்மறியே..
இங்கு இரைபோடும்
மனிதனுக்கு
இரையானாய்
உன்நிலையை
மறவாது பாடுவேனே..
செம்மறியே..!



**வே.கல்யாண்குமார்.**



## அழகு

ஜாடியிலிருந்த
அழகுச் செடியின்
இலைகளிலொன்று
வாடி
விட்டிருந்தது.
வாடிய
இலையைத்
துண்டித்துப்
போடத்
துடித்த
மனதைக்
கட்டுப்படுத்துவது
லேசான காரியமாக
இருக்கவில்லை.



**கே. பி. ஜனார்த்தனன்**

## காதல் மலர்

பயணமானது கால்கள்
பாதை தெரியாமல்.
உதயமானது மனது ஒளியே
இல்லாமல்,

கடினமானது கரங்கள்
சிறுபிடியும் இல்லாமல்,
ஈரமானது விழிகள் பாரம்
தாங்காமல்,

கண்ணில் பட்டது
வெளிச்சம்,
இமையும் அறியாமல்.

என்றும் எனக்குள் இருக்கும்.
அது இமைபோல் பிரியாமல்.
இனிப் பாதை அறிந்தது
பயணம் இருளே இல்லாமல்,

உதயமானது மனது
பொழிவில் குறையாமல்.
உண்மை நானும்
சொல்வேன்,

ஒரு மறைவும் இல்லாமல்.
உயிராய் நானும்
கொள்வேன்,
இதை நட்பாய்க்
கொள்ளாமல்.



**எஸ். சந்திரசேகரன்**
**அமுதா**
செஞ்சி
கோட்டை

## அக்கறை

குளிருக்குச் சொட்டரும்
மழைக்கு ரெயின் கோட்டும்
காலுக்குச் சேஃப்டி ஷூவும்
கைக்குத் தடியும்
கொடுத்துவிட்டு பத்திரமாய்
இருக்கப் பண்பாய்ச்
சொல்லிவிட்டு
பாதுகாப்பாய் இருக்க
அன்பாய்ச் சொல்லிவிட்டு
புறப்படத் தயாரானபோது
பதிலுக்குச் சொன்னான்:
“சார், எப்பொழுது வரப்
போகிறீர்கள் இரவு ரோந்து?”
என்று... சொன்னது போலவே
வந்துவிட்டேன்
வரும் வழியில்
நினைத்துக்கொண்டேன்...
சிறுத்தை ஒன்று சுற்றித்
திரிகிறது என்றும்,
அங்கேதான்
அர்த்தநாரீஸ்வரர்கள்
அதிகம் என்றும், குளத்துக்கு
அருகில் உள்ள புளியமரம்
அமானுஷ்யம் என்றும்,
கொலைகாரர்கள்,
வழிப்பறிக்காரர்கள்
அதிகம் என்றும்,
இரவில் அவ்வளவாய்ப்
பாதுகாப்பில்லை என்றும்,
சிங்கநல்லூர் டூ
கள்ளப்பாளையம் வரை
இத்தனையும் சொல்லிவிட்டு,
“எப்பொழுது வருவீர்கள்?”
என்று கேட்டது ஞாபகத்திற்கு
வந்தது. அப்போதுதான்
புரிந்தது அவனுக்கு என்
மீதான அக்கறை.

**எல். ஜி.சிவக்குமார்**



காதல் ஒரு இசை
அது வந்து விட்டால்
உன்னுள் வயலின் வாசித்து
கொண்டே இருக்கும்!

முத்தமிடமில்லை
ஒரு வார்த்தை
கூட பேசவில்லை
எப்படி??????
முழுவதுமாய் உன்னுள்
மூழ்கி போனேன்??
ஒரு துளி கடல் பார்வை!!
அவள் அவளாய் தான்
இருந்தாள் ஏனோ
ரொம்பவும் பிடித்து போனது
சுயம் தொலைக்காதவர்களை
பிடிக்காமல் போகுமா என்ன?!

வேறொன்றும் வேண்டாம்
இன்னும் கொஞ்ச நேரத்திற்கு
இப்படியே கை கோர்த்திடு
யாரோ ஒருவர் இப்படி
ஆறுதலாய்
கை கோர்ப்பதும்
கொஞ்சம் ஆசுவாசம் தான்!

ஏனோ எனை
ஆசுவாசப்படுத்தும்
கனவுகள்இப்போதெல்லாம்
வருவதே இல்லை
நிஜங்களை போல
கனவுகளும் வலிகள்
நிறைந்து தான்
காணப்படுகிறது!



**லி.நௌஷாத் கான்**

## உணவினை ஆக்கல் உயிராக்கல்!

நேரிசை வெண்பா!

உணவைப்படைப்பதோ(டு)
உன்னதமாக கனிவான
அன்பைக்கலந்து.. மணக்கும்

வகையில் பரிமாறல்
வண்ணமாகும்தான்
தகவாய் நடப்போம் தக!
உணவைப்படைத்தல்
உயிரைப்படைத்தே

குணமாகக்காணவேண்டும்
கூர்ந்து... நயன்மையாய்ச்

செய்தல் தகவன்றோ
சீர்மையொடு கண்டேதான்

நெய்மணக்கும்
என்றுமே நேர்ந்து!

**முனைவர்**
**இராம.வேதநாயகம்**
திருவண்ணாமலை.

## வேண்டாம் சாதி வெறி !

மனிதனை விலங்காக்கும்
சாதி வெறி வேண்டாம் !
மனிதனைக் கொல்லும்
கொலைவெறி வேண்டாம் !

விலை மதிப்பற்ற மனித
உயிர்களை வீண் சண்டை
இட்டுப் பறிப்பது முறையோ ?

எந்த உயிரும் உயர்ந்ததுதான்
உலகில் ! எந்த உயிரும்
மலிவானது அல்ல !

அன்பு செலுத்துவது மனிதன்
குணம் ! வம்பு செய்வது
விலங்குகள் குணம் !

உன்னுயிர் போல மற்ற உயிர்
நேசி ! உயிரைப் பறிப்பது
மடமை நீ யோசி !

கனிவோடு நடந்திட்டால்
சண்டை வராது !
கணினியுகத்தில்
காட்டுமிராண்டி ஆகலாமா ?

சாதியின் பெயரால் கலவரம்
ஏனோ ? சாதிக்கும் வயதில்
மோதல் சாவு ஏனோ ?

வெட்டியும் குத்தியும் வீழ்வது
ஏனோ ? வேதனையை
குடும்பத்திற்கு தருவது
ஏனோ?

சிந்தித்துப் பார்த்து
செயலினை மாற்று !
சிந்திப்பவன்தான் மனிதன்
மனிதனாக மாறு !

## விழிக்கொடை !

வந்தது பார்வை
பார்வையற்றவர்களுக்கு
விழிக்கொடை !

இறந்தப் பின்னும்
இறக்காத விழிகள்
விழிக்கொடை !

மண்ணுக்கும் தீயுக்கும்
வேண்டாம் மனிதர்களுக்கு
வேண்டும் விழிக்கொடை !

கரு விழிகள் அகற்றியது
இருள் விழிக்கொடை !

வாழ்கிறான் கொடையில்
வள்ளல் கர்ணன்



விழிக்கொடை !
உயிர்ப் பிரிந்தும்
உயிர்ப் பெற்றது
விழிக்கொடை !

உடல் மாறியும் உயிர் உள்ளது
விழிக்கொடை !

ஒளி ஏற்றியது வழி காட்டியது
விழிக்கொடை !

துன்பம் துரத்தி இன்பம்
ஈந்தது விழிக்கொடை !

குறையை நீக்கி
நிறைவாக்கியது
விழிக்கொடை !


மரிக்கவில்லை மனிதம்
மனிதரில் புனிதம்
விழிக்கொடை !

வைத்தது முற்றுப்புள்ளி
மூடநம்பிக்கைக்கு
விழிக்கொடை !

செத்தப்பின்னும்
சாகவில்லை விழிக்கொடை !

இறப்பிலும் பிறப்பு
இறக்கத உறுப்பு
விழிக்கொடை !

மரணித்தும்
மரணிக்கவில்லை
முடிவிலும் இனிய
தொடக்கம்
விழிக்கொடை !



**கவிஞர் இரா.இரவி.**

# நூல் விமர்சனம்

முத்தையா மோகனின்
நூல் சுவை...
கடலை விழுங்கும் மீன்...
கவிதை தொகுப்பு, முதல்
பதிப்பு:
ஆசிரியர்: நர்மதாதேவி...
பக்கங்கள் 104.
விலை: 120. வெளியீடு நம் நதி
புக்ஸ். சென்னை.
பேச: 98 94 79 53 83.

முதல் முதல் கவிதை என்பது மனித சனிப்பின் முதல் முனகளில் தொடங்கி, ஒரு குழந்தையின் உறக்கத்தில் கனவுகளாய் பரிணாமளிக்கின்ற அந்த புத்தம் புது புன்னகையில் ஆரம்பித்து, விம்மி வெதும்பி வெடிக்கின்ற அழுகைகள் வரை தொட்டுத் தொடரும் உணர்வு அலைகள் தான் கவிதைகளின் ஆலாபனைகள். இதில் பல ஆயிரம் முடிச்சுகள் பல ஆயிரம் கேள்விகள் பல ஆயிரம் தொடர்கள் என்று நம்மை வியக்க வைக்கும், திரும்பிப் பார்க்க வைக்கும் பல விடயங்கள் ஒளிந்து கிடக்கின்றன கவிதைகளின் பட்டறைகளுக்குள். இங்கே "கடலை விழுங்கும் மீன்" கவிதை தொகுப்பின் ஆசிரியர் தோழர், கவிஞர். நர்மதா தேவி, அவர்களுக்கு இன்னும் வெவ்வேறு கோணங்களில் கவிதைகளின் நுட்பங்கள் கைவரப் பெற்றி ருக்கின்றன.

அன்பினால் கதவைத் தாழிட்டு பிரசவத்திற்காக தாய்வீடு சென்றாள் எதிர் வீட்டு அக்கா அக்காவின் நிழலே இல்லாத அந்த வாசலில் அவளுக்காகவே தினமும் ஒரு கோலத்தை உதிர்க்கிறது அவள் வைத்த மரம். இது பசுமைகளின் தேவையை எப்படி எல்லாம் உணர்த்த முடியும் என்பதற்கு இந்த கவிதையும் ஒரு சான்று. மரங்களையும் செடி கொடிகளையும் வெட்டி வீழ்த்திக் கொண்டிருக்கிற இன்றைய சமுதாயத்தில் மரங்கள் என்பது மனித உயிர்களோடு உறவாடுகின்ற ஒரு மழலையின் எதார்த்தமான அன்பின் அடையாளம். அத்தகைய அடையாளங்கள் தான் மனிதர்களே இல்லாத இடங்களிலும் அவர்களுடைய அடையாளங்களை அடையாளப்படுத்திக் காட்டிக் கொண்டிருக்கின்றன.

முற்போக்கும் பிற்போக்குமான இணைப்பு புள்ளியிலே சுருண்டு படுத்து விடுகிறது தீட்டு எனும் மாதவிடாய் மாதவிலக்காய் இருந்தபோது எந்த நச்சரிப்பும் இன்றி ஒதுக்கி வைத்தல் என்ற பெயரில் உடலுக்கும் மனதுக்கும் கிடைக்கிறது பரிபூரண ஓய்வு அதுவே மாத சுழற்சியான பிறகு அடிவயிறு பிசைந்து கால்கள் துவண்டு வீட்டிலும் வேலை இடத்திலும் சுழன்று சுழன்று ஓய்வு யாசிக்கும் நிலை பரிபோன சுய பராமரிப்பு பொழுதுகளை எப்படி திரும்ப பெற்றுக் கொள்ள அதீத பெண்ணியம் பேசி இருக்கக் கூடாதோ சுற்றும் என் வலிகளை உணர்ந்து கொள்வது இல்லை. மாதவிடாயே அருள் கூர்ந்து ஒவ்வொரு மாதமும் ஒரு விடுமுறை நாளில் வந்து விட்டேன்."

பெண் என்கிற பேரளுமைகளுக்குள் இயற்கையாய் இயல்பாய் நிகழ்கின்ற ஒரு நிகழ்வை இந்த சமூகமும், குடும்பத்தைச் சார்ந்த உறுப்பினர்களும் வேலை இடத்து பணியாட்களும், வருகிற போகிற இடங்களில் எப்படியெல்லாம் இது பற்றி நோக்குகிறார்கள் என்கிற சிறு புத்தித்தனங்களை, வெட்ட வெளிச்சமாக்கி தனது இதயத்திற்குள் புதைந்து கிடக்கின்ற வேதனைகளை வெளிப்படுத்துகிறது பெண்மை குறித்த இந்த கவிதை. மனிதன் பெண்களுக்கான மாதவிடாயை தீட்டென்றான். அறிவை தீட்ட மறந் தான். மாதவிடாய் என்கிற ஒன்று இல்லாமல் போனால், மனிதனே இல்லை என்கிற பகுத்தறிவின் பேருண்மையையும் மறந்தான்.

உன் அழைப்புக்காகத்தான்




காத்திருக்கிறேன் நீ அழைத்தால் பேசாமல்இருந்துவிடுவேனா என்ன நீ வா எனக்கூப்பிட்டால் உன்னிடம் வந்து விட மாட்டேனா என்ன சரி நீ அழைக்க வேண்டாம் என்றாவது என்னை ஒரு கணம் நினைத்தாவது விடேன் சரண் அடைந்து விடுகிறேன் உன்னிடம்."

காதல் என்பதன் வெளிப்படை யான அன்பின் நோக்கு தான் இந்த கவிதையின் போக்கு. காதலில் உடலோடு உடல் இணைவதோ, அல்லது விழிகளோடு விழி கலப்பதோ, இன்னும் ஒரு படி மேலே போய் தொடுதலில் சுகம் காண்பதோ, காதல் என்று ஆகிவிடாது. காதல் என்பது கண்காண தூரத்தில் இருந்த போதும் இதயத்தில் இதமாய் சுதி மீட்டுகின்ற வீணையாய் நினைவுகளின் இழையோட்டங்களாய் இருத்தல் வேண்டும் . என்பதற்கு இந்த கவிதை போதுமல்லவா...?

அம்மா அப்பா அண்ணா அக்கா தம்பி தங்கை தோழா தோழி நான் அவன் அல்ல அவள் நான் அவமானப்பட்டது பெண்ணாக உணர்ந்ததற்காக அல்ல. ஆணாக என் உடல் இருந்ததற்காக உடல் சுரப்பி நீர்மம் செலுத்தி அங்கம் வளர்த்தது உயிர் கிழித்து அங்கம் அறுத்தது எதுவும் என் பெண்ணைக்காண உங்களின் அங்கீகாரத்திற்காக அல்ல என் நிர்வாணம் எனக்கு தந்த மனவலிக்கு என் உடல் தானே செதுக்கி வடிவமைத்த அழகிய சிற்பம் நான் வெறும் நங்கையல்ல திரு நங்கை..."

ஆணும் பெண்ணுமல்லாத திருநங்கை என்று போற்றப்படுகிற மானுட இதயங்களை இன்று சமூகங்கள் எத்தனையோ உயரங்களில் அழைத்துச் சென்று வைத்திருக்கிறோம் என்ற போதும், சாதாரண மனிதர்களின் கண்களுக்கு ஏதோ கடுகை விடவும் மிகவும் மோசமான ஏதோ கேவலமான பிறவிகளைப் போல் தான் தெரிகிறார்கள் அன்பு இதய தங்கைகள். அவர்களுக்குள்ளும் அன்பு நிறைந்து கிடக்கிறது காதல் பெருகி கிடக்கிறது மனிதநேயம் வளர்ந்து ஓங்கி நிற்கிறது அதைவிட மனிதர்களோடு மனிதர்களாய் ஒன்றி வாழ வேண்டும் என்கிற ஆசையும் ஆவலும் பெருக்கெடுத்து கிடக்கிறது என்பதை மறந்து போகிறார்கள் சில மனிதர்கள். அந்த சூழலை சூசகமாய் நமக்கு உணர்த்துகிறது இந்த கவிதை.

உன் பெயரை எங்கோ பார்க்க கேட்க நேர்கையில் உன்னிடம் பேச வேண்டும் போல் இருக்கிறது உன்னுடைய செல்பேசி எண் முகவரி மின்னஞ்சல் இவை அனைத்தும் என்னிடம் மிகவும் பத்திரமாக இருப்பது போல உன்னிடம் பேச வேண்டும் என்கிற நினைப்பும் எப்போதும் என்னுடன் இருந்து விட்டே போகட்டும்..."

இந்த கவிதையின் வாழ்வில் சாயல் என்றோ முன்பொரு நாள் எல்லா மனிதர்களுக்கும் இருந்திருக்க கூடும். எல்லா மனிதர்களுக்குள்ளும் இப்படியானதொரு ஏக்கம் நிறைந்த தியாக உணர்வுகள் தோன்றியிருக்கக்கூடும் உள்ளம் உண்மையாக நேசித்து காதலித்து இருக்க கூடுமாயின் அட நீ எங்காவது இரு... நன்றாக இருந்தால் போதும் என்பதை தான் உண்மையான காதல் மனம் சுட்டிக்காட்டும். இந்த கவிதையும் ஏதோவொரு நாளில் ஏதோ ஒரு தினத்தில் ஏதோ ஒரு நிகழ்வில் நம்மை இட்டுச்செல்வது உண்மைதானே...? பெருங்கடலின் நீரையெல்லாம் விழுங்கி விடும் பேராசையில் எந்த வலைக்கும் அகப்படாமல் இன்னும் அந்த சிறு மீன் கடலில் மூளையில் நீந்தி கொண்டிருக்கிறது... எங்கோ எப்போது படித்த ஒரு சிறு ஹைக்கூ கவிதை தான் நினைவுக்க வருகிறது. "சிறு துடுப்பு தான் பெருங்கடலை அசைக்கிறது மீன் குஞ்சு..." இது யாரோ ஒரு கவிஞன் எழுதிய கவிதை தான் இருந்தாலும், சிறு துடுப்பு எத்தனை பெரிய கடலையும் அசைக்கும் என்கிற கற்பனை நம்மை வியக்க வைக்கிறது அப்படித்தான் கவிஞர் நர்மதா தேவியின் இந்த கவிதையும் கூட.... உன் தேவைகளைச் சொல் செய்து தருகிறேன் என்கிறாய் நீ புரிந்து கொள் என்கிறேன் நான் சொல்லாமல் நானும் புரிந்து கொள்ளாமல் நீயும் ஒட்டியும் ஒட்டாமலும் உணரும் மொழிகள் வெவ்வேறாக ஓடிக் கண்டிருக்கிறோம் இந்த ஓட்டத்திற்கு உறவு என்று பெயர்...

உறவுப்பின்னல்களில் உயிர்ப்புகள் ற்ற சிநேகங்களே இப்போதெல்லாம் மேலோங்கி நிற்கின்றன... யாரும் யாரையும் புரிந்து கொள்ள முயல்வதுமில்லை. யாரும் யாருக்காகவும் எதையும் விட்டுக் கொடுக்க முன் வருவதுமில்லை. காரணம் கடிகார நூல்களை விடவும் வேகமாக ஓடிக் கொண்டிருக்கிறோம்... அந்த ஓட்டங்கள் என்பது தத்தமது தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதற்கான முனைப்புகளே அத்தகைய முனைப்புகளில் நாம் தொலைத்து விட்ட உணர்வுகளையும், உறவுகளையும் எண்ணிப் பார்ப்போமானால் நெஞ்சம் கணக்கத்தான் செய்யும். ஆற அமர அமர்ந்து பேசுவதற்கு கூட நாழிகைகள் நம்மிடமில்லாமல் போனது என்பதற்கு இந்த கவிதை போதுமே. தோட்டத்தில் உள்ள எல்லா பூக்களையும் விட கொள்ளை அழகாய் இருக்கிறது வேலியைத் தாண்டி பூத்திருக்கும் அந்த ஒற்றைச் செம்பருத்தி...

இன்று பல வீடுகளில் வேலி பிரச்சனை வருகிறது என்று சொன்னால் அதற்கெல்லாம் காரணம் நம் வீட்டு செடிகள் பக்கத்து வீட்டிற்கு சென்று அழகாய், மிக அழகாய் பூப்பது தான். மிக அழகு என்பது எப்போதும் பிரச்சனை தான், அது பிரச்சனைக்குரிய அழகாக மாறாத வரை. பக்கத்து வீட்டுக்காரன் மனித பண்போடு கூடியவனாய் இருந்து விட்டால் போதும். அந்த செம்பருத்தி நம்முடையதாக தான் இருக்கும். காலங்காலமாய் நாம் வளர்த்து வருகின்ற மாமரங்கள் பக்கத்து வீட்டில் கிளை பரப்பி அந்தக் கிளையில் தான் அற்புதமான பழங்கள் பழுக்கும் அங்கே நாம் மனித பண்புகளோடு கூடியவர்களாக இருந்து வட்டால் அவர்களுக்கு இரண்டு கொடுத்து நாமும் இரண்டு உண்டு பகுத்துண்டு பள்ளியில் ஓம்புதல் நூலோர் தொகுத்த வற்றுக்கெல்லாம் தலை... என்று இருந்து விடலாம் என்கிறதோ இந்த கவிதை ...?

தோழமைக்குரிய கவிஞர் நர்மதா தேவி அவர்களின் ஒவ்வொரு கவிதைகளுக்குள்ளும் அட்சர சுத்தமான மன வலிகள் பொதிந்து கிடக்கிறது... தென்றலாய் காற்றாய், சிறு நதியாய் பெரும் கடலாய், பொங்கி பிறளயமாகும் நெருப்பு பிழம்புகளாய், இன்னும் இன்னும் சொல்லிக் கொண்டே போகலாம் தோழர் நர்மதா தேவியின் கவிதைகள் என்கிற கடலாழம் இன்னும் இன்னும் எட்டாத தூரம் சென்று கொண்டே இருக்கட்டும்.

இந்த சமூகங்களில் புரையோடி கிடக்கின்ற பெரும் சாடல்களைக் கொண்ட பொது நோக்குகள் நிறையப்பெற்ற கவிதைகளையும், அவருடைய அடுத்த அடுத்த தொகுப்புகளில், நாம் இன்னும் நிறைய மூழ்கி முத்தெடுக்க காத்திருக்கிறோம் தோழர் கவிஞர் நர்மதா தேவி அவர்களுக்கு அன்பின் புரட்சி வாழ்த்துக்கள்.

*முத்தையா மோகன்*
*76 உமா நாம நகர் 1. (மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில்)*
*உப்பிலிபாளையம்*
*கோயமுத்தூர் 641018.*
*பேச: 9659419429.*




## “கடவுளுக்கோர் அறிவுரை!”

கடவுளே...
இது பிரார்த்தனையல்ல
புகாரென்றே வைத்துக்
கொள்!

நீ படைத்த மனிதன்
பூமியை வீடாகக்
கொள்ளவில்லை...
வேட்டைக்காடாகக்
கொண்டு விட்டான்!

நீ அவனுக்கோர்
இதயம் கொடுத்தாய்
அதையவன் கல்லாக்கிக்
கொண்டான்!

நீ அவனுக்கோர்
மொழி கொடுத்தாய்
அதையவன் பொய்யுரைக்கப்
பயன்படுத்திக் கொண்டான்!

நீ அவனுக்கோர்
அறிவினைக் கொடுத்தாய்
அதையவன் அழிவிற்கான
ஆயுதமாக்கிக்
கொண்டான்!

கடவுளே... இனி
மனிதனைப்
படைக்கும் முன்
ஒரு வேலை செய்.
மூளையில் அறிவை
வைக்கும் முன் இதயத்தில்
கருணையை நிரப்பி விடு!

கைகளில் அதிகாரம்
கொடுக்கும் முன்
சோதனை செய்!

அவன் பசியுடன் நிற்பவரின்
பசி தீர்க்கிறானா?
இல்லை அலட்சியப்
படுத்துகிறானா?

முதலாவதெனில்
அவனுக்கு மனிதனெனப்
பெயரிட்டனுப்பு!

இரண்டாவதெனில்
கலவை நிலையிலேயே
போட்டு விடு!

பூமி இப்போது மனிதர்களால்
நிரம்பி வழிகிறது.
மனிதத்தால்
காலியாகி விட்டது.



இனி மனிதனை
படைக்க வேண்டாம்?
நல்ல மனிதனை
மட்டும் படை!

**முகில் தினகரன்**
கோயமுத்தூர்.

## புத்தகம் !

அகம் புதிதாக உதவுவது புத்தகம் !
அகிலம் அறிந்திட உதவுவது புத்தகம் !

அறிஞர்களை அறிந்திடத் துணை புத்தகம் !
அறிஞராக உயர்ந்திட உதவுவது புத்தகம் !

ஆற்றல் பெருகிடக் காரணம் புத்தகம் !
அறிவு வளர்ந்திடக் காரணம் புத்தகம் !

இல்லம் நிறைந்திடத் தேவை புத்தகம் !
உள்ளம் புத்துணர்வுப் பெறப் புத்தகம் !

எடுத்த செயல் முடித்திடப் புத்தகம் !
ஏணியென உயர்த்துவது புத்தகம் !

மனிதனை மனிதனாக வாழவைப்பது புத்தகம் !
மண்ணில் உள்ள சொர்க்கம் புத்தகம் !

மனதில் மாற்றம் தருவது புத்தகம் !
மனங்களைக் கொள்ளையடிப்பது புத்தகம் !

கொடிய கோபம் தணிக்க உதவும் புத்தகம் !
கொள்கைகள் அறிந்திட உதவும் புத்தகம் !

இலக்கிய ஈடுபாடு வளர்க்கும் புத்தகம் !
இலக்கியதாகம் தணிக்கும் புத்தகம் !

விஞ்ஞான வளர்ச்சிக்குக் காரணம் புத்தகம் !
விஞ்ஞானிகள் வளர்ச்சிக்குக்காரணம் புத்தகம்!

நேர்முகத்தேர்வில் தேர்வாகக்காரணம் புத்தகம்!
நேரில் பார்க்காதவரையும் நேசிக்கவைக்கும் புத்தகம் !

மனக்கவலை நீக்கும் மருந்து புத்தகம் !
மனக்குறைப் போக்கும் காரணி புத்தகம் !

மனிதனின் மிகச்சிறந்த கண்டுபிடிப்பு புத்தகம் !
மனிதனைக் கண்டுபிடித்துத் தந்தது புத்தகம் !

குற்றவாளியையும் திருத்தி விடும் புத்தகம் !
குற்றங்களைக் களைந்து விடும் புத்தகம் !

நேரத்தை பயனுள்ளதாக்கும் புத்தகம் !
நேர நிர்வாகம் கற்பிக்கும் புத்தகம் !

புத்தரைப் புரிய வைக்கும் புத்தகம் !
சித்தரைச் சிந்திக்க வைக்கும் புத்தகம் !
பெரியாரின் சிந்தனை உணர்த்தும் புத்தகம் !
பெரியோரை மதிக்க வைக்கும் புத்தகம் !

அண்ணாவை அறிய வைக்கும் புத்தகம் !
அறிவைத் தெளிய வைக்கும் புத்தகம் !

திருக்குறளை தெரிய வைக்கும் புத்தகம் !
திருவை வாழ்வில் வழங்கும் புத்தகம் !

வாழ்வியல் உணர்த்துவது புத்தகம் !
வசந்தம் வர வைக்கும் புத்தகம் !

சோதனைகளைச் சாதனைகளாக்கும் புத்தகம் !
வேதனைகளை நீக்கி விவேகம் தரும் புத்தகம் !

வெற்றிகளை நமது வசமாக்கும் புத்தகம் !
தோல்விகளைத் தவிர்த்திட உதவிடும் புத்தகம்!

பலர் புகழ் பெற்றிடக் காரண்ம் புத்தகம் !
பாமரனையும் பாருக்குக் காட்டுவது புத்தகம் !

படித்திட சுகம் தரும் புத்தகம் !
படித்திட சோகம் நீக்கும் புத்தகம் !

படிக்கப் படிக்க உயர்த்திடும் புத்தகம் !
படிக்கல்லாக இருந்து உயர்த்திடும் புத்தகம் !

இரண்டு கால் மிருகத்தை மனிதனாக்கியது புத்தகம் !
இன்னல் நீக்கி இன்பம் தரும் புத்தகம் !

காட்டு மிரண்டிகளை மனிதனாக்கியது புத்தகம்!
காட்டுவாசியையும் அறிஞனாக்கியது புத்தகம் !

கரக்கக் கரக்க பால் தருமாம் காமதேனு !
படிக்கப் படிக்க பரவசம் தரும் புத்தகம் !

இரைக்க இரைக்க தண்ணீர் சுரக்கும் கிணறு !
படிக்கப் படிக்க அறிவு சுரக்கும் புத்தகம் !

உணருங்கள் மிகவும் உன்னதமானது புத்தகம் !



உடலையும் உள்ளத்தையும் செம்மையாக்கும்
புத்தகம் !

தினமும் சில மணி நேரம்
படியுங்கள் புத்தகம் !
தவமாக வாசியுங்கள் தினமும் புத்தகம் !

**கவிஞர் இரா .இரவி !**

## இதுவும் கடந்து போகும் !

இன்னலுக்காக வாட வேண்டாம் !
இதுவும் கடந்து போகும் !

கவலையில் கரைய வேண்டாம் !
இதுவும் கடந்து போகும் !

சோகத்தில் சோர வேண்டாம் !
இதுவும் கடந்து போகும் !

எழ்மைக்காக வருந்த வேண்டாம் !
இதுவும் கடந்து போகும் !

வறுமைக்காக வாடிட வேண்டாம் !
இதுவும் கடந்து போகும் !

தோல்விக்கு துவண்டிட வேண்டாம் !
இதுவும் கடந்து போகும் !

விரக்தி வேதனை வேண்டாம் !
இதுவும் கடந்து போகும் !

விடியவில்லை என்று வருந்த வேண்டாம் !
இதுவும் கடந்து போகும் !

ஆதிக்கத்திற்கு அஞ்ச வேண்டாம் !
இதுவும் கடந்து போகும் !

ஆர்பாட்டத்திற்கு மயங்க வேண்டாம் !
இதுவும் கடந்து போகும் !

ஆடம்பரத்திற்கு மிரள வேண்டாம் !
இதுவும் கடந்து போகும் !

வெற்றிக்கு வீர வசனம் வேண்டாம் !
இதுவும் கடந்து போகும் !

புகழ் போதையில் கூத்தாட வேண்டாம் !
இதுவும் கடந்து போகும் !

பதவி ஆணவத்தில் ஆட வேண்டாம் !
இதுவும் கடந்து போகும் !


நானே பெரியவன் எண்ணம் வேண்டாம் !
இதுவும் கடந்து போகும் !

நிலையற்ற உலகில் எதுவும் நிரந்தரமன்று !
நிதம் அன்பு செலுத்தி வாழ்வாங்கு வாழ் !

**கவிஞர் இரா .இரவி**

## அவள் தங்கைக்கு!

தரகருக்கு தந்த...
கமிஷனில் தடபுடலாய்
நடந்த திருமணம்
தரங்கெட்டு மனங்கெட்டு
பிரிவினில் முடிந்தது
ஒரு வழியாய்... வக்கீலுக்கு
அந்த கமிஷனில்
விவாகரத்தும் கிடைத்தது
லஞ்சத்தில்... தொடங்கிய
வாழ்வு வஞ்சத்தில்
அழிந்துவிட்டது என்றாலும்
முதல் மணமே வெறுமனமாய்
முடிந்து விட்டது என்றாலும்
வற்புறுத்துகிறார்கள்...
வாழ வெட்டி அவளை
வாழத்தான் பழகுயென்று
மறுமணம் செய்யச் சொல்லி
அவள் வீட்டார் அவள்
தங்கைக்கு அடுத்து
திருமணம் ஆக
வேண்டும் என்பதால்!



## வாழ்வு!

விதி வழியே... ஓடம் போல்
அவளின் பயணமானது
அலையடிக்கும் கடல்
அலையில் அழிந்துவிட்ட
மணல் சுவடாய்
அவளின் கதையானது
எதிர்நீச்சலில் கரை சேர
முடியாமல் அவளின் கைகள்
ஓய்ந்தது சுழலில் மாட்டிய
நுரையாய் அவளின் மனம்
ஆனது துடுப்பிழந்த படகு
தண்ணீரில் சுற்றுவதை போல்
உணர்ந்துவிட்டாள்...
தனக்கொரு
துணையில்லாமல்
சுற்றி சுற்றி ஓய்ந்த
கைம்பெண் அவளும்



வாழ்வு
இதுதான்யென்று
வருத்தத்தின்
கண்ணீரில்!

**கவிஞர். ஜெ.ம.புதுயுகம்**
பண்ணந்தூர்

உன் உதடுகள் உதிர்க்கும்
சொற்களைத்தான்
எப்போதும் என் இலக்காய்
வைத்திருக்கிறேன்..

கவ்விக் கொள்ள
ஒரு அம்பும்..
மொழிபெயர்க்கும் வரை
அடை காக்க சில
கூடுகளுமாய்
என் வனாந்திர யாத்திரை.

ஒரு குதிரையும்
சில அம்புகளுமாய்
புறப்பட்டு வெகு
காலமாயிற்று..
பயணிக்க பயணிக்க
காடு பெரிதாகிறது..



நீ இல்லாமல்
திரும்புவதில்லை
என்று
நான் சொன்ன
வார்த்தைகளே
இப்போது
என்னை
வேட்டையாடிக்
கொண்டிருக்கின்றன..
இந்த அடர்ந்த காட்டில் !

**ரிஷபன்**

## நிஜமா நிழலா

" வைதேகி வாசல்
தேடி வருவாளோ வசந்தமும்
அகம் தேடி வருமோ ..."

இசைக் குயிலோ
ஏகாந்த மயிலோ
கவியோ கவி தரும் ரசமோ..."

முதலோ முடிவோ
இதழோ கனி
தரும் சுவையோ..."

முகவரி தந்த அழகோ உறை
பனி தந்த இதமோ ...."

மென்மை கொண்ட
மலரோ கடுமை கொண்ட
உயர் மலையோ ..."

கனவில் விரிந்த கூந்தலோ
கார் மேகம்
கலைத்த உடையோ..."

மறைவோ புன்சிரிப்பு உதிர்த்த
சில்லறையோ
கொலுசொலியோ..."

வீம்போ வீராப்போ
வேடிக்கையோ வாடிக்கையோ
விதி வழியோ ..."


தேவதையோ தீட்டிய
ஓவியமோ கடல் கன்னியோ
காமன் படைத்த
மோகினியோ ..."

வேட்டையோ மண மேடையோ
காகிதமோ காவியமோ ..."



எதுவானாலும்
நீயே நிஜம் உன்
நிழல் தான்
புஜம் ..."

**ஆர். சீதாராமன்**
சீர்காழி



## ஒவ்வொரு நாளும் !

அபாயகரமானதாய்
கடந்து செல்ல
வேண்டியிருக்கிறது
ஒவ்வொரு விடியல் நாளும்,..

திடீரென முளைக்கும் போர்
செய்திகள்... அறிவாளால்
வெட்டப்படும் கொலை வெறி
செய்திகள்...



பாலியல்
தீண்டல்
செய்திகள்...
லாக்கப் மரண
செய்திகள்...

எப்போது எதிர்கொள்வோம்
இப்படிபட்ட செய்திகள்
இல்லாத ஒரு விடியலை !


**எம்.பி.தினேஷ்.**
கோவை

1. நீ கொடுத்த குளம்பியில்
சர்க்கரை ஒரு
துளிகூடஇல்லை.
கொஞ்சம் சலித்து கொண்டு
இதை எப்படி குடிப்பதென
உன்னிடமே திரும்ப
கொடுத்தேன். செல்ல
கோபம் கொண்டு கோப்பை
நிறைந்த குளம்பியில்
சிறிதளவை குடித்து விட்டு
என்னிடமே திரும்ப தந்தாய்
ஏனோ இம்முறை
குளம்பி தேனாய் தித்தித்தது!

2. என் உடம்பில்
ஆங்காங்கே காயம்,
மருத்துவர் எத்தனையோ
முறை கேட்டும் கூட
நான் காரணம் சொல்லவே
இல்லை. கல்லடி பட்டதை
சொல்லலாம் , காதலால் உன்
கண்ணடி பட்டதை எப்படிடி
சொல்வேன்?!

3. எனக்கு பொங்கல்
பிடிக்குமென்றேன்
சொல்லும் தருவாயில்
எந்த பொங்கல் பிடிக்குமென
உன்னிடம் சொல்ல மறந்து
விட்டேன். நீயோ எனக்கு
பிடிக்காத வெண்பொங்கலை
செய்தாய் வெண் பொங்கல்
பிடிக்காதென உன்னிடம்
இறுதியாய் சொன்னேன்.
எந்த மாய மந்திரமும் நீ
செய்ய வில்லை ஏனோ உன்
வியர்வை துளிகள் பட்டு
வெண்பொங்கல் சர்க்கரை
பொங்கலானது!

**லி.நௌஷாத் கான்**



## அத்திப் பழம் அழகோ.. என் அத்தைமகள் அழகோ.!

அத்திப்பழம் அழகோ..!
என் அத்தைமகள் அழகோ!
தித்திக்கிறப் பழங்கள்..
அவள் தேகத்துக்கு முன்
அழகோ.!

கோவைப்பழம் அழகு..
எம்பாவை இதழ் அழகு!
நாவல்ப்பழம் அழகு..
அவள்.. போதைவிழி அழகு.!

ஜெர்ரிப் பழம் அழகு..
அவள் செவ்விதழும்
அழகு.. கொய்யாப் பழம்
அழகு.. அதைக் கொத்தும்
கிளியழகு.!

கண்ணம் சிவப்பழகு.. அந்த
அன்னாசிப் போல் அழகு..
இடையில் மாம்பழங்கள்
அதன் இனிப்புச் சுவையழகு!

முத்துப் பல்லழகு.. அந்த
முந்திரிப் பழமழகு! மாது
அவள் கழுத்தழகு.. அந்தப்
மாதுளம் பழம் அழகு!

நெற்றிப் பொட்டழகு..
அவள்.. காமனின் கட்டழகு..
பப்பாளிப் பழமழகு.. அவள்
பார்க்கும் விதம் அழகு!

திராட்சைப் பழம் அழகு! அது
சிந்துகிற தேனழகு!
ஈச்சம் பழம் அழகு! அவள்
இடையழகு.. இலையழகு!

வெள்ளித் தட்டழகு.. அங்கே
விழுகின்ற தேனழகு..
கள்ளிச் சிரிப்பழகு.. அதில்
கலந்திருக்கும் காதலடா
அழகு.!

வாழைப்பழம் அழகு.. அதைத்
தாங்கும் தண்டழகு.!
தாழைப் பூவழகு.. அவள்
தளிர்மேனி அழகு அழகு!

அத்தனைப் பழங்களுமே..
அவளுடலில் இருக்கிறதே..!
என்னைப் பித்தனாய் மாற்றி
வைத்த பெண்ணழகோ?
இல்லைப் பழங்கள்தான்
அழகோ?

**வே.கல்யாண்குமார்.**

## தேர்தல் அவசரம்.!

பிறப்பிலிருந்தே சிமெண்ட்
பூச்சு காணாத..
நிராதரவுச்சுவர் ஒன்று...
பேட்டை ரவுடிகளின்
ஒற்றைக்கால் தூக்கல்
அபிஷேகத்தை
விடுத்து.. எந்த கொடை
கொடுப்பினையும்
வாய்க்க வாய்ப்பற்று
ஏங்குகிறது..
சுண்ணாம்பு கரைசல்
முழுக்காட்டலுக்குப்
பின்... சின்னங்களை சுமக்க
சித்தமாயும் இருக்கிறது...
சாணி எறி தாங்குவதற்கும்
சம்மதம் தான்... ஆனால்
'பொய் வாக்குறுதிகளை
புறமுதுகில் பொறித்து அடுத்த
ஐந்து வருடங்களுக்கு



அசிங்கப்பட
விட்டுவிடாதீர்கள்..
ஐயா'என்கிற ஒற்றை
நிபந்தனையோடு
கைகூப்பிக்
காத்திருக்கிறது அந்த
சுவர்.!*

**க. குமாரகுரு,**மயிலாடுதுறை


1. உடலில் இருக்கும் மொத்த
திமிரையும் அடக்கி
ஆள்வது தான் முதுமை

2. அரசாங்கத்தால்
சாதிக்க முடியாத குடும்பக்
கட்டுப்பாட்டு திட்டத்தை
தனியார் பள்ளிகள் கல்வி
கட்டணத்தால் சாதிக்கிறது

3. முதுமை கேலிக்கு
உரியது இல்லை அது
நம்முடைய எதிர்கால பிம்பம்

4. கதவுகளை திறந்தே தான்
வைத்திருக்கிறேன்
இன்னும் திருட்டுப்
போகவில்லை வறுமை

5.உலகிலேயே
சுலபமான வேலை
குறை சொல்வது
தான்அதற்கு எந்த
திறமையும் உழைப்பும்
தேவை இல்லை



1. என்னைப் பற்றி புரிதல்
என்னிடம் இருக்கும் போது
யாருடைய வார்த்தைகளும்
என்னை வீழ்த்தாது

2.போதும் என்கிற மனம்
இல்லாதவனுக்கு
பூமியில் எந்த இடத்திலும்
நிம்மதி இல்லை

3. தேடுகிற ஒன்றை
அடைகிற வரை திரும்பி
பார்க்காதே
விமர்சனங்களை

4. வாழ்வதற்கு மட்டுமல்ல
வாழ்ந்து காட்டுவதற்கும்
சொந்த வீடுகள்
தேவைப்படுகிறது

5. கூடு கட்டிய குருவி
கூடவே இருக்கும் என்று
நம்பியது மரத்தின் தவறு


**நடேஷ் கன்னா**
கல்லிடைக்குறிச்சி



முடிவு பெறாத முத்தம்
நித்தம் வேண்டுமென
பித்தம் தெளியாமல்
யுத்தம் செய்யுமளவுக்கு
கட்டம் கட்டி அடம்
பிடித்தேன் அவள்
இன்னும் விடவில்லை ஈர
உதடுகளை கனவில் கூட!


குத்தும் வரை நம்பவே
இல்லை உன் கண்கள்
மீன்களென்று !

சின்னச்சிறு வயதிலிருந்தே
சிறுகச்,சிறுக காதலித்த
உண்மையான
சிண்ட்ரெல்லா
பொம்மை நீயடி!



ரோஜாவின்
முள்
குத்தும் உன்
பார்வை!

**லி.நௌஷாத் கான்**



## காவியக் கவிஞர் வாலியே !

காவியக் கவிஞர் வாலியே !
உந்தன் மரணம்
எங்களுக்கு வலியே !

மாலுமி இழந்த கப்பல் போல
நாங்கள் மட்டற்ற கவிஞரை
இழந்து தவிக்கிறோம் !

வாலிப வாலி என்பது
உண்மை ! வாலிபக்கவியை
எண்பது கடந்தும்
எழுதியவர்!

புதியவானம் புதிய பூமி
என்று எழுதி ! புத்துணர்வை
விதைத்தவர் வாலி !

'ஏமாற்றாதே ! ஏமாறாதே!
என்று எழுதி ! எமக்கு
மனிதநேயம் கற்பித்த வாலி !

கண் போன போக்கிலே கால்
போகலாமா ? காளையரை
நெறிப் படுத்திய வாலி !

தரை மேல் பிறக்க
வைத்தான் என்று எழுதி !
துயரில் வாடும் மீனவர்களின்
கண்ணீர் பாடிய வாலி !

காற்று வாங்கப் போனேன்
கவிதை வாங்கி வந்தேன் !
காற்றில் பாட்டில் கலந்து
என்றும் நின்ற வாலி !

அக்கிரகாரத்தில் பிறந்த
அதிசய மனிதர் வாலி !
அய்யா பெரியார் பற்றியும்
கவி வடித்த வாலி !

**கவிஞர் இரா .இரவி !**



## அணையா விளக்கு

அல்லிமலர், முல்லைச்சரம்,
அன்பு நெஞ்சம் என் அக்கா!
எளிய தோற்றம், வலிய
உள்ளம், எழிலாய் வாழ்ந்த
இல்லம், பழகிய நாட்கள்,
பழைய நாட்கள், மீண்டும்
வந்திட வேண்டும், கண்டு
பிடிக்கச் சொல்லிவிட்டு, நீ
ஒளிந்து கொண்டது போதும்,
கருத்தில் உன்னை இறுக்கப்
பிடித்து, கலங்கி நிற்குதே
நெஞ்சம், உன் கனவினை
நீயும் கலைத்து, உறக்கத்தில்
மெல்ல விழித்து, ஒருமுறை
தம்பியை அழைத்து,
அறிவுரை வார்த்தைகள்
உதிர்த்து, அழகாய் நீயும்



சிரித்து,
அன்பாய்
விழிகள்
பூத்து,
வருவாயோ
குலவிளக்கே,
நம் குலம்
காக்கும் ஒளிவிளக்கே!

**மீனாட்சி பாண்டியன்**
திருவண்ணாமலை







**WANTED**

M/F லோடுமேன்,பிக்கர், ஹெல்பர்,
வர/மாத சம்பளம்: 450-700. உணவு
இடம் free day/N8 shift

**7540003588**






















ஓம்
சிவமயம்
அருள்மிகு ஸ்ரீ விநாயகர் துணை
அருள்மிகு தெய்வகுளம் காளியம்மன் துணை
ஆலய தரிசனம் கோடி புண்ணியம்
கோபுர தரிசனம் கோடி புண்ணியம்
ஸ்ரீ விநாயகர் துதி
ஸ்ரீ தெய்வகுளம் காளியம்மன் துதி
இந்து சமய அறநிலையத்துறை
கோயமுத்தூர் மாவட்டம் ஆனைமலை வட்டம்
வேட்டைக்காரன்புதூர் கிராமம் சேத்துமடை
அருள்மிகு தெய்வகுளம்
காளியம்மன் திருக்கோயில்
சபரிவார புனராவர்த்தன அஷ்டபந்தன
மஹா கும்பாபிஷேக விழா அழைப்பிதழ்
விசுவாவசு வருடம் பங்குனி மாதம் 18 ம் நாள் (01.04.2026) புதன்கிழமை
காலை 6.00 மணிக்குமேல் 7.00 மணிக்குள்


Sanjay
Cell: 90032 64920
Real Choice
Retail & Wholesale
Dealers In: Designer
Sarees, Chudidhar,
Laganga, Choli &
Wedding Collection
#361, Mint Street, (Opp. New Jain Temple)
Sowcarpet, Chennai-600 079.
Real Choice Chennai
Real Choice Chennai
Real Choice Chennai


WANTED
Needed female staff
to look after
children, patients.
Contact
9150989424


WANTED
Retd, VRS, Home Makers,
NRIs, Business Person
Contact
8248951872


WANTED
Site Supervisor required
for construction work in Ambattur
Contact:
8428872887


keerthi foundation
De Addiction Cum Rehabilitation Centre
INTERNSHIP & JOB OPPORTUNITIES
MSW & M.Sc Psychology - Freshers
Internship:
Clinical Training
Counseling Practice
Case Work
Jobs:
Social Worker
Jr Psychologist
Rehab Counselor
Build Your Career in De-Addiction & Mental Health Care
Call: 9841945060 | 7845027710
www.keerthifoundation.com


Vilambaram
GET...
SET.....
SHOOT
YOUR SALES
WITH SOCIAL
MEDIA
ASK US HOW ?
CONTACT US TODAY!
+91-7789941009
www.vilambaram.com


BUSINESS NEWS
DAILY ePAPER
SPORTS
TRAVEL
EBOOK LIBRARY
TECH TRENDS
START YOUR OWN
EPAPER
WEBSITE TODAY!
CALL 7789941009
HEALTH & FITNESS
ENTERTAINMENT
TECH NEWS
TECH TRENDS
FOOD RECIPES


Wanted
REPORTERS
சட்டமன்ற தொகுதி வாரியாக
நிருபர்கள் தேவை
PRESS
PRESS
பேப்பர்பாய்
8122664699


தனியார் வாகன உதிரிபாகங்கள்
உற்பத்தி செய்யும் நிறுவனத்தில்
பணிபுரிய ஆட்கள் தேவை.
Quality Line Inspector
Fresher/Exp Male Only
Qualification - ITI/Diploma/B.E
Final Quality Inspector
Fresher / Exp - Male/Female
Qualification: 10th/ 12th/ ITI
VMC Machine operator
Fresher/ EXP Male only
Qualif: 10th/12th/ITI/Diploma
Mr Prakesh : 8939 940 090
Mr.Neelavanan : 9884 001 253
SALARY BASED ON EXPERIENCE


அனைத்து பிரிவினருக்கும்
என் துணை
திருமண தகவல் மையம்
உங்கள் மணமகனை /
மணப்பெண்ணைப்
பதிவு செய்யவும்.
www.enthunai.com
support@enthunai.com
7871617005
7789941009


அருள்மிகு ஸ்ரீ மாலையம்மன் சமேத அருள்மிகு சுப்பிரமணியர் துணை
அருள்மிகு திருச்செந்தூர் முருகர் துணை
ஸ்ரீ ஹரி
ஜோதிட மையம்
ஜாதகம், திருமணப் பொருத்தம், ஜாமக்கோள், ஆரூடம் பார்க்கப்படும்.
தாம்பூல பிரசன்னம், சோழி பிரசன்னம், அஷ்ட மங்கல பிரசன்னம்
மேலும் திருமணம், புத்திர பாக்கியம், கல்வி, தொழில் ஆகியவற்றில்
ஏற்பட்ட தடைகளுக்கு ஜோதிடரீதியான தீர்வு செய்யப்படும்.
ஜோதிட நிபுணர் இராஜபாளையம்
இராமமூர்த்தி MA Astro
81899 08040 / 93425 03572
harisudhan1968@gmail.com


FREE MARRIAGE
INFORMATION CENTER :
இலவச திருமண
தகவல் மையம்
இலவச திருமண தகவல் மையம்
யாருக்கும் பணம் தர தேவை இல்லை
பணம் வங்கும் புரோக்கர்கள் தவிர்க்கவும்
www.enthuani.com
Call: 9337501889


ADIYOGI
REAL ESTATE
WHOLESALE
VADACHENNAI CALL DRIVER
ஆதியோகி
ரியல் எஸ்டேட்
CMDA DTCP அப்ரூவல்
வீட்டுமனைகள் விற்பனை
_CONTACT_
8939228901


Vilambaram
We provide
Targeted Leads
to grow your
buisness
Boost your business
Call:: 91 7789941009, 9337501889
www.vilambaram.com


THINKING to BUY / SELL / RENT
a PROPERTY
New / Resale
Residential / Commercial
Plots Flats House
Villa Bungalows
Farm Land Ware Houses
Factory Sites Sheds
JOINT VENTURES INVITED
MK REAL ESTATE
Tell me your Budget We Show Your Home
Call :7871617005


SEVEN STARS
LOGISTICS PVT.LTD.
we simplify shipping for your business
We Build Perfection
Our Services are ...
Freight Forwarding, International Courier,
Customs Clearance, Cargo Movement by Air,
Sea and Road, Door to Door Service.
# 2, 2nd floor, Krishnan Koil Street, George Town,
Chennai - 600 001. INDIA.
+91 44 43570909 +91 96770 88843
info@sevenstarslogistics.com www.sevenstarslogistics.com


CAR WASH
SADHANA DEVI.K
SUPREME
Car Wash
& Detailing
Car Foam Pressure Wash
Teflon Coating
Ceramic Wax Treatment
Under Chassis Painting
Interior Foam Wash / Stain Remover
Paint Correction / Protection
We Done Here
9840882711
7200043675
Supremecarwashchennai@gmail.com
No.17/4, Senniamman Koil Street, Tondiarpet, Chennai - 600 081.


அருள்தரும்
தெய்வம்
என்றும் நம் இல்லங்களில்
www.arultharumdeivam.com
அற்புதமான
ஆன்மீக செய்திகள்,
பரிகாரங்கள்,
ஸ்தல வரலாறு மற்றும்
சுவாரஸ்யமான
தகவல்கள் மாதம்
இருமுறை படித்து
ஆன்மீகத்தை
அறியுங்கள்..


LOW COST
MATRIMONY
WEBSITE
CALL: 7789951009



MLMPERFECT.COM
Start Any MLM
Software @
Rs.499/Month
+ EMI Available
EMI
Trusted by
1000+
satisfied clients
Binary Plan
Matrix Plan
Level Plan
Generation Plan
Cryptocurrency MLM
9853719337/7436914247


WANTED
EXPERIENCED
SOCIAL MEDIA
CONTENT CREATORS
94386 10756


We Are Urgently Hiring!
Marketing Manager
Ad Sales (Print Media)
Company : PADMA DIGITAL BROADCAST PRIVATE LTD
Location : Chennai
Padma Digital a leading name in print media, is looking for a Marketing Manager – Ad Sales to join our dynamic team.
Key responsibilities for Marketing Manager
• Minimum 5 years of experience in print media ad sales
• Proven experience in space selling
• Strong background in field sales and client acquisition
• Excellent communication and negotiation skills
• If you're a results-driven professional with a passion for media sales, we want to hear from you
If you are interested
Do send your resume and portfolio to
padmamediapublications@gmail.com
Call: 9337501889
Package
Rs. 4.8 LPA
பாஸ்கர்
பேப்பர்பாய்
தெய்வம்
தமிழ்நாடு இ பேப்பர்.காம்



# பல்சுவை களஞ்சியம்




## பாதங்களை வெடிப்பின்றி மிருதுவாக வைத்து கொள்ள வேண்டுமா? இதோ சூப்பரான டிப்ஸ்!!

பொதுவாக முகத்தை பொலிவாக வைத்துக்கொள்ள எல்லோரும் பெரிய அளவில் மெனக்கெடுகிறோம்.

அதேநேரம், நம் உடலை முழுமையாகத் தாங்கும் பாதத்தை கண்டுகொள்வதே இல்லை. இதனால் தோல் வறட்சியும், அதிக உடல் எடையும்தான் பாத வெடிப்புக்கான முக்கியமான காரணிகள்.

நம் உடலில் நீர்ச்சத்து குறையும்போது தோல் வறண்டு, பாதத்தில் வெடிப்பு உண்டாகும். எனவே இவற்றை எளியமுறையில் போக்கலாம்.

தற்போது அவை என்னென்ன என்பதை தெரிந்து கொள்வோம்.

வாழைப்பழத்தை நன்றாக மசித்து வெடிப்பின் மேல் தேயுங்கள். சில நிமிடங்களில் கழுவுங்கள். இவை ஒரே வாரத்தில் பாத வெடிப்பை மறையச் செய்து மிருதுவான பாதத்தை தரும்.

வாசலினை எடுத்து அதில் எலுமிச்சை சாறு கலந்து பாதங்களில் தடவுங்கள். இரவு முழுவதும் அப்படியே வைத்திருந்து மறு நாள் காலையில் கழுவுங்கள். சாக்ஸ் போட்டுக் கொள்வதால் இன்னும் நல்லது.

ஆலிவ் எண்ணெயில் சில துளி லாவெண்டர் எண்ணெய் கலந்து பாத வெடிப்புகளில் தடவுங்கள். இது அற்புதமான ரிசல்ட்டை தரும். விரைவில் வெடிப்பிலிருந்து குணம் பெறுவீர்கள்.

விளக்கெண்ணெயை சூடுபடுத்தி மஞ்சள் கலந்து தூங்குவதற்கு முன் வெடிப்பில் இந்த எண்ணெயை பூசிக் கொண்டு படுங்கள். இவை ஒரு சில நாட்களில் வெடிப்பை போக்கும்.

வினிகரை சிறிது எடுத்து வெதுவெதுப்பான நீரில் கலந்து பாதங்களை அதில் 10 நிமிடம் தினமும் ஊற வைக்கவும். பின்னர் ஸ்கர்ப் செய்யுங்கள். மிக விரைவில் பலன் தரும். மேலும் வெடிப்பு உண்டாகாமலும் தடுக்கும்.

தேன் ஒரு ஸ்பூன் எடுத்து அதில் அதே அளவு பால கலந்து பாதத்தில் தடவவும். மறு நாள் காலையில் கழுவுங்கள். இது பாதங்களை மிருதுவாக்கும். சொரசொரப்புத்தன்மையை நீக்கும்.



ஓட்ஸை பொடித்து அதனைக் கொண்டு தினமும் பாதங்களை ஸ்க்ரப் செய்யுங்கள். இவை கால்களை மிருதுவாக்குவதோடு, பாதங்களை அழகாக்கு. ஓஸினால் தேய்க்கும்போது பாதங்களின் பக்கவாட்டில் இருக்கும் கருமையை எளிதில் மறையச் செய்யும். ஓட்ஸுடன் எலுமிச்சை சாறு கலந்தால் இன்னும் நல்ல பலன்களை தரும். ஓட்ஸை பொடி செய்து அவற்றுடன் எலுமிச்சை சாறு கலந்து பாதத்தில் தேயுங்கள். சில நிமிடம் கழித்து கழுவுங்கள். இந்த குறிப்பு இன்னும் வேகமாக பலனைத் தரும்.

லிஸ்டெரின் வினிகர் மற்றும் நீர் ஆகிய மூன்றையும் சம அளவு எடுத்து பாத வெடிப்புகளில் தடவுங்கள். அல்லது இவை கலந்த நீரில் 15 நிமிடம் பாதங்களை ஊற விடுங்கள். இவை விரைவில் வெடிப்பை குணப்படுத்தும். பாதம் மூழ்கும் அளவிற்கு நீரை வெதுவெதுப்பக எடுத்துக் கொண்டு அதில் ஆப்பிள் சைடர் வினிகரை 1 மூடி கலந்து பாதங்களை 10 நிமிடம் ஊற வைகக்வும். வாரம் 3 நாட்கள் செய்தால் வெடிப்பு மறையும். தவிர பாத வெடிப்பு வருவதை தடுக்கலாம்.



லால்குடி
- **வெ.நாராயணன்**
மாம்பாக்கம், சென்னை

# மீம்ஸ்







## பதினெட்டு 'பட்டி

வாழைப்பழ வியாபாரியோட பையன் எப்படி இருப்பான்?"
"அப்படியே அப்பனையே உரிச்சு வைச்சிருப்பான்."

----------------------


ரெய்டுக்கு வந்தவங்க போலி சி.பி.சி.ஐ.டி..ன்னு தலைவர் எப்படி உறுதியா சொல்றாரு?"

"தலைவரோட பேஸ்புக் அக்கவுண்ட்டுல. எவ்வளவு பணம், 'பேலன்ஸ்' இருக்குன்னு துருவி துருவி விசாரிச்சாங்களாம்!

-எஸ்.எம்.பித்து

----------------------

கடி டைம்



ஏகப்பட்ட நாய்கள் அவரைச் சுற்றி நிற்குதே..?"

"நான் சொல்லலை அவரு பதினெட்டு 'பட்டி'க்குச் சொந்தக்காரருன்னு..."

## எத்தனை தலைமுறையை காக்கும் புண்ணியப் பலன் ?



கங்கை போன்ற புனித நதியில் நீராடுவது - 3 தலைமுறை.

பாழடைந்த கோவிலில் தீபம் ஏற்றுவது - 5 தலைமுறை.

கோவில் திருப்பணிக்கு உதவுவது -7 தலைமுறை.

ஏழை பெண்ணுக்கு திருமணம் செய்வது - 9 தலைமுறை.

அனாதை பிணத்திற்கு அந்திம கிரியை - 11 தலைமுறை

கோசலைக்கு உதவுவது, பசு பராமரிப்பு - 13 தலைமுறை.

காசி, கயாவில் செய்யப்படும் தர்ப்பணம் - 16 தலைமுறை.

பசிக்கு உணவு அளிப்பது அன்னதானம் 27 தலைமுறை.



**-சிவ.முத்து லட்சுமணன்**
போச்சம்பள்ளி



## விடுகதை

| | |
|---|---|
| கொக்கு எப்ப ஒத்த கால்ல நிக்கும்? | அது ஒத்த காலை எப்ப தூக்குது அப்பதான். |
| நாம் ஏன் தண்ணீர் தெளித்து கோலம் போடுகிறோம்? | கோலம் போட்டு தண்ணீர் தெளித்தால் கோலம் அழிந்துவிடும்ல. |
| ஒரு பையன் அவனுடைய 500 ரூபாய் நோட்டையும் 2000 ரூபாய் நோட்டையும் சாக்கடையில் போட்டுட்டான் பர்ஸ்ட் எதை எடுப்பான்? | அவன் ஃபர்ஸ்ட் வாந்தி எடுப்பான். |
| ரோட்ல போற சில பேரு ஒருத்தர்கிட்ட மட்டும் அடிக்கடி டைம் கேக்குறாங்க ஏன்? | ஏன்ன அவரு வாட்ச்மேன் ஆம். |
| முட்டையை போடாத பறவை என்ன பறவை? | ஆண் பறவை. |



# ஜோக்ஸ்


"என்னய்யா சொல்றான்? பிராந்தி வளர்ச்சி நாட்டுக்கு நல்லதில்லே–ங்கறானே!

"தலைவரே! அது பிராந்திய கட்சி வளர்ச்சி...நீங்கதான் தப்பா புரிஞ்சிகிட்டீங்க!"

---------------

நம் மன்னர் அயல்நாட்டுக்கு சென்று தங்கத்தை ஈர்க்க முயற்சிய செய்கிறாராமே! நலல திட்டம்தான்

"அடேய்! எதிரிநாட்டு இளவரசி தங்கத்தை ஈர்க்க திட்டமாம் அது!"



---------------

அந்த புலவரு பாடிய பாடல்கள் அனைத்தும் அருமைதானே

பின் ஏன் ஒரேயொரு வராகன் பரிசாக தந்தாராம் மன்னர்?

---------------

"பாடல்களில் நீ என்று ஒருமையில் பல இடங்களில் நீ என்று பாடியதால்

------------

"ஏம்பா சூரிய புயல் வரப்போகிறதாமே சேதி தெரியுமா ஒனக்கு?

"ஆமாம்பா! ஊருக்கு போன என் பொண்டாட்டி சூரியா திரும்ப போறாளாம்

---------------

"மன்னர் இப்பொழுதெல்லாம் கலகலப்பாக இருப்பதில்லையே ஏன்?

அந்தப்புர பணிப்பெண் கலா நீண்ட விடுப்பில் சென்று விட்டாராம்!"

# தெய்வீக அருள் தரும் ஆன்மிகம்

## வறுமை நீங்கி செல்வம் பெருக ஐயப்பன் வழிபாடு



கார்த்திகை மாதம் பல தெய்வ வழிபாட்டிற்கு உகந்ததாக கருதப்பட்டாலும், கார்த்திகை என்றால் பெரிய அளவில் பேசப்படுவது சபரிமலை ஐயப்பனுக்கு மாலை அணிந்து விரதம் இருந்து செல்வது தான். அப்படியான ஐயப்பனை 48 நாட்கள் கடும் விரதம் இருந்து, இருமுடி கட்டி அவருடைய தரிசனத்தை காணுவதே பெரும் பாக்கியம் என்று சொல்லலாம். இந்த ஐயப்பனை மட்டும் நாம் நினைத்த போதெல்லாம் தரிசனம் செய்ய முடியாது. அவரை தரிசனம் செய்வதற்கென கடுமையான விதிமுறைகளும் நேரமும் உண்டு.

இந்த இருமுடி வழிபாட்டை அனைவராலும் செய்ய முடியாது அல்லவா? ஆகையால் ஐயப்பனை வீட்டிலிருந்தபடியே கார்த்திகை மாதத்தில் ஐயப்பனை எப்படி வழிபட்டால் நம்முடைய வறுமை நிலை மாறி செல்வ நிலை எட்டலாம் என்பதை நாம் தெரிந்து கொள்ளலாம். இந்த வழிபாட்டை கார்த்திகை மாதத்தின் கடைசி நாளில் மேற்கொள்ள வேண்டும். இந்த வழிபாடு செய்வதற்கான காலம் காலை பிரம்ம முகூர்த்த வேளையில் செய்யலாம்.

இந்த வழிபாடு செய்வதற்கு உங்களிடம் ஐயப்பன் திருவுருவப்படம் இருந்தால் அதை வைத்து பூஜை செய்து கொள்ளுங்கள். படம் இல்லை என்றால் பரவாயில்லை தீபம் ஏற்றி வைத்து அந்த தீபத்தையே ஐயப்பனாக பாவித்து வணங்கலாம். அடுத்து ஒரு வாழை இலை எடுத்துக் கொள்ளுங்கள். அதில் முழுவதுமாக பச்சரிசியை மஞ்சள் கலந்து பரப்பி விடுங்கள். அடுத்து ஏழு மண் அகல் விளக்கை எடுத்து பஞ்சு திரி போட்டு நெய் ஊற்றி தீபம் ஏற்ற தயாராக வைத்துக் கொள்ளுங்கள்.

இதற்கு அடுத்து மூன்று சிறிய கிண்ணங்களை எடுத்துக் கொள்ளுங்கள்.

அதில் ஒரு கிண்ணத்தில் நெய், மற்றொரு கிண்ணத்தில் மூன்று பழங்கள் ஒன்றாக சேர்த்து வைக்க வேண்டும். அது உங்களுக்கு விருப்பமான எந்த பழங்களாக வேண்டுமானாலும் இருக்கலாம். இன்னொரு கிண்ணத்தில் நைவேத்தியமாக தேங்காய் சாதம் செய்து வைத்து விடுங்கள்.


இப்போது வாழை இலையில் பரப்பி வைத்திருக்கும் அரிசியை பூஜை அறையில் வைத்து அதை சுற்றி நைவேத்தியத்தை வைத்து விடுங்கள். அதன் பிறகு ஏழு அகல் விளக்கை பச்சரிசியை பார்த்தவாறு சுற்றி வைத்து ஏற்றுங்கள். இந்த விளக்குகளை ஏற்றிய பிறகு நீங்கள் கிழக்கு அல்லது வடக்கு திசை நோக்கி அமர்ந்து ஐயப்பனை மனதார வேண்டிக் கொள்ளுங்கள்.

இந்த நேரத்தில் சுவாமியே சரணம் ஐயப்பா என்று இந்த வார்த்தையை 108 முறை ஐயப்பனை நினைத்து சொல்லிய பிறகு தீப தூப ஆராதனை காட்டி பூஜையை நிறைவு செய்து கொள்ளுங்கள்.

பூஜை நிறைவு செய்த பிறகு நைவேத்தியமாக வைத்த பிரசாதத்தை 10 வயதிற்கும் குறைவாக உள்ள குழந்தைகளுக்கு முதலில் கொடுங்கள். அதன் பிறகு வீட்டில் உள்ள அனைவரும் நைவேத்தியங்களை உண்ணலாம்.

ஐயப்பனை நினைத்து செய்யப்படும் இந்த எளிய வழிபாடு நம்முடைய வாழ்க்கையை மாற்றக் கூடிய அற்புத சக்தி வாய்ந்ததாக இருக்கும். ஐயப்பனை காணவும் அவருடைய தரிசனத்தை பெறவும் கோடான கோடி மக்கள் அவரை நாடி சென்று கொண்டிருக்கிறார்கள். நாம் வீட்டிலிருந்தபடியே எளிமையான முறையில் அவரை இப்படி வணங்கி அவருடைய அருளை பெறலாம்.

## கோவிலில் வழிபடும் முறை: தெரிந்து கொள்ள வேண்டியவை!



கோவிலுக்கு சென்று சுவாமியை வழிபடும்போது, பல விதிமுறைகள் இருக்கின்றன. கோவில்கள் அனைத்தும் ஆகம விதிப்படி கட்டப்பட்டது என்பதால் ஆகமவிதிப்படி கடைப்பிடிக்கப்படும் சில நியமங்களை கண்டிப்பாக கடைபிடித்தே ஆக வேண்டும். அதன்படி,

* கோவிலுக்குச் செல்வதற்கு முன் குளித்து, சுத்தமான ஆடைகளை அணிய வேண்டும். உடல் தூய்மையுடன் மனத் தூய்மையும் அவசியம்.

* வெறுங்கையுடன் கோவிலுக்குச் செல்லாமல், பூக்கள், பழங்கள், தேங்காய் அல்லது அபிஷேகப் பொருட்கள் போன்றவற்றை இயன்ற அளவில் எடுத்துச் செல்வது நல்லது.

* கோவிலுக்குள் சென்றதும், முதலில் கோபுர தரிசனம் செய்த பிறகு விநாயகரை வணங்கி செல்ல வேண்டும்.

* கொடிமரம், பலி பீடம், நந்தி ஆகியவற்றை வணங்கிய பிறகே சுவாமி தரிசனம் செய்ய வேண்டும்.

* சுவாமியை தரிசனம் செய்யும்போது, அந்த தெய்வத்துக்குரிய மந்திரம் அல்லது பாடல்களை பாடி வழிபாடு செய்வது நல்லது. பிறகு அம்மன் சன்னதி சென்று அம்பாளை மனதார வணங்க வேண்டும். முருகர், தட்சிணாமூர்த்தி, துர்கை, சண்டிகேஸ்வரர் மற்றும் பரிவார தேவதைகளை வணங்கி பிரகாரத்தை மூன்று முறையாவது வலம் வர வேண்டும். நவக்கிரக மண்டபத்தையும் வலம் வர வேண்டும்.

* திருநீற்றை இரு கைகளாலும் வாங்கி கீழே சிந்தாமல் பூச வேண்டும்.

* கோவில் பிரகாரத்தை வலம் வந்ததும், கொடி மரத்தின் முன்பாக கீழே விழுந்து வணங்க வேண்டும். பின்னர் சிறிது நேரம் மௌனமாக அமர்ந்து அல்லது மனதை ஒருநிலைப்படுத்தி தியானம் செய்த பிறகே கோவிலில் இருந்து செல்ல வேண்டும்.

இந்த வழிமுறைகளைப் பின்பற்றி, முழுமையான பக்தியுடனும், அமைதியான சிந்தனையுடனும் இறைவனை வழிபட்டால், இறையருளைப் பூரணமாகப் பெறலாம்.

## மலையாக அருள்பாலிக்கும் அண்ணாமலையார்



திருவண்ணாமலையில் மிகவும் பிரசித்தி பெற்ற அண்ணாமலையார் திருக்கோவில் அமைந்துள்ளது. பஞ்சபூத தலங்களில் அக்னி தலமாகவும், தேவாரப் பாடல் பெற்ற 274 சிவாலயங்களில் 233-வது தலமாகவும், அப்பர், திருஞானசம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகியோரது பாடல் பெற்ற தலமாகவும் இக்கோவில் உள்ளது.

இந்த ஆலயம் சுமார் 25 ஏக்கர் பரப்பளவில் பரந்து விரிந்து காணப்படுகிறது. இங்கு மொத்தம் 9 பெரிய கோபுரங்களும், 140-க்கும் மேற்பட்ட சன்னிதிகளும் அமைந்துள்ளன. அதில் 22 விநாயகர் சன்னிதிகளும் அடங்கும். சிலைகள் என்று கணக்கிட்டால் ஆலயம் முழுவதும் 200-க்கும் மேற்பட்ட சிலைகள் உள்ளன. 2-ம் பிரகாரத்தில் 63 நாயன்மார்களுக்கு கற்சிலைகளும், வெண்கல சிலைகளும் உள்ளன. இங்கு திரும்பும் திசையெல்லாம் லிங்கங்களை காணலாம்.

கோவிலின் கிழக்கு பகுதியில் 217 அடி உயரத்தில் ராஜகோபுரம் காணப்படுகிறது. மேற்கு பகுதியில் உள்ள கோபுரம் 'பேய்க் கோபுரம்' என்று அழைக்கப்படுகிறது. 'மேலக் கோபுரம்' என்பது 'மேக்கோபுரம்' என்றாகி, பின் நாளடைவில் பேய்க் கோபுரமாக மருவியது. தெற்குக் கோபுரம் 'திருமஞ்சன கோபுரம்' என்ற பெயரைத் தாங்கி நிற்கிறது. வடக்குக் கோபுரம் 'அம்மணி அம்மன் கோபுரம்' என்றழைக்கப்படுகிறது. அம்மணி அம்மாள் என்ற பக்தை பல தடங்கல்களுக்கு மத்தியில் ஒவ்வொரு வீடாக சென்று பொருள் ஈட்டி வடக்குக் கோபுரத்தைக் கட்டி முடித்தார். இதன் காரணமாகவே இவ்வம்மையார் பெயரில், அம்மணி அம்மன் கோபுரம் விளங்குகிறது.

பொதுவாக ஆலயங்களில் அம்பாள் சன்னிதி முன்பாக சிம்மம்தான் அமைக்கப்பட்டிருக்கும். ஆனால் திருவண்ணாமலை ஆலயத்தில் உண்ணாமுலை அம்மன் சன்னிதியில் சிம்மத்திற்கு பதிலாக நந்தி உள்ளது. ஈசனிடம் கோபித்துக் கொண்டு பூலோகத்துக்கு வந்த பார்வதி இத்தலத்தில் தவம் இருந்தாள். அவளுக்கு பாதுகாப்பாக நந்தியும் வந்துவிட்டார். இதை பிரதிபலிக்கும் விதமாக உண்ணாமுலை அம்மன் சன்னிதி முன்பு நந்தி உள்ளது.

இத்திருக்கோவிலில் சதுர் புஜத்துடன் வீற்றிருக்கும் அபிதகுசாம்பாள் வேறெங்கும் இல்லாத அளவிற்கு சுமார் 6 அடி உயரத்தில் நின்ற கோலத்தில் காணப்படுகிறாள். இந்த அம்பிகை தெற்கு முகமாக வீற்றிருந்து சாந்தமாக தினம் ஒரு விதமான முகத்தோற்றத்துடன் பக்தர்களுக்கு அருள்பாலிப்பது குறிப்பிடத்தக்கது. ஒவ்வொரு பவுர்ணமி அன்றும் பகல் வேளையில் சிறப்பு பூஜையும், அபிஷேகமும், திருவிளக்கு பூஜையும் மகளிரால் செய்யப்படுகிறது.

இத்தலத்தில் பிரம்ம தீர்த்தம், சக்கர தீர்த்தம், இந்திர தீர்த்தம், அக்னி தீர்த்தம் என கிட்டத்தட்ட 360 தீர்த்தங்கள் உள்ளன. பிரம்ம தீர்த்த கரையில் கால பைரவர் சன்னிதி உள்ளது. இவரது சிலையானது திருவாசியுடன் ஒரே கல்லில் சுமார் 6 அடி உயரத்துக்கு காணப்படுகிறது. இவர் எட்டு திருக்கரங்களுடன் ஆயுதம் ஏந்தியும், கபால மாலையுடனும் காட்சி தருகிறார். தேய்பிறை அஷ்டமி நாட்களிலும், ஞாயிற்றுக்கிழமை ராகு காலத்திலும் இவரை வழிபடுவது மிகவும் சிறப்பு வாய்ந்ததாக கருதப்படுகிறது.

திருவண்ணாமலையில் மலையே சிவபெருமானாக கருதப்படுகிறது. எனவே இங்கு கிரிவலம் வருவது மிகவும் விசேஷமானது. கிரிவல பாதையின் தூரம் 14 கி.மீ. ஆகும். கிரிவல பாதையில் சன்னிதிகளும், மகான்களின் சமாதிகளும் காணப்படுகின்றன. மேலும், திருவண்ணாமலை மலையை சுற்றி இந்திர லிங்கம், அக்னி லிங்கம், எம லிங்கம், நிருதி லிங்கம், வருண லிங்கம், வாயு லிங்கம், குபேர லிங்கம், ஈசான்ய லிங்கம் என எட்டு லிங்கங்கள் உள்ளன.

### கார்த்திகை திருவிழா

திருவண்ணாமலையில் கார்த்திகை திருவிழா வருகிற 21-11-2025 முதல் 7-12-2025 வரை வெகுவிமரிசையாக கொண்டாடப்படுகிறது. 21-ந் தேதி முதல் நாள் துர்க்கை அம்மன் உற்சவத்துடன் விழா தொடங்குகிறது. 22-ந் தேதி பிடாரி அம்மன் உற்சவமும், 23-ந் தேதி விநாயகர் சண்டிகேஸ்வரர் உற்சவமும் நடைபெறுகிறது. 24-ந் தேதி கோவில் கொடியேற்றப்படுகிறது. அன்றைய தினம், சம்பந்த விநாயகர் சன்னிதியில் அபிஷேக, ஆராதனைகள் நடைபெறுகிறது. இறைவன் வெள்ளி வாகனத்திலும், சிம்ம வாகனத்திலும் பவனி வருவார்.

25-ந் தேதி தங்க சூரியபிரபையிலும், வெள்ளி இந்திர விமானத்திலும் உலா வருகிறார். 26-ந் தேதி வெள்ளி அன்ன வாகனத்திலும், 27-ந் தேதி வெள்ளி காமதேனு வாகனத்திலும், 28-ந் தேதி வெள்ளி ரிஷப வாகனத்திலும், 29-ந் தேதி வெள்ளி ரதத்திலும் பவனி வரும் காட்சி நடைபெறும். 30-ந் தேதி கோவிலில் மகா ரத உற்சவம் நடைபெறுகிறது. டிசம்பர் 1-ந் தேதி பிச்சாண்டவர் உற்சவமும், குதிரை வாகனத்தில் பவனியும் நடக்கிறது. 2-ந் தேதி கயிலாச வாகனத்திலும், காமதேனு வாகனத்திலும் உலா வருகிறார்.


3-ந் தேதி அதிகாலையில் அண்ணாமலையார், உண்ணாமுலை அம்மனுக்கு சிறப்பு அபிஷேகம், ஆராதனைகள் நடைபெற்று, பின்பு அண்ணாமலையார் கருவறையில் பரணி தீபம் ஏற்றப்படும். தொடர்ந்து அம்மன், விநாயகர், முருகன் போன்ற பிற சன்னிதிகளில் பரணி தீபம் ஏற்றப்படுகிறது. அன்றைய தினம் மாலையில் கோவில் மலை உச்சியில் மகா தீபம் ஏற்றப்படுகிறது. இதில் லட்சக்கணக்கான பக்தர்கள் கலந்துகொள்வர்.

4-ந் தேதி சந்திரசேகர் தெப்ப உற்சவமும், 5-ந் தேதி பராசக்தி தெப்ப உற்சவமும், 6-ந் தேதி சுப்பிரமணியர் தெப்ப உற்சவமும் நடைபெறுகிறது. இறுதி நாளான 7-ந் தேதி சண்டிகேஸ்வரர் வெள்ளி ரிஷப வாகனத்தில் பவனி வருவார்.

### தினசரி பூஜை

காலை 5 மணிக்கு கோவில் நடை திறக்கப்படுகிறது. காலை 5.15 மணிக்கு கோ பூஜை, 5.30 மணிக்கு பள்ளியெழுச்சி பூஜை, 6 மணிக்கு உஷாகால பூஜை, 8.30 மணிக்கு காலசந்தி பூஜை, 11 மணிக்கு உச்சிகால பூஜை முடிந்து, பகல் 12.30 மணிக்கு நடைசாற்றப்படுகிறது. கோவில் மீண்டும் மாலை 3.30 மணிக்கு திறக்கப்படும். 5.30 மணிக்கு சாயரட்சை பூஜை, இரவு 7.30 மணிக்கு இரண்டாம் கால பூஜை, 9 மணிக்கு அர்த்தஜாம பூஜை, 9.15 மணிக்கு பள்ளியறை பூஜை முடிந்து இரவு 9.30 மணிக்கு நடைசாற்றப்படுகிறது.

## சோழ தேசத்தின் பஞ்சம் போக்கிய 'மகாகணபதி'



இந்து மதத்தில் முழுமுதற் கடவுளாக போற்றப்படுபவர் விநாயகர். இவரை பிள்ளையார், கணபதி, கணேஷா, விநாயகர் என பல்வேறு பெயர்களில் வழிபடுகிறார்கள். விநாயகர் வழிபாடு இந்தியாவில் மட்டுமல்ல நேபாள நாட்டிலும் பரவலாக காணப்படுகிறது. விநாயகரை முழுமுதற் கடவுளாக வழிபடும் முறை 'காணாதிபத்தியம்' என அழைக்கப்படுகிறது.

காணாதிபத்தியம் பின்பு சைவ சமயத்தோடும், வைணவ சமயத்தோடும் ஒன்றிணைந்தது. வைணவர்கள், விநாயகரை 'தும்பிக்கை ஆழ்வார்' என்று அழைப்பார்கள். இவர் கணங்களின் அதிபதி என்பதால் 'கணபதி' என்றும், யானையின் முகத்தினை கொண்டுள்ளதால் 'யானைமுகன்' என்றும் அழைக்கப்படுகிறார்.

இந்து புராணங்களில் சிவன், பார்வதி ஆகியோரின் பிள்ளையாகவும், முருக கடவுளின் அண்ணனாகவும் விநாயகர் வணங்கப்படுகிறார். விநாயகரின் வாகனம் மூஞ்சூறு. கணேச புராணம் கிருத, திரேதா, துவாபர, கலி ஆகிய 4 யுகங்களிலும் 4 அவதாரங்களாக கணபதி அவதரிப்பதாக கூறுகிறது. விநாயகப் பெருமானின் புராணத்துடன் காவிரி டெல்டா பகுதிக்கும் தொடர்பு உள்ளது. காவிரி டெல்டா முழுவதும் பல்வேறு பெயர்களுடன் கோவில் கொண்டு அருள்பாலித்து வரும் விநாயகரை தரிசிக்க முடியும். அந்த வகையில் பிரசித்திப்பெற்ற தலம் கணபதியின் பெயராலேயே அமைந்த கணபதி அக்ரஹாரம் ஆகும். இங்கு மகா கணபதியாக விநாயகப்பெருமான் வீற்றிருந்து அருள்பாலிக்கிறார். இந்த தலம் தஞ்சை மாவட்டம் அய்யம்பேட்டை அருகே உள்ளது.

ஒரு காலத்தில் பஞ்சம் நீங்குவதற்காக இத்தலத்தில் கவுதம மகரிஷி பூஜித்ததாகவும், அதனால் பஞ்சம் நீங்கிய காரணத்தால் இந்த இடம் 'அண்ணகோஷஸ்தலம்' என்று அழைக்கப்பட்டதாக புராணங்களில் கூறப்படுகிறது. ஒரு சமயம் அகத்திய முனிவரின் தவத்துக்கு, காவிரி ஆற்றின் 'சல சல' என்ற ஆரவார நீரோட்ட சத்தம் இடையூறாக இருந்து, அவரை கோபம் அடைய செய்தது. இதனால் அகத்திய முனிவர், தனது தவ வலிமையால் காவிரியை தனது கமண்டலத்தில் அடக்கிவிட்டார். இதனால் சோழ தேசமானது வளம் குன்றி, பசி, பஞ்சம் ஏற்பட்டு தேவபூஜைகள் நின்று விட, தேவர்கள் எல்லாம் விநாயகப் பெருமானிடம் முறையிட்டனர்.

காவிரி நதிக்காக மனம் இரங்கிய விநாயகப்பெருமானும் காக்கை உருவம் கொண்டு கமண்டலத்தை தனது அலகால் தட்டிவிட்டார். இதனால் காவிரி ஆறு வெள்ளமாக பெருக்கெடுத்து ஓடி, சோழ வளநாடு விநாயகப் பெருமானால் மீண்டும் வளம் பெற்றது. கமண்டலத்தை தட்டி விட்ட காகத்தை அகத்திய மாமுனி பின்தொடர்ந்து சென்றபோது இந்த இடத்தில் (கணபதி அக்ரஹாரம்) விநாயகப் பெருமானாக அவருக்கும், காவிரி தாய்க்கும் காட்சி அளித்ததாக தல வரலாறு கூறுகிறது.

இங்குள்ள மகா கணபதி ஆலயத்தில், தன்னை நாடி வரும் பக்தர்களுக்கு வேண்டிய வரங்களை அளித்து காத்தருள்கிறார் மகா கணபதி. இந்த கிராமத்தில் பல குடும்பங்களுக்கு இவர் குல தெய்வமாகவும் விளங்குகிறார். பொதுவாக, முருகனின் வாகனமாகத்தான் மயில் கருதப்படுகிறது. ஆனால் இங்கு கணபதிக்கும் மயில்தான் வாகனமாக திகழ்கிறது. ஆகவே இக்கோவில் மகாகணபதியை 'மயூரிவாகனன்' என்றும் அழைக்கிறார்கள்.

இவ்வூரில் விநாயக சதுர்த்தியை கொண்டாடுவது சற்று வினோதமான வழக்கமாக உள்ளது. விநாயகர் சதுர்த்தி அன்று இந்த ஊர் மக்கள், களிமண்ணில் பிள்ளையார் செய்து, வீட்டில் வைத்து பூஜிப்பது கிடையாது. தங்கள் வீட்டில் செய்த கொழுக்கட்டை போன்ற நைவேத்தியப் பொருட்களை எடுத்துக் கொண்டு அனைவருமே மகாகணபதி சன்னிதிக்கு வருகின்றனர். கோவிலில்தான் விநாயகர் சதுர்த்தி பூஜை, நைவேத்தியம் எல்லாம் செய்கின்றார்கள்.

தஞ்சை மாவட்டம் திருவையாறில் இருந்து 9 கி.மீ. தொலைவில் அமைந்திருக்கிறது கணபதி அக்ரஹாரம். தஞ்சை - கும்பகோணம் சாலையில் அய்யம்பேட்டைக்கு வந்து அங்கிருந்து காவிரி ஆற்றுப்பாலம் வழியாக சென்றால் 3 கி.மீ. தொலைவில் இக்கோவிலை அடையலாம், மகாகணபதியை கண்குளிர தரிசிக்கலாம்.

இந்த பகுதியில்
உங்கள் படைப்புக்கள் வரவேற்கிறோம்
whatsapp No
8122664699

## தமிழ்நாட்டின் பொறுப்பு ஆளுநராக ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் பதவியேற்றார்



தமிழ்நாட்டின் பொறுப்பு ஆளுநராக ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் பதவியேற்றார். ஆளுநர் பதவியேற்பு நிகழ்ச்சியில் முதல்வர் மு.க.ஸ்டாலின், சபாநாயகர் அப்பாவு உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## கட்டுமானத் தொழிலாளர்கள் நல சங்க நிர்வாகிகளுக்கான கூட்டம்

**சென்னை, மார்ச் 13:**

கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரிய தலைவர் அவர்களின் தலைமையில் கட்டுமானத் தொழிலாளர்கள் நல சங்க நிர்வாகிகளுக்கான கூட்டம் இன்று (13.03.2026) மாலை 3.15 மணிக்கு எண்.8, வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலையில் அமைந்துள்ள தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரிய தலைமை அலுவலக 3-ம் தளத்தில் நடைபெறவுள்ளதால் தொழிற்சங்க நிர்வாகிகள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இப்படிக்கு தொழிலாளர் உதவி ஆணையர் (சபாதி) சென்னை.

## தமிழ்நாடு அரசு அனைத்து துறை ஓய்வூதியர் சங்கத்தின் விருதுநகர் மாவட்ட செயற்குழு கூட்டம்



தமிழ்நாடு அரசு அனைத்து துறை ஓய்வூதியர் சங்கத்தின் விருதுநகர் மாவட்ட செயற்குழு மாவட்ட தலைவர் பாலகிருஷ்ணன் தலைமையில் நேற்று 12.3.26 பிற்பகல் TNROA சங்க கட்டிடத்தில் நடைபெற்றது.

மாவட்ட செயலாளர் இராம சுப்புராஜ் கடந்த கால நடவடிக்கைகள் குறித்து எடுத்துரைத்தார் மாநில செயலாளர் முனைவர் சு கிருஷ்ணன் அகில இந்திய மாநாடு முடிவுகள் குறித்து எடுத்துரைத்தார். அகில இந்திய மாநாடு பிரதிநிதி கோட்டைராஜன் அகில இந்திய மாநாடு பங்கேற்பு குறித்து விரிவாக பேசினார். மாநில செயலாளர் வி.குருசாமி மாநில நிர்வாகிகள் கூட்ட முடிவுகள் குறித்து எடுத்துரைத்தார்.

செயற்குழு கூட்டத்தில் மண்டல கருத்தரங்கில் 47 பேர் பங்கேற்பு செய்வதை உறுதி செய்வதென்று முடிவு செய்யப்பட்டது.


## 3 மாதங்களுக்கு தேவையான பெட்ரோல, டீசல் கையிருப்பு



பெட்ரோல் டீசல் கிடைக்காத நிலை உருவாகும் என பரவிய வதந்தியால் ஏராளமான மக்கள் பல பெட்ரோல் பங்குகளில் நீண்ட வரிசையில் காத்திருக்கின்றனர். இந்த நிலையில் அடுத்த 3 மாதங்களுக்கு தேவையான பெட்ரோல, டீசல் கையிருப்பு உள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.




## நம் வாசவி அம்மன்



பொள்ளாச்சி ஸ்ரீ வாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் ஆலயத்தில் நம் வாசவி அம்மன் வண்ணமலர் மாலைகளால், தங்க ஆபரணங்களுடன் சிறப்பு அலங்காரத்தில் அருள் பாலிக்கும் காட்சி.

தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை.

# பழனி மாரியம்மன் கோவில் மாசி திருவிழா; 1008 பால்குட ஊர்வலம்!

### சித்தநாதன் சன்ஸ் எஸ்.ஜி.சிவனேசன் பங்கேற்பு!!





**பழனி, மார்ச். 13:**

பழனி மாரியம்மன் கோவில் மாசித்திருவிழா வையொட்டி, அன்னாபி ஷேகமும், 1008 பால்குட ஊர்வலமும் பழனியில் நடைபெற்றது .

திண்டுக்கல் மாவட்டம் பழனி நகரில் புகழ்பெற்ற மாரியம்மன் கோவில் மாசி திருவிழாவை யொட்டி, பழனி வ.உ.சி மன்றம் சார்பில் காந்தி ரோடு பாண்டிய வேளாளர் மடத்திலிருந்து 1,008 பால்குட ஊர்வலம் நடைபெற்றது.

விழாவில் சித் தநாதன் சன்ஸ் எஸ் ஜி பழ னிவேல் தலைமை வகித்து ஊர்வலத்தை தொடங்கி வைத்தார். அதன் பின்பு பழனி மாரியம்மனுக்கு பாலாபிஷேகம் மற்றும் பதினாறு வகையான சிறப்பு அபிஷேகம் நடைபெற்றது.

பின்பு மாலை 3 மணி அளவில் மாரியம்ம னுக்கு அன்னாபிஷேகமும், அன்னத்தால் சிறப்பு சிறப்பு பூஜையுடன் சைலபுத்தரி அலங்காரம் நடைபெற்றது. இதில் சித்த நாதன் எஸ் ஜி சிவனேசன், பால்குடம் விழாகமிட்டி தலைவர் லயன் எஸ் .பி.அசோக் பங்கேற்றார். மேலும் இரவில் மாரியம்ம னுக்கு உற்சவ சாந்தி பூஜை நடைபெற்றது.

இதற்கான விழாக்களில், சித்தநாதன் சன்ஸ் எஸ் ஜி தனசேகர், எஸ் ஜி பழனி வேல், எஸ்என் அசோக்கு மார், எஸ் என் செந்தில்கு மார், எஸ் என் விஜயகுமார், கொங்கு வேளாளர் சங்கம் ஆர்.மாரிமுத்து, நகர் மன்ற தலைவர் உமா மகேஸ்வரி, நகர திமுக செயலாளர் வேலுமணி, ஏ கே எம் சக்திவேல், எஸ். ராஜா, முன்னாள் எம்எல்ஏ கே எஸ் என் வேணுகோ பால், ரெணகாளியம்மன் கோவில் நிர்வாகிநரேந்தி ரன், நிர் வாகி செல்வராஜ், தென் னிந்திய வெள்ளாளர் உற வின்முறை மதுரைபிடி ஆர் தனவேல் பிள்ளை, வெள்ளாளர் முன்னேற்ற கழகம் மாநில பொதுச் செயலாளர் பந்தல் ராஜா, பழனி சரவணபொய்கைகந்தவிலாஸ் உரிமையாளர் என் . பாஸ்கரன், தமிழ்நாடு அனைத்து வணிகர் சங்கங்க ளின் பேரமைப்பின் மாவட்ட தலைவர் ஜே பி சரவணன், நகர அதிமுக செயலாளர் முருகானந்தம், அதிமுக மாவட்ட எம்ஜி ஆர் இளைஞர் அணி இணை செயலாளர் அசோக் பெருமாள், சாய்கிருஷ்ணா மருத்துவமனை சுப்புராஜ் ,விஜபி குமார், அரிமா சங்க மயில் சாமி, பாரதிய ஜனதா கட்சி முன்னாள் மாவட்ட தலை வர் கனகராஜ், மாவட்ட பொருளாளர் எஸ்பி ஆனந்த பெருமாள், பேச்சியம்மாள் ரைஸ்மில் சுப்பிரமணியன்,வ உ சி மன்றம் நிர்வாகிகள் சிவக்கொழுந்து, சுப்பிரமணியன், எஸ் சுந் தர், எஸ் குமார், சுவாமி விலாஸ் விபூதி ஸ்டோர் அதிபர் முருகேசன், எம் எஸ்குகன், சுராங்கனிகணே சன், மகளீர் குழு தலைவி இந்திரா ,துர்கா கணேசன்,எ ரமேஷ், திருநாவுக்கரசு, ஓர்க்ஷாப் பாலசுப்பிரமணி, சிவகுமார், புவனேஸ்வரன், ராஜபாண்டியன், ஆவின் ரவி, வாட்டர் பாலசுப்பிர மணி, அடிவாரம் கார்த்தி, துரை செல்ல பாண்டியன், சண்முகவேல் மஹால்ரவிச் சந்திரன், யூ கார்த்திகேயன், கமலம் ஹோட்டல் சுப்பு ராஜ், முருகன் சா மில் காளிங்கராயன், நாகு ஜி, பி கே என் பிச்சைமுத்து, மீனாட்சி ராஜன், எஸ்.கே. பாபு, ஜுவல்லரி தீபக், உட் பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்

# விளாத்திகுளம் அருகே சிறுமி துண்டு துண்டாக வெட்டிக் கொல்லப்படவில்லை

### காவல்துறை விளக்கம்



**தூத்துக்குடி, மார்ச் 13:**

தூத்துக்குடி மாவட்டம் விளாத்திக்குளம் அருகே உள்ள வேடநத்தம் கிராமத்தைச் சேர்ந்த 17 வயது மாணவி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு, துண்டு துண்டாக வெட்டப்பட்ட சம்பவம் தமிழ்நாடு முழுவதும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பாக போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்திவருகின்றனர். மேலும் சம்பந்தப்பட்டோரை கைதுசெய்யக்கோரி பெற்றோர் மற்றும் உறவினர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதனிடையே இச்சம்பவத் திற்கு அரசியல் தலைவர்கள் பலரும் கண்டனம் தெரிவித்து வருகின்றனர். இந்நிலையில் சிறுமி துண்டு துண்டாக வெட்டிக் கொலை செய்யப்படவில்லை என காவல்துறை தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சம்பவ இடத்தில் இருந்து சிறுமியின் சடலம் முழுமையாக மீட்கப்பட்டது என போலீசார் தெரிவித்துள்ளனர்.

மேலும் உடற்கூராய்வு அறிக்கை, தடய அறிவியல் விசாரணை அறிக்கைக்கு பின்பே பாலியல் குற்றம் நிகழ்ந்ததா என தெரியும் என்றும், உண்மைக்கு புறம்பான தகவல்களை வெளியிட்டு குழப்பம், அச்சத்தை ஏற்படுத்த வேண்டாம் என்றும் கேட்டுக் கொண்டுள்ளனர். மேலும் சிறுமியின் புகைப்படம் மற்றும் பெயரை சமூக வலைதளங்களில் வெளியிட்டால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் எச்சரித்துள்ளனர்.

# குற்றங்களின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதாகச் சொல்வது முற்றிலும் தவறானது' - உள்துறை செயலாளர் தீரஜ் குமார்

**சென்னை, மார்ச் 13:**



சென்னையில் இன்று தமிழ்நாடு உள்துறை செயலாளர் தீரஜ்குமார் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது தமிழ்நாட்டில் குற்றங்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவது தொடர்பான கேள்விகளுக்கு பதிலளித்த அவர்,

"குற்றங்களின் எண்ணிக்கை அதிகரிப்பதாகச் சொல்வது முற்றிலும் தவறானது. கடந்த ஐந்து ஆண்டுகளில் கடுமையான குற்றங்களின் எண்ணிக்கை எவ்வாறு குறைந்துள்ளது என்பதற்கான புள்ளிவிவரங்களை நான் ஏற்கனவே வழங்கியுள்ளேன். அதுவே ஒட்டுமொத்தச் சூழல் கணிசமாக முன்னேறியுள்ளது என்பதைத் தெளிவுபடுத்தும். மக்கள் நிர்வாகத்தின் மீது, குறிப்பாகக் காவல்துறை மீது அதிக நம்பிக்கை கொண்டு புகார்களைப் பதிவு செய்கின்றனர்.

காவல்துறை மரணங்கள் விவகாரத்தில் தமிழ்நாடு அரசு துளியும் சகிப்புத்தன்மையற்ற அணுகுமுறையைக் கொண்டுள்ளது. எப்போதாவது அரிதாக துரதிர்ஷ்டவசமான இதுபோன்ற சம்பவம் நிகழ்ந்தால், தமிழ்நாடு அரசு அதுகுறித்து நியாயமான மற்றும் வெளிப்படையான விசாரணை நடத்தப்படுவதையும், சம்பந்தப்பட்ட குற்றவாளி சட்டத்தின் முன் நிறுத்தப்படுவ தையும் உறுதி செய்யும். அஜித் குமார் கொலை வழக்கில் அரசின் நிலைப்பாடு என்ன? மற்றும் அரசு என்ன நடவடிக்கை எடுத்தது? என்பதை அனைவரும் அறிவார்கள் சிபிசிஐடி அவ்வழக்கை நன்றாக விசாரிக்கும் என்றாலும், சம்மந்தப்பட்டவர்கள் போலீசார் என்பதால்,வெளிப்படைத்தன்மை காரணமாக சிபிஐக்கு வழக்கை அரசு மாற்றியது. என தெரிவித்தார்.

தொடர்ந்து எப்போதும் சட்டம், ஒழுங்கு தொடர்பான விமர்சனங்களுக்கு எப்போதும் அமைச்சர்கள்தான் செய்தியாளர் களை சந்திப்பார்கள். அவர்கள்தான் குற்றங்களின் எண்ணிக்கையை கடந்த ஆட்சியோடு ஒப்பிட்டு பேசுவார்கள். ஆனால் நீங்கள் ஏன் இப்போது செய்தியாளர்களை சந்திக்கிறீர்கள், அதற்கான காரணம் என்ன என்ற கேள்விக்கு,

சட்டம் ஒழுங்கு சூழல் தொடர்பாக உண்மைக்கு மாறாக சில மாதங்களாக செய்திகள் ஊடகங்களில் சித்தரிக்கப்படுகின்றன. இது தொடர்பாக விளக்கம் அளிக்கவே இன்று செய்தியாளர்களை சந்திக்கிறோம். 2021ல் 1597 கொலை வழக்குகள் பதிவாகியுள்ளன. 2025ல் இது 1461 ஆக குறைந்துள்ளன. படிப்படியாக குறைகின்றன. மற்றொன்று அரசியலுக்கும் எங்களுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை. நான் எந்த ஆண்டை குறிப்பிட்டு சொன்னேன் என்று நீங்கள் கவனித்தால் இதில் அரசியல் உள்ளதா என்பது உங்களுக்கு புரியும் எனவும் தெரிவித்தார்.

## அனைத்து துறை அரசு அலுவலர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ், நினைவு பரிசு வழங்கும் நிகழ்ச்சி



**திருவண்ணாமலை, மார்ச் 13:**

மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் முன்னேற்றத்தை நாடும் வட்டாரம் திட்டத்தின் கீழ் பணியாற்றிய ஊரக வளர்ச்சித் துறை, மகளிர் திட்டம்,மருத்துவத்துறை, கல்வித்துறை, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டம்,கால்நடை மற்றும் ஆவின் போன்ற துறைகளைச் சார்ந்தவர்களுக்கு திருவண்ணா மலை மாவட்ட ஆட்சித் தலைவர் உயர்திரு க. தர்ப்பகராஜ் இ.ஆ. ப. அவர்கள் பாராட்டு சான்றிதழ் மற்றும் நினைவு பரிசுகளை வழங்கினார்.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## 15ம் தேதி வரை அதிகபட்ச வெப்பநிலை



தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் வரும் 15ம் தேதி வரை அதிகபட்ச வெப்பநிலை 1-2° செல்சியஸ் வரை படிப்படியாக உயரக்கூடும் என்று வானிலை மையம் தெரிவித்துள்ளது.

## ஜம்முவில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் நூலிழையில் உயிர் தப்பினார் பரூக் அப்துல்லா



ஜம்மு-காஷ்மீர் முன்னாள் முதலமைச்சரும், தேசிய மாநாட்டு கட்சியின் நிறுவனருமான டாக்டர் பரூக் அப்துல்லா, புதன்கிழமை மாலை ஜம்முவில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் நூலிழையில் உயிர் தப்பினார். இந்த சம்பவம் நகரின் கிரேட்டர் கைலாஷ் பகுதியில் அரங்கேறியுள்ளது.

அங்கு நடைபெற்ற ஒரு வழக்கறிஞரின் மகனின் திருமண விழாவில் அப்துல்லா பங்கேற்று இருந்தார். அப்போது விழாவிற்குப் பிறகு விருந்து மண்டபத்திலிருந்து வெளியே வந்த சிறிது நேரத்திலேயே துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. பாதுகாப்புப் படையினர் சந்தேக நபரை நொடி நேரத்தில் மடக்கிப் பிடித்ததன் மூலம் அசம்பாவிதம் தவிர்க்கப்பட்டுள்ளது. அந்த நபரை கைது செய்து போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

## காவல்துறை கொடி அணிவகுப்பு பேரணி



தமிழகத்தில் எதிர்வரும் 2026-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலை அமைதியாகவும், சுமுகமாகவும் நடத்தும் வகையில் காவல்துறையினர் பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். இதன் ஒரு பகுதியாக, மயிலாடுதுறை மாவட்டத்தில் வாக்காளர்கள் எவ்வித அச்சமுமின்றி, சுதந்திரமாகத் தங்கள் ஜனநாயகக் கடமையை ஆற்றுவதை உறுதி செய்யும் வகையில் பிரம்மாண்டமான காவல்துறை கொடி அணிவகுப்பு பேரணி நடைபெற்றது.

## கண்டன ஆர்ப்பாட்டம்



தமிழ்நாடு சுகாதார ஆய்வாளர்கள் கூட்டமைப்பு சார்பில் 11.3.2026 அன்று மாலை 5மணியளவில் திருவண்ணாமலை மாவட்ட சுகாதார அலுவலர் அலுவலகம் முன்பு NMS, HE பதவிகளை நிரப்பாமல் அதை ஒழித்து கட்ட முயற்சி செய்யும் பொதுசுகாதார இயக்குநரின் நடவடிக்கையை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாவட்ட தலைவர் தோழர் ம. பரிதிமால்கலைஞன், திருவண்ணாமலை வட்ட தலைவர் தோழர் மகாதேவன், சமூகநலத்துறை ஊழியர் சங்கத்தின் மாநில தலைவர் தோழர் ரவி ஆகியோர் கலந்துகொண்டு வாழ்த்தி பேசினார்கள்

# சுற்றுலா: ஜில்லுனு டூர் போக தமிழகத்தின் சிறந்த மலை சுற்றுலா தலங்கள்!



நகரத்தின் மக்கள் நெருக்கடி, வெப்பம், புகை ஆகியவற்றிலிருந்து விலகி உடல் மற்றும் உள்ளப் புத்துணர்ச்சிக்கு மலைவாழிடங்களுக்கு சுற்றுலா செல்வது என்பது ஒரு சிறந்த தேர்வாகும். அந்தவகையில் கோடைவிடுமுறைக்கு சுற்றுலா செல்ல ஏதுவாக தமிழ்நாட்டில் உள்ள முக்கிய மலைவாழிடங்கள் பற்றித் தெரிந்து கொள்ளலாம்.

ஊட்டி

தமிழ்நாட்டில் உள்ள மலைவாழிடங்களின் மகுடமாகத் திகழும் ஊட்டி, பிரபலமான சுற்றுலாத் தலமாக விளங்குகிறது. நீலகிரி மலையில் 2240மீ உயரத்தில் அமைந்துள்ள ஊட்டியில், காணப்படும் உயரமான மலைகள், அடர்ந்த காடுகள், பரந்த புல்வெளிகள், அழகான பள்ளத்தாக்குகள் காரணமாக இது மலைகளின் ராணி என்றழைக்கப்படுகிறது.

ஊட்டி ஏரி, ரோஜாத்தோட்டம், தொட்டபெட்டா சிகரம், பைன் காடுகள், தேயிலை தோட்டங்கள், பைகாரா நீர்வீழ்ச்சி, பைகாரா ஏரி, முதுமலை தேசியப்பூங்கா, முக்கூர்த்தி தேசியப்பூங்கா, ஊசி மலைக் கண்ணோட்டம், எமரால்டு ஏரி, மேல்பவானி ஏரி, காமராஜ் சாகர் ஏரி, பனிச்சரிவு ஏரி, அரசு அருங்காட்சியகம், செயின்ட் ஸ்டீபன்ஸ் சர்ச் மற்றும் தாவரவியல் பூங்கா ஆகிய இடங்கள் பார்வையாளர்களை கவர்ந்திழுக்கின்றன.

கொடைக்கானல்

கடல் மட்டத்திலிருந்து 2100மீ உயரத்தில் அமைந்துள்ள கொடைக்கானல், மலைகளின் இளவரசி என்றழைப்படுகிறது. அற்புத காலநிலை மற்றும் இயற்கை அழகு மிகுந்து காணப்படும் இந்த இடம், நடுத்தர பட்ஜெட்டில் உயர் மதிப்பிலான சுற்றுலா செல்ல ஏற்ற இடமாக விளங்குகிறது.

கொடைக்கானல் ஏரி, கோக்கர்ஸ் வாக், பிரயான் பூங்கா, செட்டியார் பூங்கா, குறிஞ்சி ஆண்டவர் கோயில், தூண் பாறைகள், குணா குகை, பசுமை பள்ளத்தாக்கு கண்ணோட்டம், பேரிஜம் ஏரி, வெள்ளிநீர் வீழ்ச்சி மற்றும் செண்பகனூர் அருங்காட்சியகம் ஆகிய இடங்கள் சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்திழுக்கின்றன.

ஏற்காடு: தென்இந்தியாவின் ஆபரணம் என்றும் ஏழைகளின் ஊட்டி என்றும் அழைக்கப்படும் ஏற்காடு, கடல் மட்டத்திலிருந்து 1515மீ உயரத்தில் அமைந்துள்ளது. இங்கு நிலவும் குளிர் சூழல், மூடுபனி வானிலை மற்றும் பசுமையான பள்ளத்தாக்குகள் ஆகியவை சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்திழுக்கின்றன. ஏற்காடு ஏரி, லேடீஸ் சீட், கிள்ளியூர் நீர்வீழ்ச்சி, சேர்வராயன் மலைக்கோவில், கரடி குகை, கிரேஞ்ச், ஹெவன் தொங்கு பாறை, பகோடா பாயிண்ட், ரோஜாத் தோட்டம் மற்றும் சில்க் பண்ணை ஆகிய இடங்கள் இங்கு பார்க்க வேண்டியவை ஆகும்.

ஏலகிரி: வேலூர் மாவட்டம் வாணியம்பாடி, ஜோலார் பேட்டை ஊர்களுக்கு அருகே கடல் மட்டத்திலிருந்து 4600 அடி உயரத்தில் உள்ளது ஏலகிரி. பறந்து விரிந்த புங்கனூர் அருவியில் படகு சவாரி செய்யலாம். கண்ணுக்கு விருந்தாக ஜலங்கம் பாறை அருவி, சாகச விளையாட்டுகளுக்கு பாரா கிளைடிங், மலை ஏற்ற வசதிகளும் இருக்கிறது. தரமான தங்கும் விடுதிகளும் உள்ளன.

சிறுமலை

திண்டுக்கல் நகரிலிருந்து 25 கி.மீ தூரத்தில் இருக்கிறது சிறுமலை. பத்தொன்பது கொண்டை ஊசி வளைவுகள் கொண்ட மலையில் பயணம். வாழை, நெல்லி போன்ற கனிகள் நிறைந்த இந்த மலைப் பகுதி கடல் மட்டத்திலிருந்து 5200 அடி உயரத்தில் இருப்பதால் கோடையிலும் காலை, மாலை நேரங்களில் இதமான காலநிலைக்கு உத்தரவாதம் உறுதி.

கொல்லிமலை

சேலம், திருச்சி நகரங்களிலிருந்து 90 கி.மீ. தூரத்தில் உள்ள அழகிய மலை கொல்லிமலை. மரங்கள் சூழ்ந்த மலை சாலையில் மரங்களின் நிழல்களுக்கு இடையே 72 கொண்டை ஊசி வளைவுகளில் பயணிப்பதே தனி சுகம். 1300 படிக்கட்டுகள் கீழ்நோக்கி அரை மணி நேரம் மலை இறங்கினால் அழகிய ஆகாய கங்கை அருவி. குளித்து மகிழ்ந்து மீண்டும் மலை ஏற ஒரு மணி நேரம் ஆகும். இந்த ஒரு பயணமே திரில்லான அனுபவத்துக்கு உத்தரவாதம். மாசில்லா அருவி என்று மற்றொரு சிறிய அருவியும் குளிக்க உகந்தது. பழங்களின் மலையான இங்கு ருசியான பலா, கொய்யா பழங்கள் கிடைக்கும். தங்குவதற்கு தரமான அரசு குடில்கள் உள்ளன.

கோத்தகிரி

நீலகிரி மலைத்தொடரில் கடல் மட்டத்திலிருந்து 5800 அடி உயரத்தில் உள்ள மற்றொரு தேயிலை தோட்ட மலை நகர். தமிழக முதல்வர் ஓய்வு எடுக்கச்செல்லும் கொடநாடு இதன் அருகேதான் உள்ளது. கோவையிலிருந்து 66 கி.மீ., மேட்டுப்பாளையத்தில் இருந்து 33 கி.மீ. பயணம். மணம் வீசும் யூகாலிப்டஸ் மரங்கள் கூடுதல் அழகு. கோடை ஓய்வுவை முடித்துக் கொண்டு மணம் கமழும் டீ தூள் மற்றும் யூகாலிப்டஸ் தைலமும் வாங்கிவரலாம்.

மேகமலை

ஆங்கிலேயர் காலத்தில் கண்டறியப்பட்டு தேயிலை பயிரிடப்பட்ட தோட்டங்கள் நிறைந்த மலைப் பகுதி மேகமலை. 5 ஆயிரம் அடி உயரத்தில் மேகக் கூட்டம் இந்த மலை குன்றுகள் மீது தவழ்ந்து செல்வதால் மேகமலை ஆனது. கோடையில் அழகிய நீல வானத்தைப் பார்க்கலாம். ஏரி, நீர் நிலைகள் சூழ்ந்த அழகிய தேயிலை தோட்டங்கள் சூழ்ந்த சுற்றுலா மையம். அதிக ஆரவாரமில்லாத அமைதியான ஊர்.

வால்பாறை

மேற்கு தொடர்ச்சி மலைத் தொடரின் மேற்குச் சரிவில் தமிழக பகுதியில் கடல் மட்டத்திலிருந்து 3500 அடி உயரத்தில் இருக்கிறது வால்பாறை. சுற்றிலும் தேயிலை, காப்பி தோட்டங்கள், வானுயர மரங்கள், சோலைகள், அருவிகள், நீரோடைகள், தடுப்பணைகள் என்று இயற்கை பல வடிவங்களில் இங்கே தன்னை அலங்கரித்து நிற்கிறது.

## வேலைவாய்ப்பு கார்னர்

### தேசிய உயிரியல் மையத்தில் லேப் டெக்னீசியன் பணி



தேசிய உயிரியல் மையத்தில் (என்.ஐ.பி.,) காலியிடங்களுக்கு அறிவிப்பு வெளியாகியுள்ளது.

லேப் டெக்னீசியன் 25, சயின்டிஸ்ட் 3, ஜூனியர் சயின்டிஸ்ட் 12, அட்மின் அசிஸ்டென்ட் 1, உதவியாளர் 2, ஹிந்தி மொழிபெயர்ப்பாளர் 1 என மொத்தம் 44 இடங்கள் உள்ளன. கல்வித்தகுதி: பிளஸ் 2 / பட்டப்படிப்பு (இளநிலை, முதுநிலை) வயது: 18 -30 , 18 - 45 (8.4.2026ன் படி) தேர்ச்சி முறை: எழுத்துத்தேர்வு, ஸ்கில் தேர்வு.

விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன். பின் இதை பிரின்ட் எடுத்து கீழ்காணும் முகவரிக்கு அனுப்ப வேண்டும். The Director, National Institute of Biologicals, A- 32, Sector-62, Institutional Area Noida, U.P- 201 309.

கடைசிநாள்: 8.4.2026 விவரங்களுக்கு: nib.gov.in

### சிறுதொழில் நிறுவனத்தில் உதவியாளர் வாய்ப்பு

தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனத்தில் (டான்சி) காலியிடங்களுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. அலுவலக உதவியாளர் 7, டிரைவர் 4 என மொத்தம் 11 இடங்கள் உள்ளன. கல்வித்தகுதி: எட்டாம் வகுப்பு, டிரைவிங் லைசன்ஸ் வயது: 18-34 (31.3.2026ன் படி)

தேர்ச்சி முறை: சான்றிதழ் சரிபார்ப்பு, நேர்முகத்தேர்வு.

விண்ணப்பிக்கும் முறை: இணைய தளத்தில் உள்ள விண்ணப்பத்தை பதிவிறக்கி, பூர்த்தி செய்து கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்ப வேண்டும். Tamil Nadu Small Industries Corporation Limited (TANSI), No. 28, Thiru Vi Ka Industrial Estate, Guindy, Chennai - 600 032.

கடைசிநாள்: 31.3.2026 விவரங்களுக்கு: tansi.tn.gov.in

## ‘மூளைச்சாவு’ அடைந்த பெண்: குண்டும் குழியுமாய் இருந்த சாலையால் உயிர் பிழைத்த அதிசயம்

**லக்னோ, மார்ச் 13:**

சொன்னால் நம்பிக்கை கவரவே நாழியாகும். நெஜமாவா.. என்று ஆச்சரியப்பட்டுப் போவீர்கள். குண்டும் குழியுமான சாலையால் ‘மூளைச்சாவு’ அடைந்த ஒரு பெண் உயிர் பிழைத்த அதிசயம் நடந்திருக்கிறது.

உத்தரப்பிரதேசம் ரேபரேலி கோர்ட்டில் பணியாற்றி வருபவர் வினீதா (வயது 50). இவர் கடந்த மாதம் தனது வீட்டில் வேலை செய்து கொண்டிருந்தபோது ‘திடீரென’ மயங்கி விழுந்தார்.

உடனே அவரது கணவர் குல்தீப் மனைவியை ரேபரேலியில் உள்ள மருத்துவமனையில் சேர்த்தார். அங்குள்ள டாக்டர்கள் வினீதாவிற்கு இரண்டு நாள் சிகிச்சையளித்த நிலையில் அவருக்கு மூளைச்சாவு ஏற்பட்டுள்ளதாக தெரிவித்தனர். மேலும் மேற்கொண்டு சிகிச்சை கொடுத்து எந்தவித பயனும் இல்லை என்றும் சொல்லி கைவிரித்தனர். இந்நிலையில் வினீதாவை கணவர் குல்தீப் ஆம்புலன்ஸ் ஒன்றில் தனது வீட்டிற்குக் கொண்டு வந்து கொண்டிருந்தார். வழியில் சாலை கடுமையான குண்டும் குழியுமாகக் காணப்பட்டது.

ஒரு கட்டத்தில் ஒரு குழியில் ஆம்புலன்ஸ் ஏறி இறங்கியது. இதில் தூக்கி வாரிப் போட்டது உள்ளிருந்தவர்களை. இதனால் ஏற்பட்ட அதிர்ச்சியில் அதுவரை சுவாசிக்காமல் இருந்த வினிதா திடீரென சுவாசிக்க ஆரம்பித்தார். இதனைக் கவனித்த குல்தீப், இன்ப அதிர்ச்சியில் திளைத்த அடுத்த கணம், மனைவியை பிலிபிட் நகரில் உள்ள நியூரோசிட்டி மருத்துவமனையில் கொண்டு போய் சேர்த்தார். அங்கு அவருக்கு டாக்டர்கள் தீவிர சிகிச்சை கொடுத்தனர். இப்போது வினீதாவிற்குச் சுயநினைவு திரும்பி இருக்கிறது. அவர் அனைவரிடமும் அன்பாகப் பேச ஆரம்பித்துவிட்டார். 10 நாட்கள் சிகிச்சை எடுத்துக்கொண்டு வீடு திரும்பி இருக்கிறார்.

மருத்துவ அதிசயமா... இல்லை சாலையில் இருந்த குண்டு குழியால் போன உயிர் திரும்பியிருக்கிறது என்று குடும்பத்தினர் சொல்கிறார்கள்.

## தமிழகத்தில் மீண்டும் முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் ஆட்சி: பியூஷ் கோயல்

**திருச்சி, மார்ச் 13:**

தமிழகத்தில் மீண்டும் முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் ஆட்சி அமையும் என்று மத்திய அமைச்சர் பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

திருச்சி விமான நிலையத்தில் மத்திய அமைச்சர் பியூஸ் கோயல் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:-

தமிழகத்தில் ஜெயலலிதா, எடப்பாடி பழனிசாமி முதலமைச்சராக இருந்த போது சட்டம்ஒழுங்கு சிறப்பாக இருந்தது. இந்திய அளவில் முதன்மை மாநிலமாக திகழ்ந்தது. ஆனால் இப்போது ஸ்டாலின் தலைமையிலான தி.மு.க. அரசு ஊழல் அரசாக உள்ளது. இதனை அகற்றுவதற்கு மக்கள் முடிவு செய்து விட்டார்கள். மாற்றத்தையும் நல்லாட்சியையும் தமிழ்நாட்டு மக்கள் விரும்புகின்றனர்.

அவர்கள் ஸ்டாலினின் ஊழல் அரசை முடிவுக்குக் கொண்டு வர விரும்புகின்றனர். தமிழ்நாட்டு மக்களுக்கு உதயநிதி ஸ்டாலினின் தமிழ் விரோத கலாச்சாரம், தமிழர் விரோத தலைமை பிடிக்கவில்லை. தமிழகத்தில் முதல்வர் ஸ்டாலின் பிளவுபடுத்தும் அரசியல் செய்து வருகிறார். எனவே நடைபெற உள்ள சட்டமன்ற தேர்தலில் தமிழகத்தில்தேசிய ஜனநாயக கூட்டணி தனிப்பெரும்பான்மையுடன் வெற்றி பெற்று எடப்பாடி பழனிசாமி தலைமையில் ஆட்சி அமைக்கும். இந்த கூட்டணியை தான் தமிழக மக்கள் விரும்புகின்றனர்.

த.வெ.க. வருமா?

தமிழகத்தில் தேசிய ஜனநாயக கூட்டணியை மேலும் வலுப்படுத்த எடப்பாடி பழனிசாமி உள்பட கூட்டணியில் உள்ள அனைத்து தலைவர்களும் தீவிரமாக வேலை செய்து வருகிறார்கள். தொகுதி பங்கீடு குறித்து இப்போது எதுவும் கூறமுடியாது. தேசிய ஜனநாயக கூட்டணியில் தமிழக வெற்றிக் கழகம் இணையுமா? என்பது பற்றி தமிழகத்தில் கூட்டணிக்கு தலைமை தாங்கும் எடப்பாடி பழனிசாமியிடம் தான் கேட்க வேண்டும். பிரதமர் மோடி தமிழக மக்களை பெரிதும் நேசிக்கிறார். தமிழ்க் கலாசாரத்தையும் பெருமையையும் அவர் மதிக்கிறார். நாட்டிலேயே சிறந்த மாநிலமாக தமிழகம் திகழ வேண்டும் என்று பிரதமர் விரும்புகிறார். மத்திய அரசின் அனைத்து திட்டங்களும் மாநிலத்தில் செயல்படுத்தப்பட வேண்டும் என்றும், மக்களின் வளர்ச்சிக்காக பாடுபடும் தமிழக அரசுடன் இணைந்து செயல்படவும் பிரதமர் விரும்புகிறார்.

டாஸ்மாக் மதுபான ஊழல், மணல் கொள்ளை, மோசமான சட்டம்ஒழுங்கு நிலைமையை முடிவுக்குக் கொண்டுவரப்படும். அம்மாவின் (முன்னாள் முதல்வர் ஜெயலலிதா) பழைய ஆட்சி மீண்டும் கொண்டு வரப்படும்.

முதல்வர் ஸ்டாலினின் பிளவுபடுத்தும் அரசியலை மக்கள் ஏற்கவில்லை. அவர்களின் கட்சியே பிளவுபட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

## 32 வயது இளைஞரை கருணைக் கொலை செய்ய முதன்முறையாக உச்சநீதிமன்றம் அனுமதி

**புதுடெல்லி, மார்ச் 13:**

ஹரிஷ் ராணா (32) என்ற இளைஞர், தனது தங்கும் விடுதியின் நான்காவது மாடியில் இருந்து தவறி விழுந்து கடுமையான மூளை காயம் அடைந்ததால் கடந்த 13 ஆண்டுகளாக சுயநினைவு இல்லாமல் இருந்து வந்தார். அவரது உடலின் அனைத்து உறுப்புகளும் செயலிழந்த நிலையில், அறுவை சிகிச்சை மூலம் பொருத்தப்பட்ட குழாய் வழியாக மருத்துவ உணவு (CLINICALLY ADMINISTERED NUTRITION CAN) மூலமே உயிருடன் வைத்திருக்கப்பட்டு வந்தார். இந்நிலையில், மகனின் உயிர் ஆதரவு சிகிச்சையை நிறுத்த அனுமதி கோரி அவரது தந்தை மனு தாக்கல் செய்திருந்தார். மருத்துவ அறிக்கைகளில் கடந்த பல ஆண்டுகளாக அவரது உடல்நிலையில் எந்த முன்னேற்றமும் இல்லை என்றும், சிகிச்சை தொடர்வது உயிரியல் வாழ்வை மட்டுமே நீட்டிப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மேலும், நோயாளியை எய்ம்ஸ் மருத்துவமனையின் பராமரிப்பு மையத்தில் அனுமதித்து, மரியாதையுடன் மற்றும் முறையான திட்டத்தின் கீழ் உயிர் ஆதரவை நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று உத்தரவிடப்பட்டது. இத்தகைய வழக்குகளில் முதன்மை மற்றும் இரண்டாம் நிலை மருத்துவ குழுக்கள் ஒருமித்த முடிவுக்கு வந்தால், நேரடியாக நீதிமன்றத்தை அணுக வேண்டிய அவசியமில்லை என்றும், மாநில உயர்நீதிமன்றங்கள் இதற்கான வழிகாட்டுதல்களை வழங்க வேண்டும் என்றும் உச்சநீதிமன்றம் தெரிவித்தது. மேலும் இந்த தீர்ப்பில், கடந்த பல ஆண்டுகளாக மகனை அன்புடன் பராமரித்த பெற்றோரின் அர்ப்பணிப்பை நீதிமன்றம் சிறப்பாக பாராட்டியது.


தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www.tamilnaduepaper.com

இ பேப்பரை தினமும் இலவசமாக பெற விரும்புபவர்கள்.

"welcome Tamilnadu" என்று கீழ் உள்ள வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். தங்களின் அமைப்பு செய்திகள் தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிட செய்தி மற்றும் புகைப்படத்தை கீழ்உள்ள வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்புங்கள்

94452 65389


## சிறந்த வனச்சரக அலுவலர்களுக்கு விருது: முதல்வர் ஸ்டாலின் வழங்கினார்

**சென்னை, மார்ச் 13:**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று தலைமைச் செயலகத்தில், சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை சார்பில், “சென்னையின் 100 ஆண்டுகள் பழமையான மரங்கள் ஒரு உயிர்த்தெழும்பாரம்பரியம்” என்ற சிறப்பு நூலை வெளியிட்டார்.

மேலும், 2025-26-ம் ஆண்டிற்கான 4 சிறந்த மாவட்ட வன அலுவலர்கள் மற்றும் 4 சிறந்த வனச்சரக அலுவலர்களுக்கு விருதுகளை வழங்கி சிறப்பித்தார்.

சென்னையின் பல பகுதிகளில் உள்ள 27 இனங்களைச் சேர்ந்த 57 பாரம்பரிய மரங்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. பதிவுசெய்யப்பட்ட மரங்களில் 24 மரங்கள் 200 ஆண்டுகளுக்கு மேற்பட்ட வயதுடையவை என்றும் 33 மரங்கள் 100 முதல் 200 ஆண்டுகளுக்குள் உள்ளவை என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது. பவோபாப் என்னும் மரத்தின் வயது சுமார் 239 முதல் 292 ஆண்டுகளுக்கு இடையில் இருப்பதாக கணிக்கப்பட்டுள்ளது. மேலும், அதிகபட்ச சுற்றளவு 1070 செ.மீ. அளவாகவும் பதிவாகியுள்ளது. பதிவுசெய்யப்பட்ட மரங்களில் மிக உயரமான மரம் *Terminalia arjuna* இனத்தைச் சேர்ந்ததாகும்; அதன் உயரம் சுமார் 41.6 மீட்டர் என மதிப்பிடப்பட்டுள்ளது. மேலும், 45 மரங்கள் 200 செ.மீ.க்கு மேற்பட்ட சுற்றளவை கொண்டுள்ளன; இது அவற்றின் முதிர்ச்சி மற்றும் சுற்றுச்சூழல் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுகிறது.

நீலகிரி வனப்பிரிவு மாவட்ட வன அலுவலர் எஸ்.கௌதம் விருது, கூடலூர் வனப்பிரிவு மாவட்ட வன அலுவலர் என். வெங்கடேஷ் பிரபு, புதுக்கோட்டை வனப்பிரிவு மாவட்ட வன அலுவலர் எஸ். கணேசலிங்கம், முதன்மை வனப் பாதுகாவலர் (வனத்துறைத் தலைவர்) சிறப்பு அலுவலர் விஸ்மிஜு விஸ்வநாதன் ஆகியோருக்கு சிறந்த மாவட்ட வன அலுவலர் விருதினை முதலமைச்சர் வழங்கி சிறப்பித்தார்.

சென்னை வன நிலையம், தமிழ்நாடு வனம் மற்றும் வனஉயிரின குற்றக் கட்டுப்பாட்டு பிரிவு வனச்சரக அலுவலர் டி. பாண்டுரங்கன், புதுக்கோட்டை சரகம், புதுக்கோட்டை வனப் பிரிவு வனச்சரக அலுவலர் எம். சதாசிவம், இன்நாடு சரகம், கள்ளக்குறிச்சி வனப் பிரிவு வனச்சரக அலுவலர் சதீஷ்குமார் ஆகியோருக்கு சிறந்த வனச்சரக அலுவலர் விருதினை முதலமைச்சர் வழங்கி சிறப்பித்தார்.

## ஒரே ஆண்டில் நாடு முழுவதும் 43 புதிய மருத்துவக் கல்லூரிகள் தொடக்கம்

**புதுடெல்லி, மார்ச் 13:**

மத்திய சுகாதார இணையமைச்சர் அனுபிரியா படேல் வெளியிட்டுள்ள பதிலில் கூறியிருப்பதாவது: தேசிய மருத்துவ ஆணையம் அளித்த தகவலின்படி, ஒரே கல்வியாண்டில் 11,682 இளநிலை மருத்தவப் படிப்பு (எம்பிபிஎஸ்) இடங்களுக்கும், 8,967 முதுநிலைப் பட்டங்களுக்கான இடங்களுக்கும் (எய்ம்ஸ் உள்பட) மத்திய அரசு அனுமதியளித்துள்ளது எனத் தெரிவித்துள்ளார்.

இத்துடன், மருத்துவக் கல்விக்கான இடங்களை அதிகரிக்க, ஒவ்வொரு ஆண்டும் நாடு முழுவதுமுள்ள கல்லூரிகள் மற்றும் கல்வி நிலையங்களிடம் இருந்து புதிய மருத்துவக் கல்லூரிகள் தொடங்குவதற்கான ஆன்லைன் விண்ணப்பங்களை தேசிய மருத்துவ ஆணையம் பெற்று வருவதாகக் கூறப்படுகிறது. ஏற்கெனவே, நாடு முழுவதும் கல்லூரி வசதி இல்லாத பல்வேறு பகுதிகளில் இயங்கி வரும் மாவட்ட மருத்துவமனைகளுடன் இணைத்து மருத்துவக் கல்லூரிகளைத் தொடங்கும் மத்திய அரசின் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்தத் திட்டத்தின் மூலம், இதுவரை ரூ. 41,332 கோடி செலவில், 3 கட்டங்களாக 157 புதிய மருத்துவக் கல்லூரிகளைத் தொடங்குவதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மகளுடன் பேசியதால் ஆத்திரம்: ஓடும் ரெயிலில் இருந்து தள்ளி வாலிபர் கொலை-தொழிலாளி வெறிச்செயல்



**திருவனந்தபுரம், மார்ச் 13:**

திண்டுக்கல் மாவட்டத்தை சேர்ந்தவர் முகேஷ் (வயது 22). இவர் கேரள மாநிலம் மங்களூருவில் உள்ள ரப்பர் தோட்டத்தில் தொழிலாளியாக வேலை பார்த்து வந்தார். சம்பவத்தன்று இவர் கண்ணூர்யஷ்வந்த்பூர் எக்ஸ்பிரஸ் ரெயிலில் பயணம் செய்து வந்துள்ளார். அவருடன் ரப்பர் தோட்டத்தில் வேலை செய்யும் தொழிலாளர் தியாகராஜன், அதே ரெயிலில் தனது மகளுடன் பயணம் செய்தார். இவரும் தமிழகத்தை சேர்ந்தவர் தான். முகேஷ்சும், தியாகராஜனும் ஒரே ரப்பர் தோட்டத்தில் வேலை பார்த்து வந்ததால் நண்பர்களாக பழகி வந்துள்ளனர். இதனால் கண்ணூர்யஷ்வந்த்பூர் எக்ஸ்பிரசில் ஒரே பெட்டியில் தான் பயணம் செய்துள்ளனர். அப்போது தியாகராஜனின் மகள் வெகுநேரமாக இருக்கைக்கு வரவில்லை. அவர் எங்கு இருக்கிறார் என்று பார்த்து வருவதாக முகேஷ் சென்றுள்ளார். ஆனால் அவரும் திரும்பி வரவில்லை. இதையடுத்து தியாகராஜன் இருவரையும் தேடிச் சென்றார்.

அப்போது அவரது மகளும், முகேஷ்சும் ரெயில் பெட்டியின் வாசல் பகுதியில் நின்று பேசிக்கொண்டிருந்தனர். இதைப் பார்த்ததும் தியாகராஜனுக்கு ஆத்திரம் ஏற்பட்டது. அவர் முகேஷை எட்டி உதைத்தார். இதனால் அவர் ஓடும் ரெயிலில் இருந்து வெளியே விழுந்துவிட்டார். இரவு நேரம் என்பதால் இதனை அந்த பெட்டியில் இருந்த சக பயணிகள் கவனிக்கவில்லை. இந்த நிலையில் அந்த ரெயில் கோவை வந்ததும், தன்னுடன் பயணித்த முகேஷ் என்பவர் காணாமல் போய்விட்டார் என்று ரெயில்வே போலீசில் அந்த தொழிலாளி புகார் கூறினார். இரவு நேரம் என்பதால் அவர் ரெயிலில் இருந்து கீழே தவறி விழுந்திருக்கலாம் என்று கருதிய கோவை ரெயில்வே போலீசார், அது குறித்து பாலக்காடு ரெயில்வே போலீசாருக்கு தகவல் கொடுத்தனர். அதன்பேரில் பாலக்காடு மற்றும் கோவை ரெயில்வே போலீசார் தங்களது எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள ரெயில் தண்டவாளங்களில் தேடினர். அப்போது பாலக்காடு ரெயில்வே போலீஸ் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியான காஞ்சிரக்கடவு ரெயில்வே மேம்பாலத்தின் கீழ் பகுதியில் முகேஷ் பிணமாக கிடந்தார். இதையடுத்து அவரது உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர். அவர் ரெயிலில் இருந்து தவறி விழுந்து இறந்து விட்டதாகவே ரெயில்வே போலீசார் முதலில் கருதினர். அதன்படி போலீசார் வழக்குப்பதிந்து விசாரணை நடத்தினர். இதையடுத்து தியாகராஜனிடம் ரெயிலில் ஏறிய இடம், அவர்களுக்கு இடையே உள்ள நட்பு உள்ளிட்ட விவரங்கள் குறித்து போலீசார் விசாரணை நடத்தினர். அப்போது தியாகராஜன் முன்னுக்கு பின் முரணான தகவல்களை தெரிவித்தார். இதனால் அவரிடம் கிடுக்கிப்பிடி விசாரணை நடத்தப்பட்டது. அப்போது அவர் ரெயிலில் இருந்து எட்டி உதைத்து தள்ளி முகேஷை கொன்றது தெரியவந்தது. தனது மகளுடன் பேசிக்கொண்டிருந்த ஆத்திரத்தில் அப்படி நடந்துகொண்டதாக போலீசிடம் தியாகராஜன் தெரிவித்தார். இதையடுத்து அவரை போலீசார் கைது செய்தனர். கொலைக்கான காரணம் குறித்து தியாகராஜனிடம் தொடர்ந்து விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. ஓடும் ரெயிலில் இருந்து எட்டி உதைத்து தள்ளி தமிழக வாலிபர் கொல்லப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது

## க்ரைம் கார்னர்

### பாகிஸ்தானுக்காக உளவுப் பார்த்த இந்திய கடற்படை வீரர் கைது!

**புதுடெல்லி, மார்ச் 13:**

உத்தரப்பிரதேசத்தில், பாகிஸ்தானுக்காக உளவுப்பார்த்த குற்றச்சாட்டில் இந்திய கடற்படை வீரர் ஒருவர் பயங்கரவாதத் தடுப்புப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பாகிஸ்தானின் உளவுத் துறையிடம் இந்திய கடற்படையின் ரகசியங்களைப் பகிர்ந்ததாக, ஆக்ராவைச் சேர்ந்த கடற்படை வீரர் ஆதார்ஷ் குமார் (எ) லக்கி உத்தரப் பிரதேச காவல் துறையின் பயங்கரவாதத் தடுப்புப் படையினரால் செவ்வாய்க்கிழமை (மார்ச் 10) கைது செய்யப்பட்டுள்ளார்.

இதனைத் தொடர்ந்து, ஆதார்ஷ் குமார், பாகிஸ்தான் உளவுத்துறையிடம் இந்தியகடற்படையின் போர்க்கப்பல்கள் உள்ளிட்ட முக்கிய கட்டமைப்புகள் குறித்த ரகசியத் தகவல்களைப் பகிர்ந்ததாகக் குற்றம்சாட்டப்பட்டுள்ளது. மேலும், இதனை உறுதி செய்யக் கூடிய ஆவணங்களும் அவரிடமிருந்து கைப்பற்றப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இத்துடன், பாகிஸ்தான் உளவுத்துறை ஏஜெண்டுகளுக்கு ஆதார்ஷ் குமார் தனது வங்கிக் கணக்கில் இருந்து பணம் அனுப்பியதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மேலும், இந்தக் குற்றத்திற்காக அவர் பயன்படுத்திய மின்னணு சாதனங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

இந்த நிலையில், கைது செய்யப்பட்ட ஆதார்ஷ் குமார் நீதிமன்றத்தின் ஆஜர்படுத்தப்பட்டு நீதிமன்றக் காவலில் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். இந்தக் குற்றத்தில் மேலும் சிலர் ஈடுபட்டிருக்கக் கூடும் எனச் சந்தேகிக்கப்படுவதால் பாதுகாப்புப் பிரிவு அதிகாரிகள் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

ஏற்கெனவே, கடந்த 2025 ஆம் ஆண்டு ஆக்ராவைச் சேர்ந்த ரவீந்திர குமார் என்பவர் முகநூலில் நட்பாகப் பழகிய பாகிஸ்தானைச் சேர்ந்த பெண்ணிடம் இந்திய ராணுவத்தின் ரகசியங்களைப் பகிர்ந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

### வீடு புகுந்து சிலிண்டர் திருட்டு: மாணவி, நண்பர்கள் கைது

**சென்னை, மார்ச் 13:**

பெருங்குடியைச் சேர்ந்த 17 வயது சிறுவன் அதே பகுதியைச் சேர்ந்த பிளஸ் 2 மாணவியான தனது தோழியின் (17) வீட்டுக்கு அடிக்கடி சென்று வந்துள்ளார்.

மாணவியின் வீட்டில் இருந்த தங்க நகைகள் உள்ளிட்ட சில பொருட்கள் காணாமல் போனதாக கூறப்படுகிறது.

அவற்றை சிறுவன்தான் திருடியதாக நினைத்த மாணவி, தனது நண்பர்களுடன் அவரது வீட்டுக்குச் சென்று, டிவி, காஸ் சிலிண்டரை எடுத்துக் கொண்டு ஆட்டோவில் தப்பினார். புகாரின்பேரில், பெருங்குடி கல்லுக் குட்டை கிஷோர் (21), தேனாம்பேட்டை பரத்குமார் (18), தட்சிணாமூர்த்தி (18) விக்னேஷ் ஆகிய 4 பேரையும் துரைப்பாக்கம் போலீஸார் கைது செய்தனர். மாணவி உள்ளிட்ட 2 சிறார்கள் கைது செய்யப்பட்டு சிறார் நீதிக்குழுமத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

### நெல்லையில் 3 சிறுமிகள் பாலியல் வன்கொடுமை வழக்கில் குற்றவாளிக்கு மரண தண்டனை

**திருநெல்வேலி, மார்ச் 13:**

நெல்லையில் மூன்று சிறுமிகள் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்ட வழக்கில் ஒருவருக்கு மரண தண்டனை விதித்து நீதிமன்றம் பரபரப்பு தீர்ப்பு கூறியுள்ளது.

திருநெல்வேலி மேலப்பாளையத்தில் 2023-ம் ஆண்டு 3 சிறுமிகள் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டது தொடர்பாக பாளையங்கோட்டை அனைத்து மகளிர் காவல் நிலைய போலீஸார் வழக்குப் பதிந்து ஆனந்த சேகர் என்பவரை கைது செய்திருந்தனர். இந்த வழக்கு விசாரணை திருநெல்வேலி மாவட்ட போக்ஸோ சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெற்றது.

வழக்கை விசாரித்த நீதிமன்றம், குற்றம் சாட்டப்பட்ட ஆனந்த சேகருக்கு மரண தண்டனை விதித்து இன்று தீர்ப்பு வழங்கியது. மேலும், பாதிக்கப்பட்ட 3 சிறுமிகளுக்கும் தலா ரூ.7 லட்சம் இழப்பீடு வழங்க வேண்டும் எனவும் தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## விளையாட்டு செய்திகள்

### ஐபிஎல் 2026 சீசன் முதற்கட்ட அட்டவணை வெளியீடு



**மும்பை, மார்ச் 13:**

ஐபிஎல் தொடரின் 19-வது சீசன் போட்டிகள் வரும் 28-ம் தேதி முதல் மே 31 வரை இந்தியாவின் பல்வேறு நகரங்களில் நடைபெற உள்ளது. இதற்கிடையே தமிழ்நாடு, மேற்கு வங்கம் உள்ளிட்ட சில மாநிலங்களில் சட்டப்பேரவை தேர்தல் நடைபெற உள்ளதால் ஐபிஎல் தொடருக்கான அட்டவணை வெளியிடுவதில் தாமதம் நிலவி வந்தது. இதற்கிடையே 19-வது சீசனுக்கான ஐபிஎல் போட்டி அட்டவணை 12-ம் தேதிக்குள் வெளியிடப்படும் என பிசிசிஐ செயலாளர் தேவஜித் சைகியா தெரிவித்திருந்தார். இந்நிலையில் நேற்று இரவு 7 மணிக்கு முதற்கட்ட போட்டி அட்டவணை வெளியானது. இதில் மார்ச் 28 முதல் ஏப்ரல் 12 வரை நடைபெறும் 20 ஆட்டங்கள் மட்டும் இடம் பெற்றுள்ளன. சட்டப் பேரவை தேர்தலுக்கான தேதிகள் அறிவிக்கப்பட்டதும் முழு போட்டி அட்டவணையும் வெளியிடப்படும் என பிசிசிஐ தெரிவித்துள்ளது.

ஐபிஎல் 19-வது சீசனின் தொடக்க ஆட்டத்தில் வரும் 28-ம் தேதி நடப்பு சாம்பியனான ராயல் சாலஞ்சர்ஸ் பெங்களூரு அணி (ஆர்சிபி), 2016-ம் ஆண்டு சாம்பியனான சன் ரைசர்ஸ் ஹைதராபாத் அணியுடன் மோதுகிறது. இந்த ஆட்டம் பெங்களூருவில் உள்ள சின்னசாமி மைதானத்தில் இரவு 7.30 மணிக்கு நடைபெறுகிறது.

முதற்கட்டமாக வெளியிடப்பட்டுள்ள 20 ஆட்டங்களும் பெங்களூரு, மும்பை, குவாஹாட்டி, நியூ சண்டிகர், லக்னோ, கொல்கத்தா, சென்னை, டெல்லி, அகமதாபாத், ஹைதராபாத் ஆகிய 10 நகரங்களில் நடைபெறுகிறது. முதற்கட்ட அட்டவணையில் ஒவ்வொரு அணியும் 4 ஆட்டங்களில் விளையாடுகின்றன.

### டி20 தரவரிசை பட்டியலில் அபிஷேக் சர்மா முதலிடம்; இஷான் கிஷன் 2-வது இடத்துக்கு முன்னேற்றம்

**துபாய், மார்ச் 13:**

ஐசிசி டி20 உலகக் கோப்பை கிரிக்கெட் தொடர் நிறைவடைந்துள்ள நிலையில் பேட்ஸ்மேன்கள் மற்றும் பந்து வீச்சாளர்களுக்கான தரவரிசை பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. இதில் இந்திய அணியின் தொடக்க வீரரான அபிஷேக் சர்மா 875 புள்ளிகளுடன் முதலிடத்தை தக்க வைத்துக் கொண்டுள்ளார். உலகக் கோப்பை இறுதிப் போட்டியில் நியூஸிலாந்து அணிக்கு எதிராக அபிஷேக் சர்மா அரை சதம் விளாசியதால் தரவரிசையில் சரிவை சந்திக்கவில்லை. மற்றொரு அதிரடி வீரரான இஷான் கிஷன் 871 புள்ளிகளுடன் 2 இடங்கள் முன்னேறி 2-வது இடத்தை பிடித்துள்ளார். உலகக் கோப்பை தொடரில் இஷான் கிஷன் 317 ரன்கள் விளாசியிருந்தார். தற்போது அபிஷேக் சர்மாவுக்கும், இஷான் கிஷனுக்கும் இடையே 4 புள்ளிகள் மட்டுமே வித்தியாசம் உள்ளது.

# மதுரை எய்ம்ஸில் 47% கட்டுமானப் பணிகள் மட்டுமே முடிந்துள்ளது: ஆர்டிஐயில் தகவல்

**மதுரை, மார்ச் 13:**

மதுரையில் எய்ம்ஸ் கட்டுமானப் பணிகள் 47 சதவீதம் தான் நடைபெற்றுள்ளது என்ற தகவல் ஆர்டிஐ மூலம் கிடைத்துள்ளது.

தென்காசி மாவட்டம் பாவூர் சத்திரம் அருகே உள்ள திப்பணம்பட்டியை சார்ந்த சமூக ஆர்வலர் பாண்டிய ராஜா மத்திய சுகாதார மற்றும் குடும்ப நல அமைச்சகத்திடம் மதுரை எய்ம்ஸ் குறித்து பல்வேறு கேள்விகளை எழுப்பி இருந்தார்.

அதற்கு மத்திய சுகாதார மற்றும் குடும்ப நல அமைச்சகத்தின் தலைமை பொது தகவல் அலுவலர் தர்ம் பீர் குமார் சிங் பதில் அளித்துள்ளார்.




அதில், மதுரை எய்ம்ஸ் கட்டுமானப் பணிகள் 47 % நிறைவு பெற்றுள்ளது எனவும், மதுரை எய்ம்ஸ் மொத்த திட்ட மதிப்பீடு ரூ.2,021.51 கோடி எனவும், அதில் ரூ.471.02 கோடி மத்திய பட்ஜெட்டில் இருந்து வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், அக்டோபர் 2026-ல் மதுரை எய்ம்ஸ் கட்டுமானப் பணிகளை முடிக்க இலக்கு நிர்ணயிக்கப் பட்டுள்ளதாகவும்" தலைமை பொது தகவல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

# மதுராந்தகம் அருகே 14 வயது சிறுமி கூட்டு பாலியல் வன்கொடுமை: 2 பேர் கைது

**சென்னை, மார்ச் 13:**

தாம்பரம் பகுதியைச் சேர்ந்த 17 வயது சிறுவன், கடந்த 9-ம் தேதி நள்ளிரவில் 14, 16 வயதுடைய இரு சிறுமிகளை தனது இருசக்கர வாகனத்தில் மதுராந்தகம் அருகே உள்ள கீழக்கண்டை பகுதிக்கு அழைத்து சென்றுள்ளார்.

தேவத்தூர் வழியாகச் சென்ற போது, மதுபோதையில் இருந்த மர்ம நபர்கள் இருவர் அவர்களைத் பின் தொடர்ந்துள்ளனர். இதனால், அச்சமடைந்த சிறுவன், இருசக்கர வாகனத்தை வேகமாக ஓட்டியபோது, அத்திவாக்கம் பகுதியில் வாகனம் நிலை தடுமாறி விபத்துக்குள்ளானது.



இதில், பின்தொடர்ந்து வந்த நபர்கள் சிறுவனை கடுமையாக தாக்கியுள்ளனர். அப்போது, சிறுவன் தன்னுடன் வந்த 14-வயது சிறுமியை விட்டு விட்டு 16 வயது சிறுமியை மட்டும் வாகனத்தில் ஏற்றிக்கொண்டு சென்றதாக கூறப்படுகிறது. இதைப் பயன்படுத்தி மர்ம நபர்கள் இருவர், காயமடைந்த 14 வயது சிறுமியை அத்திவாக்கம் ஏரிப் பகுதிக்குச் தூக்கிச் சென்று, கூட்டுப் பாலியல் வன்கொடுமை செய்ததாக கூறப்படுகிறது. பின்னர், அதிகாலையில் சிறுவன் செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் சிறுமியை அனுமதித்ததாக தெரிகிறது. சிகிச்சை அளித்த மருத்துவரிடம் சிறுமி சம்பவம் குறித்த விவரங்களைக் கூறியுள்ளார். இதையடுத்து, மருத்துவர்கள் அளித்த தகவலின் பேரில் போலீஸார் சம்பவ இடத்துக்கு சென்று விசாரணை மேற்கொண்டனர். இதுகுறித்து, பாதிக்கப்பட்ட சிறுமியின் பெற்றோர் அளித்த புகாரின் பேரில், மேல்மருவத்தூர் அனைத்து மகளிர் போலீஸார் வழக்குப்பதிவு செய்தனர். இதையடுத்து, தனிப்படை அமைத்து போலீஸார் விசாரணை மேற்கொண்டனர். இதுதொடர்பாக ஆவடி அருகே பதுங்கியிருந்த பாலாஜி (எ) காக்கா பாலாஜியை நேற்று கைது செய்தனர்.

இவர் மீது, கூடுவாஞ்சேரி காவல் நிலையத்தில் கொலை முயற்சி, திருட்டு, வழிப்பறி உள்ளிட்ட 15-க்கும் மேற்பட்ட வழக்குகள் உள்ளன. பாலாஜி கடந்த ஜனவரி மாதத்தில் கூடுவாஞ்சேரி மதுபான கடையில் மது அருந்த வருபவர்களிடம், கத்தியை காட்டி மிரட்டி பணம் பறித்த சம்பவத்தில் கைது செய்யப்பட்டார். இந்நிலையில், சிறையிலிருந்து வெளியே வந்த பாலாஜி, 14 வயது சிறுமியை தூக்கி சென்று பாலியல் வன்கொடுமை செய்த சம்பவத்தில் கைது செய்யப்பட்டுள்ளார். மேலும், இச்சம்பவத்தில் மாரிபுத்தூர் பகுதியை சேர்ந்த தாமோதர பெருமாள் (25) என்பவரை தனிப்படை போலீஸார் கைது செய்தனர். கடந்த 6 மாதங்களுக்கு முன்பு கோயிலில் நகை திருட்டு வழக்கில் கைது செய்யப்பட்ட தாமோதர பெருமாள், செங்கை மாவட்ட சிறையில் இருந்தபோது காக்கா பாலாஜியுடன் பழக்கம் ஏற்பட்டுள்ளது. இருவரும் சிறையில் இருந்து வெளியில் வந்த பின்னர், இந்த பாலியல் வன்கொடுமை சம்பவத்தில் ஈடுபட்டிருப்பதாக போலீஸார் தெரிவித்தனர்.

## வணிகச் செய்திகள்

### ஆட்டோ காஸ் கிடைப்பதில் சிக்கல்: எரிவாயுவால் இயங்கும் வாகனங்களை இயக்குபவர்கள் தவிப்பு

**சேலம், மார்ச் 13:**

அமெரிக்கா- ஈரான் இடையே ஏற்பட்டுள்ள போரால், வளைகுடா நாடுகளில் இருந்து எரிபொருள் ஏற்றுமதி பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் இந்தியாவில் சமையல் எரிவாயு தட்டுப்பாடு ஏற்பட்டு, வர்த்தகப் பயன்பாட்டுக்கான சமையல் எரிவாயு விநியோகம் தடைபட்டுள்ளது.

இந்நிலையில், எரிவாயுவால் இயங்கும் வாகனங்களுக்கும் போதுமான எரிவாயு கிடைப்பதில் தட்டுப்பாடு ஏற்படத் தொடங்கியுள்ளது. சேலம் மாவட்டத்தில் பல்வேறு பங்க்குகளில் எரிவாயு இருப்பு குறைந்து கொண்டே வரும் நிலையில், பல பங்க்குகளுக்கு எரிவாயு விநியோகம் நிறுத்தப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. இது குறித்து ஆட்டோ எல்பிஜி எரிவாயு பங்க் உரிமையாளர்கள் சிலர் கூறியதாவது: போர் தொடங்கிய அடுத்த சில நாட்களில் இருந்தே, பங்க்குகளுக்கு எரிவாயு விநியோகம் நிறுத்தப்பட்டது. பல பங்க்குகளில் ஏற்கெனவே இருப்பில் இருந்த எரிவாயுவை தொடர்ந்து விற்பனை செய்து வருகிறோம்.

குறிப்பாக, டேங்க் முழுவதையும் நிரப்பாமல் பாதியளவு மட்டுமே எரிவாயு விற்பனை செய்கிறோம். இதனால் உடனடி தட்டுப்பாடு இல்லை. ஆனால் இதுவரை எண்ணெய் நிறுவனங்களிடம் இருந்து எரிவாயு விநியோகம் செய்யப்படாமல் உள்ளது. இருப்பு தீர்ந்துவிட்டால், ஆட்டோ எல்பிஜி பங்க்குள் மூடப்படும் நிலை ஏற்படும் என்றனர்.

# போலீஸ் அதிகாரி என மிரட்டி ஓய்வுபெற்ற வங்கி அதிகாரியிடம் ரூ.1 கோடி பறிப்பு

**சென்னை, மார்ச் 13:**

சென்னை நொளம்பூரில் வசிப்பவர் ஓய்வுபெற்ற வங்கி மேலாளர் சத்தியமூர்த்தி (60). இவருக்கு கடந்தாண்டு நவ.27-ம் தேதி போன் அழைப்பு ஒன்று வந்தது. எதிர்முனையில் பேசிய நபர், தன்னை தீவிரவாத தடுப்புப் பிரிவு போலீஸ் அதிகாரி என அறிமுகம் செய்துகொண்டார்.

அவர், "என்ஐஏ அதிகாரிகள் கொடுத்த ரகசிய அறிக்கைப்படி, நீங்கள் பாதுகாப்பான தகவல்களை தீவிரவாதிகளுக்கு கொடுத்து பணப்பலன்களை பெற்றுள்ளீர்கள். எனவே உங்களை டிஜிட்டல் முறையில் கைது செய்துள்ளோம்.

விசாரணை முடியும் வரை நீங்கள் வீட்டைவிட்டு வெளியேறினாலோ, இதை வெளியே சொன்னாலோ உங்கள் வீட்டுக்கு வெளியே தயார் நிலையில் உள்ள போலீஸார் கைதுசெய்து சிறையில் அடைத்துவிடுவார்கள். மேலும் இது தொடர்பான தகவல்கள் ஊடகங்களுக்கு கொடுக்கப்பட்டு வெளியிடப்படும். இப்படி நடக்கக் கூடாது என்றால் விசாரணைக்கு முழு ஒத்துழைப்பு தாருங்கள்" என தெரிவித்தார். மேலும், "நீங்கள் நிரபராதி என நிரூபிக்க உங்களது வங்கிக் கணக்கில் உள்ள மொத்த பணத்தையும் நாங்கள் கூறும் வங்கிக் கணக்குக்கு அனுப்பிவைக்கவும். அதை சரிபார்த்த பின்னர், உங்கள் மீது தவறு இல்லை என்றால் பணத்தை திருப்பி அனுப்பிவிடுவோம்" எனத் தெரிவித்துள்ளார். இதையடுத்து, சத்தியமூர்த்தி தன்னை நிரபராதி என நிரூபிக்க தனது வங்கிக் கணக்கில் இருந்த ரூ.1 கோடியே 7 ஆயிரத்தை அனுப்பி வைத்தார். அதன் பிறகு எதிர்தரப்பினரை தொடர்பு கொள்ள முடியவில்லை. தாம் ஏமாற்றப்பட்டதை உணர்ந்த சத்தியமூர்த்தி, இது தொடர்பாக சென்னை சைபர் க்ரைம் போலீஸாரிடம் புகார் அளித்தார். அதன்படி போலீஸார் வழக்குப் பதிந்து விசாரித்தனர். இதில் மோசடி செய்யப்பட்ட பணம் பல மாநிலங்களுக்கு அடுத்தடுத்து மாற்றப்பட்டது தெரியவந்தது. மேலும் சைபர் க்ரைம் மோசடி கும்பல் சென்னை மண்ணடி, ராமசாமி தெருவைச் சேர்ந்த அஜருதீன் (40) என்பவரது வங்கிக் கணக்கை பயன்படுத்தி, அந்த கணக்கில் சத்தியமூர்த்தியை பணம் போட வைத்துள்ளனர். இதையடுத்து அஜருதீன் கைது செய்யப்பட்டார். இவர் பர்மா பஜாரில் மின்னணு பொருட்கள் விற்பனை மற்றும் மொபைல் போன் வியாபாரம் செய்துவந்தது தெரியவந்தது. மேலும் அவர் 40-க்கும் மேற்பட்ட வங்கிக் கணக்குகளை மோசடி கும்பல் பயன்படுத்த கொடுத்து 3 சதவீத கமிஷன் பெற்றுவந்துள்ளார்.

# எல்பிஜி தட்டுப்பாடு: ரயில்களில் உணவு வழங்குவதில் சிக்கல்?

புதுடெல்லி, மார்ச் 13:




இஸ்ரேல் - ஈரான் இடையேயான போரால் இந்தியாவுக்கு வரும் கச்சா எண்ணெய் தடைபட்டுள்ளதால் நாடு முழுவதும் எல்பிஜி சிலிண்டர் தட்டுபாடு ஏற்பட்டுள்ளது.

எல்பிஜி உற்பத்தியை அதிகரிக்கவும் வீட்டு உபயோக சிலிண்டருக்கு முன்னுரிமை அளிக்கவும் எண்ணெய் நிறுவனங்களுக்கு மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது. எனினும் பல்வேறு இடங்களில் கேஸ் சிலிண்டர் பெறவும் பெட்ரோல் நிலையங்களில் ஆட்டோக்கள் கேஸ் நிரப்பவும் காத்திருக்கும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

சமையல் எரிவாயு தட்டுப்பாடு ஏற்பட்டுளளதால் நேற்று முதலே உணவக நிறுவனங்கள் தங்கள் தொழிலைத் தொடர முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக கவலை தெரிவித்து வருகின்றன. பல ஹோட்டல்களில் உணவு வகைகள் குறைக்கப்பட்டு விலையேற்றம் செய்யப்படுகிறது. இதனால் மக்களும் கடுமையாக பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

இந்நிலையில் ரயில்களிலும் உணவு வழங்குவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. நீண்ட தூரம் செல்லும் ரயில்கள், வந்தே பாரத் போன்ற அதிநவீன ரயில்களில் பயணிகளுக்கு ரயில்வே நிர்வாகம் சார்பில் உணவு வழங்கப்பட்டு வருகிறது. அதேபோல மற்ற ரயில்களிலும் பயணிகளின் விருப்பத்திற்கேற்ப உணவு பெறலாம்.

தற்போது எரிவாயு தட்டுப்பாட்டால் ரயில்களில் உணவு கொடுக்க ஒப்பந்த நிறுவனங்கள் சிரமப்படுகின்றன. ரயில் நிலையங்களில் உணவு விற்பனை செய்யும் கடைகளுக்கும் இதே நிலைமை ஏற்பட்டுள்ளது.

இதையடுத்து ரயில்களில் பயணிகளுக்கு உணவு வழங்கும் ஒப்பந்த நிறுவனங்கள், ரயில் நிலையங்களில் உள்ள உணவு விற்பனைக் கடைகளுக்கு ஐஆர்சிடிசி சில அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளது. கேஸ் சிலிண்டருக்குப் பதிலாக மைக்ரோவேவ் ஓவன், இன்டக்ஷன் ஸ்டவ் ஆகியவற்றைப் பயன்படுத்தவும் சமைத்த உணவுகளை இருப்பில் வைக்கவும், உணவு இருப்பு இல்லை என்றால் பயணிகளின் கோரிக்கைக்கு ஏற்ப பேக்கிங் செய்யப்பட்ட உணவுப் பொருள்களை வழங்கவும் அறிவுறுத்தியுள்ளது.

## தொலைக்காட்சி விளம்பரங்கள் விதிமுறைகளைப் பின்பற்ற வேண்டும்: மத்திய அரசு

புதுடெல்லி, மார்ச் 13:

தனியார் தொலைக்காட்சி சேனல்களில் ஒளிபரப்பப்படும் அனைத்து விளம்பரங்களும் விளம்பர விதிமுறைகளைக் கட்டாயம் பின்பற்ற வேண்டும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக மக்களவையில் மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் எல்.முருகன் புதன்கிழமை தெரிவித்ததாவது: தற்போதுள்ள ஒழுங்காற்று செயல்திட்டத்தின் கீழ், தனியார் செயற்கைக்கோள் தொலைக்காட்சி சேனல்களில் ஒளிப்பரப்பாகும் அனைத்து விளம்பரங்களும், கேபிள் தொலைக்காட்சி நெட்வொர்க் ஒழுங்காற்றுச் சட்டம் 1956-இன் கீழ் பரிந்துரைக்கப்பட்டுள்ள விளம்பர விதிமுறைகளைக் கட்டாயம் பின்பற்ற வேண்டும்.

நிரூபிக்க கடினமாக இருக்கும் வகையில், விளம்பரம் செய்யப்படும் பொருள்கள் அல்லது அதைத் தயாரிக்கப் பயன்படுத்தப்பட்ட பொருள்கள் இயற்கைக்கு அப்பாற்பட்ட, தனிச்சிறப்பான, அதிசயமான தன்மை அல்லது தரத்தை கொண்டுள்ளது என விளம்பரப்படுத்தக் கூடாது.

விளம்பர விதிமுறைகள் மீறப்பட்டது தெரியவந்தால், சம்பந்தப்பட்ட தனியார் தொலைக்காட்சி சேனல்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்றார்.

## எரிபொருள் தட்டுப்பாடு! செல்போன் டவர், இணைய சேவை பாதிக்கும் அபாயம்!

புதுடெல்லி, மார்ச் 13:

எரிபொருள் தட்டுப்பாடு நீடித்தால் செல்போன் வலையமைப்பு, இணைய சேவைகள் பாதிக்கப்படலாம் என்று தொலைத்தொடர்பு நிறுவனங்கள் கவலை தெரிவித்துள்ளன.

மத்திய கிழக்கு போர்ப் பதற்றம் காரணமாக வளைகுடா நாடுகளில் இருந்து இந்தியாவுக்கு இறக்குமதி செய்யப்படும் எரிபொருள்கள் தடைப்பட்டுள்ளது. இதன்காரணமாக கடந்த மூன்று நாள்களாக நாடு முழுவதும் சிலிண்டர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

தொடர்ந்து, ஹோட்டல்கள், கடைகள் உள்ளிட்டவைக்கு வழங்கப்படும் வணிகப் பயன்பாட்டு சிலிண்டர்கள் விநியோகம் நிறுத்தப்பட்டுள்ளன.

வீட்டு உபயோகப் பயன்பாட்டுக்கும், அத்தியாவசிய தேவைகளுக்கு மட்டுமே சிலிண்டர்கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. இதனடிப்படையில் தொலைத்தொடர்பு உள்கட்டமைப்பு நிறுவனங்களுக்கும் கடந்த மார்ச் 5 ஆம் தேதி முதல் சிலிண்டர் விநியோகத்தை எண்ணெய் நிறுவனங்கள் நிறுத்தியுள்ளன. இதனால், புதிய தொலைத்தொடர்பு கோபுரங்களை (டவர்) தயாரித்து நிறுவுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாகவும், இதே நிலை தொடரும் பட்சத்தில் விரைவில் படிப்படியாக டவர் தயாரிப்புகள் குறைக்கப்படும் அபாயம் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. தொலைத்தொடர்பு கோபுரங்கள் பல உலோக செயலாக்க தொழில்நுட்பங்களை பயன்படுத்தி தயாரிக்கப்படு கின்றன. உலோகத்தை சூடாக்கவும், கோபுரங்களின் பாகங்கள் துரு மற்றும் சேதங்களில் இருந்து பாதுகாக்க பூச்சு பூசுவதற்கு எரிவாயு அத்தியாவசிய தேவையாக இருக்கின்றன. இதுதொடர்பாக மத்திய தொலைத்தொடர்பு அமைச்சகத்துக்கு டிஜிட்டல் உள்கட்டமைப்பு வழங்குநர்கள் சங்கம் எழுதியிருக்கும் கடிதத்தில் டவர் தயாரிப்பு நிறுவனங்களுக்கு தேவையான எல்பிஜி, எல்என்ஜி வகை எரிவாயுகளை சீராக விநியோகிக்க கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது.

## கச்சா எண்ணெய் விலை மீண்டும் 100 டாலரைத் தாண்டியது!

புதுடெல்லி, மார்ச் 13:




ஹோர்முஸ் நீரிணையைக் கடக்க முயன்ற எண்ணெய் கப்பல் மீது ஈரான் தாக்குதல் நடத்தியதை தொடர்ந்து கச்சா எண்ணெய் மீண்டும் 100 டாலரைக் கடந்துள்ளது.

ஈரான் - அமெரிக்க போரைத் தொடர்ந்து ஹோர்முஸ் நீரிணை மூடப்பட்டதால், இந்த வாரத் தொடக்கத்தில் கச்சா எண்ணெய் விலை ஒரு பீப்பாய் 100 டாலரைக் கடந்தது. இதையடுத்து, ஜி7 நாடுகள் தங்களின் அவசர கால கையிருப்பில் இருக்கும் எண்ணெய்களை வெளியிட முன்வந்ததால், கச்சா எண்ணெய் விலை 100 டாலருக்கும் கீழ் குறைந்தது.

இந்த நிலையில், ஐக்கிய அரபு அமீரகத்தின் கலீஃபா துறைமுகத்தில் இருந்து குஜராத் கண்ட்லா துறைமுகம் நோக்கி வந்துகொண்டிருந்த மயூரி நரீ என்கிற சரக்குக் கப்பல் ஹோர்முஸ் நீரிணையை நெருங்கியபோது ஈரான் ஏவுகணை தாக்குதல் நடத்தியுள்ளது. இந்த நிலையில், கச்சா எண்ணெய்யின் விலை மீண்டும் பீப்பாய் 100 டாலரைக் கடந்துள்ளதால், பெட்ரோல், டீசல் விலை உயரும் அபாயம் ஏற்பட்டுள்ளது,

இந்தியாவில் பீப்பாய் 130 டாலரைக் கடக்கும் வரை பெட்ரோல், டீசல் விலையை உயர்த்த வேண்டாம் என்று எண்ணெய் நிறுவனங்களுக்கு மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது.

## திருப்பதி அலிபிரி சோதனை சாவடியில் கட்டுக்கட்டாக பணத்துடன் சிக்கிய நபர்- போலீசார் தீவிர விசாரணை

திருப்பதி, மார்ச் 13:

ராணிப்பேட்டை மாவட்டம் அரக்கோணத்தை சேர்ந்தவர் நீலமேகம் (வயது 62). திருப்பதி கொர்லகுண்டாவை சேர்ந்தவர் வெங்கடேஷ் (29). இருவரும் நேற்று திருப்பதி மலைக்கு செல்வதற்காக காரில் அலிபிரி சோதனைச் சாவடிக்கு வந்தனர்.

சோதனைச் சாவடியில் இருந்த விஜிலென்ஸ் அதிகாரிகள் காரை சோதனை செய்தனர். அப்போது காரில் இருந்த ஒரு பையில் ரூ.65 லட்சம் இருந்தது. பணத்தை பறிமுதல் செய்த விஜிலென்ஸ் அதிகாரிகள் அதை அலிபிரி போலீசில் ஒப்படைத்தனர். அலிபிரி போலீஸ் இன்ஸ்பெக்டர் ராமகிருஷ்ணா இருவரிடமும் தனித்தனியாக விசாரணை நடத்தினார். விசாரணையில் இந்த பணம் சென்னையை சேர்ந்த ஒருவருக்கு சொந்தமானது என தெரிவித்தனர்.

விசாரணைக்கு பின் பறிமுதல் செய்யப்பட்ட பணம் கருவூலத்தில் ஒப்படைக்கப்பட்டது.

இது குறித்து அதிகாரிகள் கூறுகையில்:

டெல்லி, மும்பை, கொல்கத்தா, சென்னை, பெங்களூர் உள்ளிட்ட முக்கிய நகரங்களை சேர்ந்தவர்கள் திருப்பதி மலைக்கு வந்து தங்க நாணயங்களை வரியில்லாமல் வாங்கிச் செல்கின்றனர். இதனை பல்வேறு நகரங்களுக்கு எடுத்துச் சென்று விற்பனை செய்து 15 சதவீத கமிஷன் பெற்று வருகின்றனர்.

இதன் மூலம் ஆண்டுக்கு ரூ.50 முதல் ரூ.60 கோடி வரை பண பரிமாற்றம் நடைபெறுவதாக தெரிவித்தனர். பிடிபட்டவர்களும் அந்த கும்பலை சேர்ந்தவர்களாக இருக்கலாம் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

## சத்தீஸ்கரில் ஒரே நாளில் 108 மாவோயிஸ்ட்கள் சரண்

ராய்ப்பூர், மார்ச் 13:

சத்தீஸ்கர் மாநிலம் பஸ்தார் பிராந்தியத்தில் 108 மாவோயிஸ்ட்கள் பாதுகாப்புப் படையினரிடம் நேற்று சரணடைந்தனர். இவர்களின் தலைக்கு அரசு ரூ.3.95 கோடி வெகுமதி அறிவிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

மத்திய உள்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள தகவலின் படி, சரணடைந்தவர்களில் 8 பேர் மாவோயிஸ்ட்களின் முக்கியக் குழு உறுப்பினர்கள் ஆவர். மார்ச் 31-ம் தேதிக்குள் இந்தியாவில் மாவோயிஸத்தை முற்றிலும் ஒழிப்பதாக மத்திய அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது. இந்நிலையில், பிஜப்பூர் மாவட்டத்திலிருந்து 37 பேரும், தந்தேவாடாவில் இருந்து 30 பேரும் சரணடைந்துள்ளனர்.

சரணடைந்த மாவோயிஸ்ட்கள் அளித்த தகவலின் அடிப்படையில், அவர்கள் மறைத்து வைத்திருந்த மிகப் பெரிய ஆயுதக் கிடங்கை பாதுகாப்புப் படையினர் கண்டறிந்து பறிமுதல் செய்தனர். மாவோயிஸ்ட் எதிர்ப்பு நடவடிக்கை வரலாற்றிலேயே இதுவே மிகப் பெரிய ஆயுதப் பறிமுதல் என்று காவல் துறை தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு 21 உறுப்பினர்களுடன் இயங்கிவந்த மாவோயிஸ்ட் மத்திய குழுவில் தற்போது 2 பேர் மட்டுமே தலைமறைவாக உள்ளனர். ஒரு சிலர் சரணடைந்துள்ளனர். மற்றவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# எல்பிஜி சிலிண்டர் நெருக்கடி: நாடாளுமன்றத்தில் விவாதிக்க வலியுறுத்தி எதிர்க்கட்சிகள் ஆர்ப்பாட்டம்

புதுடெல்லி, மார்ச் 13:




நாடு முழுவதும் எல்பிஜி சிலிண்டர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ள நிலையில் அது குறித்து நாடாளுமன்றத்தில் விவாதிக்க வலியுறுத்தி மக்களவையில் எதிர்க்கட்சிகள் அமளியில் ஈடுபட்டன. இதனால், அவை சிறிது நேரம் ஒத்திவைக்கப்பட்டது.

இதையடுத்து, நாடாளுமன்ற வளாகத்தில் எதிர்க்கட்சி எம்பிக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். காங்கிரஸ் மூத்த தலைவர் பிரியங்கா காந்தி உள்ளிட்ட எம்பிக்கள் இதில் கலந்து கொண்டு கோரிக்கைகளை வலியுறுத்தி கோஷங்களை எழுப்பினர்.

இது தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய காங்கிரஸ் எம்பி கே.சி. வேணுகோபால், “வணிக பயன்பாட்டுக்கு எல்பிஜி சிலிண்டர்களை வழங்க வேண்டாம் என்று எரிவாயு நிறுவனங்களுக்கு அறிவுறுத்தல் அனுப்பப்பட்டுள்ளதாக தகவல் வந்துள்ளது. நிலைமை நாள்தோறும் மோசமாகிறது. மத்திய அரசு நாட்டு மக்களிடம் பொய்களைக் கூறி வருகிறது” என குற்றம் சாட்டினார். மற்றொரு காங்கிரஸ் எம்.பி. கே. சுரேஷ், “நாட்டில் CNG நெருக்கடி மிகவும் தீவிரமாக உள்ளது. உண்மையான நிலையை அரசு வெளிப்படுத்தவில்லை. பல ஹோட்டல்கள் மற்றும் தொழில்கள் மூடப்பட்டுள்ளன. நிலைமை மிகவும் மோசமாக இருந்தாலும், கவலைப்பட வேண்டியதில்லை என்று அரசு கூறுகிறது.

ஆனால் ஹோட்டல் மற்றும் உணவக உரிமையாளர்கள் நிலைமை தீவிரமாக இருப்பதாகக் கூறுகின்றனர். அரசு மக்களை தவறாக வழிநடத்துகிறது” என குறிப்பிட்டார்.

## சபாநாயகர் ஓம் பிர்லாவுக்கு எதிரான தீர்மானம் தோல்வி

புதுடெல்லி, மார்ச் 13:

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடரில், மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லாவிற்கு எதிராக எதிர்க்கட்சிகள் கொண்டு வந்த நம்பிக்கையில்லா தீர்மானம் தோல்வியடைந்தது.

மக்களவையில் கடும் அமளி மற்றும் முழக்கங்களுக்கு இடையே, அவையை நடத்திக் கொண்டிருந்த ஜெகதாம்பிகா பால், சபாநாயகரை நீக்கக் கோரும் தீர்மானம் தோல்வியடைந்ததை அதிகாரப்பூர்வமாக அறிவித்தார். முன்னதாக, மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவின் உரைக்கு எதிர்ப்பு தெரிவித்து எதிர்க்கட்சி உறுப்பினர்கள் முழக்கமிட்டனர். தீர்மானத்தின் மீது வாக்கெடுப்பு நடத்த ஒத்துழைக்குமாறும், உறுப்பினர்கள் தங்களது இருக்கைகளுக்குத் திரும்புமாறும் ஜெகதாம்பிகா பால் வேண்டுகோள் விடுத்தார். எனினும், அமளி தொடர்ந்ததால் குரல் வாக்கெடுப்பு நடத்தப்பட்டு தீர்மானம் நிராகரிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து மக்களவை மற்றும் மாநிலங்களவை அவை நாள் முழுவதும் ஒத்திவைக்கப்பட்டது.

## ராகுல் மீது அமித் ஷா தாக்கு

புதுடெல்லி, மார்ச் 13:

நாடாளுமன்ற விவாதத்தின் போது பேசிய மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, காங்கிரஸ் எம்.பி. ராகுல் காந்தியை கடுமையாக விமர்சித்தார். அப்போது அவர் கூறுகையில், “ ராகுல் காந்தி கட்சிப் பணிகளுக்காகப் பல்வேறு இடங்களுக்கு, வெளிநாடுகளுக்கு செல்கிறார். ஆனால் குடியரசுத் தலைவர் உரை, மத்திய பட்ஜெட் தாக்கல் மற்றும் 370-வது சட்டப்பிரிவு தொடர்பான முக்கிய விவாதங்களின் போது ராகுல் காந்தி அவையில் இருப்பதில்லை. முக்கியமான கூட்டத் தொடர்களின் போது வெளிநாடுகளுக்குச் சென்றுவிட்டு, பின்னர் தமக்கு பேச வாய்ப்பளிக்கப்படுவதில்லை என்று குற்றம் சாட்டுகிறார். மக்களவையைப் பொருத்தவரையில் காங்கிரஸ் 175 மணி நேரத்துக்கும் மேலாக பேசியுள்ளது. அப்போது எந்த சபாநாயகர் உங்களை தடுத்தார் ? 17-வது மக்களவையில் ராகுல் காந்தியின் வருகை 51 சதவீதமாகவும் (சராசரி 66%), 16-வது மக்களவையில் 52 சதவீதமாகவும் (சராசரி 80%) மட்டுமே இருந்துள்ளது என்றார்.

## தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார் மீது பதவி நீக்கத் தீர்மானம்: எதிர்க்கட்சிகள் ஆதரவு

புதுடெல்லி, மார்ச் 13:

மேற்கு வங்க மாநிலத்தில் வரும் ஏப்ரல், மே மாதங்களில் தேர்தல் நடைபெறவுள்ளது. இதை முன்னிட்டு கடந்த ஆண்டு டிசம்பரில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் (எஸ்ஐஆர்) தேர்தல் ஆணையத்தால் மேற்கு வங்கத்தில் தொடங்கப்பட்டன. இந்நிலையில் இந்த எஸ்ஐஆர் பணியில் முறைகேடுகள் நடை பெற்றுள்ளதாகவும், இதற்குத் தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார்தான் காரணம் என்றும் திரிணமூல் காங்கிரஸ் கட்சி புகார் கூறி வருகிறது. இதைத் தொடர்ந்து அவரை பதவியிலிருந்து நீக்கக் கோரும் தீர்மானத்தை திரிணமூல் காங்கிரஸ், மாநிலங்களவையில் கொண்டு வரும் என்று கட்சி எம்.பி.சவுகதா ராய் நேற்று அறிவித்தார். எஸ்ஐஆர் பணியின் காரணமாக 59 லட்சம் உண்மையான வாக்காளர்களின் பெயர்கள் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ளன என்றும் அவர் புகார் தெரிவித்தார். இந்நிலையில் திரிணமூல் காங்கிரஸ் கட்சியின் முடிவை வரவேற்பதாக காங்கிரஸ் மூத்த தலைவர் உதித் ராஜ், எம்.பி.சுக்தேவ் பகத் உள்ளிட்டோர் தெரிவித்துள்ளனர். திரிணமூல் காங்கிரஸ் கொண்டு வரும் தீர்மானத்துக்கு காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் ஆதரவு அளிக்கும் என்றும் அவர்கள் தெரிவித்தனர். பூர்ணியா தொகுதி சுயேச்சை எம்.பி.யான பப்பு யாதவ், சமாஜ்வாதி எம்.பி.தர்மேந்திர யாதவ் உள்ளிட்டோரும் இதற்கு ஆதரவு தெரிவித்துள்ளனர். அதே நேரத்தில் திரிணமூல் காங்கிரஸ் கட்சியின் முடிவுக்கு பாஜக மூத்த தலைவர்கள் அனுராக் தாக்குர், முக்தார் அப்பாஸ் நக்வி, மத்திய அமைச்சர் சுகந்தா மஜூம்தார் உள்ளிட்டோர் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

## “வதந்திகளை நம்பி, மக்கள் தேவையின்றி பீதியடைய வேண்டாம்” - இந்துஸ்தான் பெட்ரோலியம் வெளியிட்ட முக்கிய தகவல்

புதுடெல்லி, மார்ச் 13:

ஈரான் - இஸ்ரேல் மோதல்களால் ஏற்பட்ட பதற்ற நிலையால், கடந்த சில நாட்களுக்கு முன் நாட்டில், சமையல் கியாஸ் சிலிண்டர் விலை ரூ.60 வரை உயர்ந்தது. வர்த்தக பயன்பாட்டுக்கான கியாஸ் சிலிண்டர் விலை ரூ.115 உயர்ந்தது. இதனால், மக்கள் அதிர்ச்சியடைந்து உள்ளனர். எனினும், இந்தியாவுக்கு கியாஸ் சிலிண்டர்களை விற்பனை செய்வதற்காக அல்ஜீரியா, ஆஸ்திரேலியா, கனடா மற்றும் நார்வே நாடுகள் அணுகியுள்ளன என அரசு வட்டாரம் தெரிவித்து உள்ளது. இந்நிலையில் அடுத்து நாட்டில், பெட்ரோல் மற்றும் டீசல் விலை எப்போது வேண்டுமென்றாலும் உயர கூடும் என்ற அச்சம் வாகன ஓட்டிகளிடையே காணப்படுகிறது. இது எப்போது நடைபெறும்? அதற்கான சாத்தியம் என்ன? என்பது பற்றி அரசு வட்டாரங்கள் தகவல் தெரிவித்து உள்ளன. இதன்படி, பீப்பாய் ஒன்றிற்கு 130 அமெரிக்க டாலர் அல்லது அதற்கு கூடுதலாக கச்சா எண்ணெய் விலை உயரும்போது, பெட்ரோல் மற்றும் டீசல் விலை உயர்வதற்கான சாத்தியம் உள்ளது. ஆனால், நாட்டில் எந்த பெட்ரோல் பல்க்கிலும் பெட்ரோல் மற்றும் டீசல் தட்டுப்பாடு இல்லை என தகவல் தெரிவிக்கின்றது. இந்நிலையில் வதந்திகளை நம்பி, மக்கள் தேவையின்றி பீதியடைய வேண்டாம் இந்துஸ்தான் பெட்ரோலியம் தெரிவித்துள்ளது. இதுதொடர்பாக வெளியிடப்பட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது:- நாடு முழுவதும் உள்ள அனைத்து HPCL சில்லறை விற்பனை நிலையங்களும் (எரிபொருள் நிலையங்கள்) முழுமையாக வழக்கம் போல் செயல்பட்டு வருகின்றன. பெட்ரோல், டீசல் மற்றும் பிற எரிபொருள்கள் போதுமான அளவு விநியோகிக்கப்படுகின்றன மற்றும் விநியோகம் சீராக தொடர்ந்து வருகிறது. வாடிக்கையாளர்கள் வதந்திகளுக்கு கவனம் செலுத்த வேண்டாம். பீதியடைந்து வாங்குவதை தவிர்க்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஈரானுக்கு எதிராக ஐக்கிய நாடுகள் அவையில் தீர்மானம்: இந்தியா ஆதரவு

**நியூயார்க், மார்ச் 13:**

இஸ்ரேலும் அமெரிக்காவும் இணைந்து ஈரான் மீது தாக்குதல் நடத்தின. இதைத் தொடர்ந்து, வளைகுடா நாடுகளில் அமைந்துள்ள அமெரிக்க படைத்தலங்கள் மீது ஈரான் ட்ரோன்கள் மூலம் தாக்குதல் நடத்தி வருகிறது. இந்த நிலையில், ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் கூட்டத்தில் மத்திய கிழக்கு நாடுகள் மீதான ஈரானின் கொடூரத் தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்து தீர்மானம் கொண்டுவரப்பட்டது.

இந்த தீர்மானத்தில், "மத்திய கிழக்கு நாடுகள் மீதான தாக்குதலையும், ஹார்முஸ் ஜலசந்தியை மூடி கடல்சார் வர்த்தகத்தில் தலையிடுவதையும் ஈரான் உடனடியாக நிறுத்த வேண்டும்" என்று தெரிவிக்கப்பட்டது. இந்தியா உள்பட 135 நாடுகள் ஆதரவளித்ததை தொடர்ந்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதேவேளையில், சீனா இந்த வாக்கெடுப்பை புறக்கணித்தது. ரஷ்யாவும் தீர்மானத்தை விமர்சித்துள்ளது.

## ஹார்முஸ் ஜலசந்தியை கடக்க இந்திய கப்பல்களுக்கு ஈரான் அனுமதி

**தெஹ்ரான், மார்ச் 13:**

அணு ஆயுத தடை ஒப்பந்தத்தில் ஈரான் கையெழுத்திட மறுத்ததால், அந்நாடு மீது அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் ஆகிய நாடுகள் கூட்டாக தாக்குதல் நடத்தி வருகின்றன. அமெரிக்கா நடத்திய தாக்குதலில் ஈரானின் உச்ச தலைவராக இருந்த அயத்துல்லா அலி காமேனி கொல்லப்பட்டார். இதனால் கோபம் அடைந்த ஈரான், இஸ்ரேல் மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள அமெரிக்க ராணுவ முகாம்கள் மற்றும் விமான நிலையங்கள் மீது ஏவுகணை மற்றும் ட்ரோன் தாக்குதல் நடத்தி வருகிறது. இதனால் வளைகுடா நாடுகளில் பதற்றம் நிலவுகிறது.

வளைகுடா நாடுகளில் இருந்து ஹார்முஸ் ஜலசந்தி வழியாக கச்சா எண்ணெய் கொண்டு செல்லும் கப்பல்கள் மீது தாக்குதல் நடத்துவோம் என ஈரான் கூறியிருந்தது. இந்த ஹார்முஸ் ஜலசந்தி பகுதி எண்ணெய் கப்பல் போக்குவரத்துக்கு மிக முக்கியமானதாக உள்ளது. இந்த பகுதியில் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதால் எண்ணெய் கப்பல்களின் போக்குவரத்து ஸ்தம்பித்துள்ளது. இதனால் பல நாடுகளில் பெட்ரோல், டீசல், எரிவாயு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.இதனிடையே, ஐக்கிய அரபு அமீரகத்தில் இருந்து குஜராத்திற்கு வந்த சரக்கு கப்பல் மீது நேற்று ஹார்முஸ் ஜலசந்தி அருகே தாக்குதல் நடத்தப்பட்டது. இதற்கு இந்தியா கடும் கண்டனம் தெரிவித்தது.

இதன் தொடர்ச்சியாக ஈரான் வெளியுறவுத்துறை மந்திரி அராக்சியுடன் இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் தொலைபேசி வாயிலாக பேசினார். இந்த பேச்சுவார்த்தையை அடுத்து ஹார்முஸ் ஜலசந்தி வழியாக இந்திய கப்பல்களுக்கு அனுமதி வழங்க ஈரான் சம்மதம் தெரிவித்துள்ளது.எரிபொருள் ஏற்றி வரும் கப்பல்களை ஹார்முஸ் ஜலசந்தி வழியாக இந்தியாவுக்கு அனுப்பலாம் என்று ஈரான் தெரிவித்துள்ளது.

## அமெரிக்காவுக்கு பகிரங்க மிரட்டல்: வடகொரியா ஏவுகணை சோதனை

**பியாங்யாங், மார்ச் 13:**

அமெரிக்கா மற்றும் தென்கொரியா நாடுகள் இணைந்து நடத்தி வரும் கூட்டு ராணுவப் பயிற்சிக்கு பதிலடி கொடுக்கும் வகையில், வடகொரியா மீண்டும் தனது ஏவுகணை சோதனைகளைத் தீவிரப்படுத்தியுள்ளது. வடகொரியாவின் மேற்கு கடற்கரைப் பகுதியில் உள்ள தீவுகளை இலக் காகக் கொண்டு, 'சோ ஹியோன்' என்ற அதிநவீன போர்க்கப்பலில் இருந்து நேற்று குரூஸ் ஏவுகணைகள் ஏவப்பட்டன.

இந்த ஏவுகணைகள் கடலில் உள்ள இலக்குகளைத் துல்லியமாகத் தாக்கி அழித்தது. இந்த ஏவுகணை சோதனையை வடகொரிய அதிபர் கிம் ஜாங் அன், தனது 13 வயது மகள் கிம் ஜூஏ-வுடன் நேரில் வந்து பார்வையிட்டார். ஒரு கட்டுப்பாட்டு அறையில் அமர்ந்து, திரையில் ஏவுகணைகள் பாய்வ தையும் அவை இலக்குகளைத் தாக்குவதையும் தனது மகளுக்கு அவர் விளக்கினார்.

அமெரிக்காவிற்கு மிரட்டல் விடுக்கும் வகையில் இந்த ஏவுகணை சோதனையை கிம் ஜாங் அன் நடத்தியதாக தெரிகிறது. ஏற்கனவே மத்திய கிழக்கில் நிலவும் போருக்கு இடையே, அமெரிக்காவை சீண்டும் வகையில், கிம் ஜாங் அன் நடத்திய ஏவுகணை சோதனை கொரிய தீபகற்பத்தில் பதற்றத்தை அதிகரித்துள்ளது.

## ட்ரம்ப் விரும்பினாலும் கூட ஈரான் போர் விரைவில் முடிவுக்கு வருவது சாத்தியம் இல்லையா?



**வாஷிங்டன், மார்ச் 13:**

"ஈரான் போர் விரைவில் முடிவுக்கு வரும்" என்று அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் கூறியுள்ளார். அவரது இந்த 'விருப்பம்' இப்போதைக்கு சாத்தியமில்லை என்பதையே போர் நிலவரங்கள் காட்டுகின்றன. அதன் பின்புலத்தை சற்றே தெளிவாகப் பார்ப்போம்.

ரஷ்யா - உக்ரைன் போர் வந்தது, இஸ்ரேல் - பாலஸ்தீன் போர் வந்தது, இந்தியா - பாகிஸ்தான் மோதல் வந்தது. ஆனால் எதுவும் இத்தகைய பாதிப்பை உலகின் குறுக்கும் நெடுக்கும் ஏற்படுத்தவில்லை. ஈரான் மீதான அமெரிக்கா - இஸ்ரேல் கூட்டு தாக்குதல் எல்லா போர் செய்திகளைப் போலவே அணுகப்பட்ட நிலையில், இது தற்போது ராணுவ பலத்தை நிரூபித்தைத் தாண்டி பொருளாதாரப் போராக அதுவும் உலகையே பீடிக்கும் பாதிப்பாக மாறிவருகிறது.

அமெரிக்க அதிபர் ட்ரம்ப்பிடம் உலகத் தலைவர்கள் பலரும் இந்தப் போரை முடிவுக்குக் கொண்டுவரும்படி அழுத்தம் தரவதாக செய்திகள் வருகின்றன. இந்த நிலையில் அக்சியாஸ் ஊடகத்துக்கு ட்ரம்ப் அளித்தப் பேட்டியில், "ஈரான் போர் விரைவில் முடிவுக்கு வரும். ஏனெனில், ஈரானில் அமெரிக்க ராணுவம் குறிவைத்து குண்டுவீசி அழிப்பதற்கு என்று எதுவும் இல்லை. எந்த நேரத்திலும் முடிவுக்குக் கொண்டுவர நான் விரும்புகிறேன். போர் முடிவுக்கு வரும்.

இந்தப் போர் இதுவரை சிறப்பாக நடந்துள்ளது. விளைவுகள் திட்டமிட்டதைவிட அதிகமாக உள்ளது. நாங்கள் 6 வார காலத்தில் எந்த அளவிலான அழிவை ஏற்படுத்த நினைத்தோமோ அதைவிட அதிகமாகவே நிகழ்த்திவிட்டோம்" என்று கூறியுள்ளார்.

அதேவேளையில், இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சர் காட்ஸ், "இந்தப் போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான காலக்கெடு என்று எதுவும் இல்லை. தேவைப்படும் வரை ஆபரேஷன் தொடரும். எங்களது இலக்குகளை எட்டும்வரை இது தொடரும்" என்று கூறியுள்ளதாக 'தி டைம்ஸ் ஆஃப் இஸ்ரேல்' ஊடகம் தெரிவித்துள்ளது.

## அமெரிக்க தக்குதலுக்கு பதிலடியாக வங்கிகளை தாக்க ஈரான் திட்டம்



**வாஷிங்டன், மார்ச் 13:**

இஸ்ரேலும் அமெரிக்காவும் இணைந்து ஈரான் மீது தாக்குதல் நடத்தின. இதைத் தொடர்ந்து, வளைகுடா நாடுகளில் அமைந்துள்ள அமெரிக்க படைத்தலங்கள் மீது ஈரான் ட்ரோன்கள் மூலம் தாக்குதல் நடத்தி வருகிறது.

அந்த வகையில், துபாய் நகரில் உள்ள சர்வதேச விமான நிலையம் அருகே நேற்று ட்ரோன்கள் விழுந்ததில் ஒரு இந்தியர், கானா நாட்டைச் சேர்ந்த 2 பேர், வங்கதேசத்தைச் சேர்ந்த ஒருவர் என 4 பேர் காயமடைந்தனர். இதில் இந்தியருக்கு நடுத்தர அளவிலான காயம் ஏற்பட்டதாகவும் மற்ற 3 பேருக்கு லேசான காயம் ஏற்பட்டதாகவும் துபாய் ஊடகம் தெரிவித்துள்ளது.

இச்சம்பவத்தைத்தொடர்ந்து விமானப் போக்குவரத்து வழக்கம் போல் இயங்கி வருவதாக எக்ஸ் தளத்தில் வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வங்கிகளை தாக்க ஈரான் திட்டம்: ஈரானில் ராணுவ மையங்கள் மற்றும் அரசு கட்டிடங்கள் மீது தாக்குதல் நடத்தி வந்த அமெரிக்க மற்றும் இஸ்ரேல் படைகள், ஈரான் பொருளாதாரத்தை முடக்க டெஹ்ரானின் உள்ள வங்கி ஒன்றின் மீது வான்வழித் தாக்குதல் நடத்தியது. இதில் வங்கி ஊழியர்கள் சிலர் கொல்லப்பட்டனர்.

இதுகுறித்து ஈரான் அரசின் செய்தித் தொடர்பாளர் கூறும்போது, "எங்கள் வங்கி மீது தாக்குதல் நடத்தியற்கு பதிலடியாக, மேற்கு ஆசியாவில் அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் தொடர்புடைய வங்கிகள், பொருளாதார மையங்கள் ஆகியவற்றை குறிவைத்து ஈரான் தாக்குதல் நடத்தும்" என்றார்.

இதன் காரணமாக சவுதி அரேபியா, துபாய், பஹ்ரைன், ஐக்கிய அரபு அமீரகம் உள்ளிட்ட வளைகுடா நாடுகளில் உள்ள அமெரிக்க வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் ஆகியவற்றின் மீது தாக்குதல் நடத்தப்படலாம் என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது.

## இந்தியாவின் எரிவாயு தேவையை பூர்த்தி செய்யத் தயார்: கனடா பிரதமர் மார்க் கார்னி தகவல்

**டொரான்டோ, மார்ச் 13:**

கனடா பிரதமர் மார்க் கார்னி எக்ஸ் சமூக வலைதளத்தில் கூறியிருப்பதாவது: வரும் 2040-ம் ஆண்டுக்குள் இந்தியாவின் எரிவாயு தேவை இருமடங்காக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

எரிசக்தி வல்லரசு என்ற முறையில் இந்தியாவின் அதிகரித்து வரும் எரிவாயு தேவையை பூர்த்தி செய்ய கனடா தயாராக உள்ளது. உலகின் மிகக் குறைந்த கார்பன் வெளியேற்றம் கொண்ட மற்றும் நம்பகமான முறையில் உற்பத்தி செய்யப்படும் திரவ இயற்கை எரிவாயுவை (எல்என்ஜி) வழங்க தயாராக உள்ளோம்.

ஆசியா மற்றும் ஐரோப்பா முழுவதும் வெப்பமாக்கல், மின்சாரம் மற்றும் தொழில்துறை பயன்பாட்டுக்கு இது பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது. மத்திய கிழக்கு நாடுகளில் நிலவும் போர்ச்சூழல், கத்தாரில் இருந்து வரும் எரிவாயு விநியோகத்தைப் பாதித்துள்ளதால், அதன் விலை உயர்ந்திருப்பதுடன், விநியோகத்திலும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

வரும் 2030-ம் ஆண்டு இறுதிக்குள் தனது புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திறனை 500 ஜிகாவாட்டாக அதிகரிக்கவும், தங்கள் நாட்டின் முதன்மை எரிசக்தி கலவையில் எல்என்ஜி-யின் பங்கை கிட்டத்தட்ட இருமடங்காக உயர்த்தவும் இந்தியா திட்டமிட்டுள்ளது. இதற்கு கனடா உறுதுணையாக இருக்கும். உற்பத்தி, தூய்மையான தொழில்நுட்பம் மற்றும் அணுசக்தி திட்டங்களுக்காக இந்தியா முக்கியமான தாதுப் பொருட்களைத் தேடும் வேளையில், கனடாவின் வளங்கள் மற்றும் முன்னணி நிறுவனங்கள் ஒரு சிறந்த கூட்டாளியாக அமையும். உலகில் உள்ள சுரங்க நிறுவனங்களில் 40 சதவீதம் கனடாவில் பட்டியலிடப்பட்டுள்ளன. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

கச்சா எண்ணெய், எல்பிஜி, எல்என்ஜி அல்லது யுரேனியம் என கனடா எதை வழங்கினாலும் வாங்க இந்தியா தயாராக இருப்பதாக கடந்த மாதம் தகவல் வெளியானது. அதே நேரம், வேகமாக வளர்ந்து வரும் இந்தியப் பொருளாதாரத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்ய, ஒப்புதல் நடைமுறைகளை கனடா எளிதாக்க வேண்டும் என்றும் இந்தியா வலியுறுத்தியது குறிப்பிடத்தக்கது.

ஈரான் - இஸ்ரேல் போர், மத்திய கிழக்கு நாடுகளின் நிலைமை, ஹார்முஸ் ஜலசந்தி மூடல் மற்றும் எரிசக்தி விலை உயர்வு குறித்து பிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மேக்ரானுடன் ஆலோசித்த பிறகு, கார்னி இந்த வீடியோவைப் பகிர்ந்துள்ளார்.

## இந்தியாவுக்கு கச்சா எண்ணெய் ஏற்றி வந்த கப்பல் மீது மர்ம ஏவுகணைத் தாக்குதல்



**துபாய், மார்ச் 13:**

அணு ஆயுத தடை ஒப்பந்தத்தில் ஈரான் கையெழுத்திட மறுத்ததால், அந்நாடு மீது அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் ஆகிய நாடுகள் போர் தொடுத்துள்ளன. இதில் ஈரான் உச்ச தலைவராக இருந்த அயத்துல்லா அலி காமேனி உட்பட 1,500-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். இதையடுத்து, இஸ்ரேல் மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள அமெரிக்க ராணுவ முகாம்கள் மற்றும் விமான நிலையங்கள் மீது ஈரான் ஏவுகணை மற்றும் ட்ரோன் தாக்குதல் நடத்தி வருகிறது. வளைகுடா நாடுகளில் இருந்து ஹார்முஸ் ஜல சந்தி வழியாக, கச்சா எண்ணெய் கொண்டு செல்லும் கப்பல்கள் மீது தாக்குதல் நடத்துவோம் என ஈரான் கூறியிருந்தது. இந்த ஹார்முஸ் ஜலசந்தி பகுதி எண்ணெய் கப்பல் போக்குவரத்துக்கு மிகமிக முக்கியமானதாக உள்ளது. இந்தப் பகுதியில் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதால், எண்ணெய் கப்பல்கள் போக்குவரத்து ஸ்தம்பித்துள்ளது. இதனால் பல நாடுகளில் பெட்ரோல், டீசல், காஸ் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

இதற்கிடையில், ஹார்முஸ் ஜலசந்தி பகுதியில் கடல் கண்ணிவெடிகளை வைக்கும் பணியிலும் ஈரான் ஈடுபட்டது. இதனால், ஈரான் போர்க் கப்பல்கள் மற்றும் கண்ணிவெடி வைக்கும் பணியில் ஈடுபட்ட கப்பல்களைத் தாக்கி மூழ்கடித்ததாக அமெரிக்கா தெரிவித்தது. ஈரான் போர் காரணமாக வளைகுடா நாடுகளில் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

இந்த பதற்றமான சூழ்நிலையில் ஐக்கிய அரபு அமீரகத்தின் கலிபா துறைமுகத்தில் இருந்து தாய்லாந்தை சேர்ந்த 'மயூரி நாரி' என்ற எண்ணெய்க் கப்பலில் இந்தியாவுக்காக 30,000 டன்கள் கச்சா எண்ணெய் அனுப்பப்பட்டது. இந்த கப்பல் குஜராத்தின் கண்டலா துறைமுகத்துக்கு வர வேண்டும்.

ஹார்முஸ் ஜலசந்தி பகுதியில் வந்தபோது, இந்த கப்பல் மீது மர்மமான முறையில் ஏவுகணைத் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் அந்த கப்பல் தீப்பற்றி எரிந்தது. உடனே கப்பலில் இருந்த 20 ஊழியர்கள் மிதவை மூலம் கடலில் குதித்து தப்பினர். அவர்களை ஓமன் கடற்படை காப்பாற்றி மீட்புப் பணியில் ஈடுபட்டது. கப்பலில் இருந்த 3 ஊழியர்களைக் காணவில்லை. அவர்களைத் தேடும் பணி நடைபெறுகிறது. 178 மீட்டர் நீளம் கொண்ட பிரம்மாண்ட ஆயில் டேங்கர் கப்பலில் ஏற்பட்ட தீ அணைக்கப்பட்டதாக ஓமன் கடற்படை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## வங்காளதேச நாடாளுமன்றத்திற்கு போட்டியின்றி சபாநாயகர், துணை சபாநாயகர் தேர்வு

**டாக்கா, மார்ச் 13:**

வங்காளதேசத்தில் 2024-ம் ஆண்டு நடந்த மாணவர் போராட்டம் தொடர்ச்சியாக ஷேக் ஹசீனா பிரதமர் பதவியில் இருந்து விலகி நாட்டை விட்டு வெளியேறினார். அவர், இந்தியாவிற்கு வந்து தஞ்சமடைந்து உள்ளார். இதனை தொடர்ந்து, அந்நாட்டில் 13-வது தேசிய நாடாளுமன்றத்திற்கான பொது தேர்தல் பிப்ரவரி 12-ந்தேதி நடைபெற்றது. அதன்பின்னர் வாக்கு எண்ணிக்கையும் உடனடியாக நடந்து முடிவுகள் வெளியிடப்பட்டன.

இதில், வங்காளதேச தேசியவாத கட்சி வேட்பாளர்கள் 209 இடங்களில் வெற்றி பெற்றனர். அக்கட்சி தலைமையிலான கூட்டணி, ஆட்சியமைக்க தேவையான அளவுக்கும் கூடுதலாக, மொத்தம் 212 இடங்களை கைப்பற்றியது. ஜமாத்-இ-இஸ்லாமி கட்சி 68 இடங்களை வென்றது. முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனாவின் அவாமி லீக் கட்சி தேர்தலில் போட்டியிட தடை விதிக்கப்பட்டு இருந்தது. இதனை தொடர்ந்து, வங்காளதேச தேசியவாத கட்சியை சேர்ந்த தாரிக் ரஹ்மான் புதிய பிரதமராக கடந்த பிப்ரவரி 17-ந்தேதி பதவியேற்று கொண்டார். இதற்காக, வங்காளதேச தேசியவாத கட்சியின் உறுப்பினர்கள் சேர்ந்து தாரிக்கை நாடாளுமன்ற குழு தலைவராக தேர்ந்தெடுத்தனர். இதன்பின்பு, அவருக்கு வங்காளதேச ஜனாதிபதி முகமது சஹாபுதீன் பதவி பிரமாணம் செய்து வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில் பங்கேற்க பல்வேறு நாடுகளை சேர்ந்த தலைவர்களுக்கும் அழைப்பு விடப்பட்டது. அந்நிகழ்ச்சியில் இந்தியா சார்பில், மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லா கலந்து கொண்டார். இந்த சூழலில், வங்காளதேச நாடாளுமன்றத்திற்கு சபாநாயகர் மற்றும் துணை சபாநாயகர் போட்டியின்றி இன்று தேர்வு செய்யப்பட்டனர். இதில், சபாநாயகராக ஹபிசுதீன் அகமது தேர்ந்தெடுக்கப்பட்டார். ஓய்வு பெற்ற ராணுவ அதிகாரியான அகமது சுதந்திர போராட்ட வீரரும் ஆவார்.

## போரை முடிவுக்கு கொண்டுவர ஈரான் முன்வைக்கும் 3 நிபந்தனைகள்




**தெஹ்ரான், மார்ச் 13:**

போரை முடிவுக்குக் கொண்டு வர மூன்று நிபந்தனைகளை விதித்துள்ள ஈரான் அதிபர் மசூத் பெசெஷ்கியான், நிபந்தனைகள் ஏற்கப்பட்டால் மட்டுமே போர் முடிவுக்கு வரும் என தெரிவித்துள்ளார்.

ஈரான் போர் விரைவில் முடிவுக்கு வரும் என்று அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் கூறிய நிலையில், போரை முடிவுக்குக் கொண்டு வர ஈரான் மூன்று நிபந்தனைகளை விதித்துள்ளது. இதனைத் தெரிவித்துள்ள ஈரான் அதிபர் மசூத் பெசெஷ்கியான், "போரை முடிவுக்குக் கொண்டு வர வேண்டுமானால், மூன்று நிபந்தனைகள் நிறைவேற்றப்பட வேண்டும்.

ஒன்று, ஈரானுக்கு உள்ள உரிமைகளை அங்கீகரிக்க வேண்டும், இரண்டாவது, ஏற்பட்ட சேதங்களுக்கு இழப்பீடு வழங்க வேண்டும், மூன்றாவது எதிர்காலத்தில் மீண்டும் தாக்குதல் நடத்தப்படாது என்ற உறுதிமொழி வழங்க வேண்டும்.

அமைதியை ஏற்படுத்துவதில் ஈரான் உறுதியாக உள்ளது. என்றபோதிலும், அமெரிக்காவும் இஸ்ரேலும் இந்த கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டால் மட்டுமே இந்த மோதல் முடிவுக்கு வரும். ஏனெனில், அமெரிக்காவும் இஸ்ரேலும் நடத்திய தாக்குதல்கள் காரணமாகவே இந்த போர் தொடங்கியது.

ஈரானின் பாதுகாப்புக்கு வலுவான சர்வதேச உத்தரவாதங்கள் கிடைத்தால் மட்டுமே போர் முடியும்" என்று தெரிவித்துள்ளார்.

முன்னதாக, அக்சியாஸ் ஊடகத்துக்கு டொனால்ட் ட்ரம்ப் அளித்தப் பேட்டியில், "ஈரான் போர் விரைவில் முடிவுக்கு வரும். ஏனெனில், ஈரானில் அமெரிக்க ராணுவம் குறிவைத்து குண்டுவீசி அழிப்பதற்கு என்று எதுவும் இல்லை. எந்த நேரத்திலும் முடிவுக்குக் கொண்டுவர நான் விரும்புகிறேன். போர் முடிவுக்கு வரும். இந்தப் போர் இதுவரை சிறப்பாக நடந்துள்ளது. விளைவுகள் திட்டமிட்டதைவிட அதிகமாக உள்ளது. நாங்கள் 6 வார காலத்தில் எந்த அளவிலான அழிவை ஏற்படுத்த நினைத்தோமோ அதைவிட அதிகமாகவே நிகழ்த்திவிட்டோம்" என்று கூறி இருந்தார். இந்தப் போர் காரணமாக ஈரான் உச்ச தலைவர் அயத்துல்லா அலி கமேனி உட்பட, ஏராளமானோர் உயிரிழந்தனர். இந்த போர், அதிக அளவிலான பொருட்சேதத்தை இருதரப்புக்கும் ஏற்படுத்தியது. அதோடு, ஹோர்முஸ் ஜலசந்தியில் ஈரான் கட்டுப்பாடுகளை விதித்தால், பெட்ரோல், டீசல், இயற்கை எரிவாயு ஆகியவற்றின் விலை சர்வதேச அளவில் உயர்ந்தது.

மேலும், அவற்றுக்கு தட்டுப்பாடுகளும் அதிகரிக்கத் தொடங்கின. இந்தியாவில், வணிக பயன்பாட்டுக்கான எல்பிஜி சிலிண்டர் விலை உயர்த்தப்பட்டதோடு, அவற்றுக்கான தட்டுப்பாடும் அதிகரித்ததால் பலரும் பாதிக்கப்பட்டனர்.



# ஹோர்முஸ் நீரிணையைக் கடந்து இந்தியா வந்த முதல் எண்ணெய்க் கப்பல்!

## தமிழக ஆளுநர் பொறுப்பேற்றார் ராஜேந்திர ஆர்லேகர்!




## எரிபொருள் தட்டுப்பாடு அச்சம் வேண்டாம்: முதல்வர் ஸ்டாலின் வேண்டுகோள்

## போலீஸ் அதிகாரி என மிரட்டி ஓய்வுபெற்ற வங்கி அதிகாரியிடம் ரூ.1 கோடி பறிப்பு

## போரை முடிவுக்கு கொண்டுவர ஈரான் முன்வைக்கும் 3 நிபந்தனைகள்

தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com

Tamilnaduepaper

சென்னை 13.03.2026 வெள்ளிக்கிழமை இலவச இ-பேப்பர்